REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூன் 13 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY தினகரன்

வரு. 92 இல. 140 | Thursday 13, June, 2024 | 16 பக்கங்கள் | 50/-




# ஈஸ்டர் தாக்குதல்: SIS, CNI புலனாய்வு அறிக்கைகளை ஆராய விடேச குழு

## செப்டெம்பர் 15 க்குள் அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

### ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.என்.ஜே.டி. அல்விஸ் தலைமையில் ஜனாதிபதியால் நியமனம்

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான முழுமையான புலனாய்வுத் தகவல் குறித்து அரச புலனாய்வுச் சேவை (SIS), தேசிய புலனாய்வு பிரதானி (CNI) மற்றும் ஏனைய அதிகாரிகள் முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பில், விசாரணை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.என்.ஜே.டி. அல்விஸ் தலைமையிலான குழுவை நியமித்துள்ளார்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.என்.ஜே.டி. அல்விஸ் தலைமையிலான இந்தக் குழுவில், சக உறுப்பினர்களாக இலங்கை நிர்வாகச் சேவையின் விசேட தரநிலை அதிகாரியான கே.என்.கே. சோமரத்ன மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி டபிள்யூ. எம்.ஏ.என். நிஷான் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். இந்த விசாரணைக் குழுவின் செயலாளராக ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவி ஆலோசகர், சாரதாஞ்சலி மனோகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

2019 ஏப்ரல் 21இல், நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பான முழுமையான புலனாய்வுத் தகவல் குறித்து அரச புலனாய்வுச் சேவை (SIS), தேசிய புலனாய்வு பிரதானி (CNI) மற்றும் ஏனைய அதிகாரிகள் முன்னெடுத்த நடவடிக்கைகள் எவை? இதற்கு அமைவாக போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா? என்பது குறித்தும் ஆராயப்படவுள்ளது.

வவுணதீவில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் எல்.ரி.ரி.ஈ அமைப்பினரால் கொல்லப்பட்டனர். இதை இராணுவ புலனாய்வுச் சபை (DMI), குற்றப் புலனாய்வு பிரிவு (CID) என்பன நான்கு மாதங்களாக நம்பியிருந்தன. இதற்கான காரணம் என்னவென்றும், இச்சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவின் விசாரணைகளில் தெரியவந்த தகவல்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் குறித்த விசாரணை அறிக்கை அல்லது அது தொடர்பிலான விசாரணை ஆணைக் குழுக்களால் 2021 ஜனவரி 31 ஆம் திகதி வழங்கப்பட்ட இறுதி அறிக்கையின் ஊடாக 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்படவிருந்த குண்டுத் தாக்குதல் தொடர்பில், அரச புலனாய்வு பிரிவு (SIS), தேசிய புலனாய்வுப் பிரதானி (CNI) மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு இந்திய புலனாய்வுப் பிரிவினர் முழுமையான முன்னோடி அறிக்கையை

06

# இன்று கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருவிழா





கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா இன்று (13) வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இன்று காலை திருவிழா திருப்பலி பூசைகள் மூன்று

06

## இன்றைய தினகரனுடன் புனித அந்தோனியாரின் திருவுருவப் படம் இணைப்பு

அரசாங்கத்தின் பயணத்தை மாற்றினால் மீண்டும் வரிசை யுகம் வரும்

# எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் எதிர்காலத்தை தீர்மானிக்கும்

## தனிப்பட்ட வெற்றி, தோல்வி அன்றி நாட்டின் வெற்றி தோல்வியே தீர்மானம்



நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தனது தனிப்பட்ட வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்படாதென்றும் மாறாக நாட்டின் வெற்றி, தோல்வியே தீர்மானிக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வோட்டர்ஸ் எட்ஜில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்ததாவது:

அரசியல் மேடைகளில் வாக்குறுதிகளை வழங்கும் குழுவினரிடம் நாட்டின் முன்னேற்றத்துக்கான எந்தவொரு நடைமுறைச் சாத்தியமான வேலைத் திட்டமும் இல்லை. வேட்பாளர்களை பார்த்து தீர்மானம் எடுக்கும் கடந்த கால அரசியல் தவறுகளை மீண்டும் செய்ய வேண்டாம்.

நாட்டின் பொருளாதார மறுசீரமைப்புக்காக சமர்பிக்கப்பட்டிருக்கும் சட்டமூலத்தை நிறைவேற்ற ஆதரவளியுங்கள். நாட்டின் முன்னேற்றுத்துக்கு வேறு திட்டங்களை எவரும் வைத்திருந்தால் அவற்றை வெளிப்படுத்துங்கள். துறைசார் மேற்பார்வை குழு

06

# அடுத்து வரும் சில வாரங்களில் 15 மிக முக்கியமான சட்டங்கள்

## விரைவில் நிறைவேற்றப்படும் என்கிறார் அமைச்சர்



நாட்டில் அடுத்த சில வாரங்களில் சுமார் 15 மிக முக்கியமான சட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில்,

06

# காசாவில் ஆதரவற்ற மக்களை அழிவிலிருந்து மீட்க வேண்டும்

## தெற்குப் பிராந்தியம் உறுதி செய்வது அவசியம்



காசாவில் ஆதரவற்ற மற்றும் பாதுகாப்பற்ற நிலையிலுள்ள மக்களை முழு அழிவிலிருந்து மீட்பதற்கு தெற்குப் பிராந்தியமும் சர்வதேசத்துடன் இணைந்து உறுதிசெய்ய வேண்டும் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

ரஷ்யாவின் நிஸ்னி நொவ்கோரோடில் நேற்று (12) நடைபெற்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலிசப்ரி

06

IMF கடன் ஒத்துழைப்பு வேலைத் திட்டம்

# கடன் மறுசீரமைப்புகளுக்கு முன்னுரிமை செயற்பாடு

லோரன்ஸ் செல்வநாயகம்




சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்புக்கான வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பது மற்றும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முழுமைப்படுத்துதல் ஆகியவற்றுக்கு அரசாங்கம் முன்னுரிமையளித்து செயற்படுவதாக, மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கலாநிதி சந்ரனாத் அமரசேக்கர தெரிவித்தார்.

அரசாங்கத்தின் திட்டமிட்ட செயற்பாடுகளால் 2023இல், நாட்டின் பொருளாதார வளர்ச்சி 2.3 வீதமாக காணப்பட்டது.

06

# A/L விடைத்தாள் மதிப்பீடு செய்வோரின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படும்

லோரன்ஸ் செல்வநாயகம்

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் ஆசிரியர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை அதிகரிப்பது குறித்து, அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இக்கொடுப்பனவுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கைகள், எதிர்வரும் (14) கல்வி அமைச்சுக்கு கிடைக்கவுள்ளது.இது கிடைத்ததும் அடுத்து வரும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாகவும் கல்வி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் தீர்மானத்தின்படியே இவர்களின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை - மலேஷியாவிடையே வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்து

## பேச்சுகளை ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி



இலங்கை மலேஷிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான மேலதிக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீளப் பெறுவதற்காக, ஏற்றுமதியை இலக்காகக்கொண்ட நேரடி வெளிநாட்டு முதலீட்டை ஈர்த்தல்,

06

# 66 மெற்றிக் தொன் உளுந்து சுங்கத்தினால் பறிமுதல்

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ள ஒரு தொகை உளுந்தை சுங்கத்திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சட்டவிரோதமான பொருட்களுடன் சுங்கத் திணைக்களத்தின் மத்திய சரக்கு ஆய்வுப் பிரிவினரே, இதனை நேற்று கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவிருந்து மூன்று கொள்கலன்களில் கொண்டு வரப்பட்ட 66 மெற்றிக் தொன் உளுந்து இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

06

# பிபில - மஹியங்கனை வீதியில் பஸ், வேன் மோதி கோர விபத்து

## தம்பதிகள் உட்பட மூவர் பலி, ஐவர் காயம்




பிபில மஹியங்கனை வீதியில் வேகம என்ற இடத்தில் நேற்று (12) இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்தனர்.

தனியார் பஸ்ஸுடன், வேன் மோதி இவ்விபத்து நிகழ்ந்தது. இதில் வேனில் பயணித்த தம்பதியினர் உட்பட மூவர் உயிரிழந்ததுடன் மேலும் ஐவர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

06

# மைத்திரிக்கு எதிரான தடை உத்தரவு மீண்டும் நீடிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்கும் வகையில், பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை எதிர்வரும் (19) வரை நீடிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று (12) உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால், இந்த மனு மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது. இம் மனு நேற்று (12) கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, தடை உத்தரவு மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் தன்மை உறுதி

# மக்கள் அச்சமின்றி நீரை அருந்தலாம்


தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படும் நீர் சுத்தமானது எனவும், பொதுமக்கள் அச்சமின்றி நீரைப் பயன்படுத்த முடியுமெனவும் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

சகல நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலும் நீரின் சுகாதாரத் தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில், அங்கு தொடர்ந்து

06

# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி பொது வேட்பாளரையே ஆதரிக்கும்

## தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரவிடம் சித்தார்த்தன்



ஜனாதிபதித் தேர்தலில், பொதுவேட்பாளருக்கே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆதரவு வழங்குமென அனுரகுமார திசாநாயக்கவிடம் தெரிவித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அனுரகுமார திசாநாயக்கவுடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த சித்தார்த்தன் எம்.பி, மேலும் தெரிவிக்கையில்,

06

# முன்பள்ளி ஆசிரியர்களின் மாதாந்த சம்பளம் அதிகரிப்பு

## ரூ. 5000 வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் 2,500 கொடுப்பனவை 5,000 வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை இதற்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற அரசாங்க செலவீனங்கள் தொடர்பான அமைச்சரவை உபகுழுவில், சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க முன்வைத்த யோசனை குறித்து ஆராய்ந்து, நாட்டில் உள்ள அனைத்து

06

# பெருந்தோட்ட மக்களுக்கான Happy Estate திட்டம் ஆரம்பம்

பெருந்தோட்ட மக்களை ஆரோக்கியமான மனிதர்களாக வளர்ச்சியடையச் செய்வதை இலக்காக்கொண்டு "Happy Estate" (மகிழ்ச்சியான தோட்டம்) என்ற வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கேகாலை மாவட்டத்தை கேந்திரமாகக்கொண்டு சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால தலைமையில் நேற்று (12) இத்திட்டம் ஆரம்பமானது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் இவ்வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. பெருந்தோட்ட மக்களின் சுகாதார பிரச்சினைகள் கண்டறியப்பட்டு உடல், மன,

06

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...



114 Main St, Colombo 11,
0112 320 009

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
2024 ஜூன் 13 வியாழக்கிழமை

தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.31 |
| லுஹர் | 12.11 |
| அஸர் | 03.39 |
| மஃரிப் | 06.26 |
| இஷா | 07.43 |

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் வைகாசி 31

ராகுகாலம் : பகல் : 1.22 - 2.52வரை
சுபநேரம் : மாலை : 7.22 - 8.52வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

### நினைவேந்தல் நிகழ்வுகள் ஆராய்வு

# நிபுணர் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



நாட்டில் ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டுக் கலவரம் காரணமாக உயிரிழந்தவர்களை நினைவு கூருவது குறித்து, ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

சிரேஷ்ட பேராசிரியர் ஜகத் வீரசிங்க, கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர, யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் டி. சனாதனன், கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் பர்ஸானா ஹனீபா, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் துஷாரி சூரியாராச்சி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மஹிந்த விதானராச்சி ஆகியோர் உள்ளடங்கிய குழுவொன்று இதற்காக நியமிக்கப்பட்டது.

22.05.2023 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இக்குழுவை நியமித்தார்.

1983-2009 காலகட்டத்தில் இலங்கையில் நடந்த ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டுக் கலவரங்கள் என்பவற்றினால் உயிரிழந்த பொதுமக்கள், ஆயுதப்படை உறுப்பினர்கள், பொலிஸார், முன்னாள் போராளிகள் உட்பட அனைவரையும் நினைவுகூரும் வகையில், ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தின் அடையாளமாக நினைவிடமொன்றை அமைப்பது குறித்து இந்தக் குழு ஆய்வு செய்தது.

இதற்காக, நிபுணர் குழு கடந்த நாட்களில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெறும் நோக்கில் அமர்வுகளை நடத்தியதுடன், ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான நிபுணர்களுடன் ஆலோசனைகளையும் நடத்தியது.

பங்குபற்றிய மக்களுக்கு தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்கத்திற்கான தமது அபிலாஷைகள், யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

நினைவேந்தல் செய்வதற்கான மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று குழு வலியுறுத்தியதோடு பல்வேறு குழுக்களும் தனி நபர்களும் நினைவேந்தல் மற்றும் நல்லிணக்க நிகழ்வுகளை வெவ்வேறு வழிகளில் முன்னெடுப்பதையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

வளமான அறிவுக் கட்டமைப்பையே இது வெளிப்படுத்துவதாக சுட்டிக்காட்டியுள்ள நிபுணர் குழு, நாட்டின் மோதல்கள் தொடர்பான கடந்த காலத்தைப் பற்றி அறிக்கையிடவோ, கருத்துத் தெரிவிக்கவோ அல்லது வேறுவிதமாகக் கையாளும் முயற்சியின் போது இந்தப் பங்களிப்புகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

# சார்க் பொதுச் செயலாளர் ஜனாதிபதி நேற்று சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சார்க் அமைப்பின் பொதுச் செயலாளர் கோலம் சர்வார்க்கும் (Golam Sarwar) இடையிலான சந்திப்பொன்று, நேற்று (12) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சார்க் நாடுகளுக்கிடையிலான பல்வேறு திட்டங்கள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில், இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் பாரபட்சமின்றி தலையீடு செய்யுமாறு சார்க் பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

இலங்கையில் செயற்படுத்தப்படும் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் குறித்தும் இதில், கலந்துரையாடப்பட்டது. இதற்கு சார்க் நாடுகளின் ஆதரவை பெறுவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை சார்க் கலாசார மையத்தை நவீன க லைகளுக்காக மேம்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் இச்ந்திப்பில் இணைந்து கொண்டனர்.

# ரஷ்ய, இலங்கை உறவுகளின் பலம் பொருளாதார, விஞ்ஞான வளர்ச்சிக்கு உதவும்



வர்த்தகம், பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களில் இலங்கை – ரஷ்யாவுக்கு இடையிலான உறவுகள் பலப்படுத்தப்படுமென

பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ரஷ்ய தேசிய தினத்தை முன்னிட்டு ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். சகார்யனை நேற்று பிரதமர் தினேஷ் சந்தித்து பேசினார்.

இதன்போது ரஷ்ய தேசிய தினத்தை முன்னிட்டு ரஷ்ய தூதுவருக்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.இதில் பிரதமர் தெரிவித்ததாவது:

ரஷ்யா இந்நாட்டின் சிறப்பான நட்பு நாடு.இரு நாடுகளின் உறவுகளை வலுப்படுத்த தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது. வர்த்தகம் மற்றும் பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான ரஷ்யஇலங்கை அரசாங்கங்களுக்கு இடையேயான செயற்பாடுகள் திருப்தியில் உள்ளன.வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்களால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இலங்கை முப்படையின் ஓய்வுபெற்ற உறுப்பினர்களின் பிரச்சினை குறித்து பிரதமரும் தூதுவரும் விரிவாக கலந்துரையாடினர். வர்த்தகம், முதலீடு, கல்வி, சுற்றுலா மற்றும் எரிசக்தி உள்ளிட்ட பல துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான வழிகள் குறித்தும் இவர்கள் ஆராய்ந்தனர்.

# பட்ஜட் தயாரிப்பதற்கு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படவில்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில்லை என்று, எவரும் அமைச்சரவையில் அறிவிக்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலே, அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எந்த ஒரு சிறு விடயங்கள் தொடர்பிலும் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சரவை கூட்டங்களில் அவ்வாறான மாற்றங்களுக்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காகவே, அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இதைச் சுட்டிக் காட்டிய அமைச்சர், அந்த வகையில் வரவு செலவுத் திட்டம் தயாரிப்பு தொடர்பில் அவ்வாறான அனுமதி பெற்றுக் கொள்ளப்படவில்லை என்றும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

### தீர்வை வரி கொள்கையை நடைமுறைப்படுத்தல்

# ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

2025 ஜனவரி மாதம் முதல் மூன்று கட்டங்களாக தேசிய தீர்வை வரி கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சுங்க கட்டளைச் சட்டத்தின்

120 வது சரத்திற்கு இணங்க இந்த வரி கொள்கையை வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டில் வர்த்தக மற்றும் முதலீடு தொடர்பில் போட்டித் தன்மையுடனான சூழலை முன்னெடுத்து செல்வது தொடர்பில் தெளிவான தீர்வை வரி கொள்கையை நடைமுறைப்படுத்துவது முக்கியமானதாகும். அந்த வகையில் கடந்த அரசாங்கங்களினால் அடுத்தடுத்து கொண்டுவரப்பட்டுள்ள பல்வேறு கொள்கைகளுக்கு இணங்க தீர்வை வரி கொள்கையை திருத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை காரணமாக நாட்டின் முதலீட்டுக்கான போட்டித் தன்மைக்கு அழுத்தம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.

அந்த நிலையை கவனத்திற்கொண்டு நிதி, பொருளாதார மேம்பாடு மற்றும் தேசிய கொள்கைகளுக்கான அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கிணங்க தேசிய தீர்வை வரி கொள்கையை தயாரிப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவொன்றையும் நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# ஹோமாகம தர்ம ரஷ்மி பொசன் வலயம் 21, 22, 23 ஆம் திகதிகளில் ஏற்பாடு

### லேக்ஹவுஸ், ஐ.ரி.என், ரூபவாஹினி அனுசரணை

LAKE HOUSE

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் ஹோமாகம தர்ம ரஷ்மி பொசன் பண்டிகை இந்த வருடம் 21, 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டு தியகம, பிடிபன, தாம்பே, மீகொட, கொடகம, பனாகொட, ஹோமாகம ஆகியவற்றை இணைத்து 13 கிலோமீற்றர் வரையான பகுதி பொசன் வலயமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மற்றும் தஹம் பாசல , (ஞாயிறு அற நெறி) மாணவ, மாணவியர்களுக்கு மட்டுமின்றி பெரியவர்களுக்கும் பஹன் கூடு (விளக்கு) போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பொசன் வலயத்திற்கான அச்சு மற்றும் டிஜிட்டல் அனுசரனையை லேக்ஹவுஸ் நிறுவனம் வழங்குகின்றது. இலத்திரனியல் ஊடக அனுசரணையை சுயாதீன தொலைக்காட்சியும் மற்றும் ரூபவாஹினினியும் வழங்குகின்றன.

இந்த போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு 40 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஹோமாகம சாசன

06

# பெண் கைது

இஸ்ரேலில் வேலைவாய்ப்பை தருவதாகக் கூறி சுமார் 05 கோடி ரூபாவை மோசடி செய்த பெண் கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வுத்

06

# ஊடகவியலாளரைத் தாக்கிய அதிகாரிகள் நீதிமன்றில் கைகூப்பி மன்னிப்புக் கோரினர்

இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்துக்குள் (தொப்பி) தலையங்கி அணிதிருந்த ஊடகவியலாளர் ஒருவரைத் தாக்கிய அதிகாரிகள் நீதிமன்றில் கைகூப்பி மன்னிப்பு கோரியுள்ளனர்.

பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் குருவிட்ட இராணுவ முகாம் அதிகாரி ஆகியோரே, உயர் நீதிமன்றத்தில் பகிரங்கமாக கரம்கூப்பி மன்னிப்புக் கோரியுள்ளனர்.

ஊடகவியலாளர் சரத் விமலரத்ன தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரித்த முர்து பெர்னாண்டோ மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே இவர்கள் மன்னிப்புக்கோரினர். மனுதாரருக்கு எதிராக எதிர்காலத்தில் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் இவர்கள் நீதிமன்றில் உறுதியளித்தனர்.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னகோன், பிரதிவாதிகள் மனுதாரரிடம் மன்னிப்பு கேட்க தயாராக இருப்பதாகவும், அவருக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு சம்மதிப்பதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட முன்னாள் செயலாளர் மற்றும் இரத்தினபுரி பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி ஆகியோரே இவ்வாறு மன்னிப்புக்கோரியிருந்தனர். இந்த ஊடகவியலாளர் கடந்த 2019 இல், தாக்கப்பட்டிருந்தார்.

# பாலியல் துன்புறுத்தல், வன்கொடுமை தடுப்புச்சட்ட விதிகளில் திருத்தம்

பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்கொடுமைகளைத்தடுக்கும் சட்ட விதிகளை வலுப்படுத்தும் வகையில், குற்றவியல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அமைச்சரவை கூட்டத்தின் போது இது தொடர்பாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை (11) அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொது இடங்களில் இடம்பெறும் பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை உள்ளிட்ட அனைத்து விதமான வன்கொடுமைகளையும் குற்றமாக்கும் சட்ட வரைவாளர்களால் தயாரிக்கப்பட்ட வரைபு, சட்ட மா அதிபரின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

# சுற்றுலாத்துறைக்கு தேவையான வாகன இறக்குமதிக்கு அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுற்றுலாத்துறைக்கு தேவையான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான கட்டளைச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

2023/2 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு கட்டளைச் சட்டத்தின் படி, இலங்கைக்கு மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு இணங்க, சுற்றுலாப் பயணிகள் போக்குவரத்துச் செய்யும் 250 சிறிய ரக பஸ்களையும் 75 வேன்களையும் இறக்குமதி செய்வதற்கு ஏப்ரல் முதலாம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வகையில், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு கட்டளைச் சட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் அதி விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ள மேற்படி கட்டளைச் சட்டத்தை, பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# உள்ளூராட்சி சபை வேட்பாளர்கள் அரச வளங்களை பாவிப்பதை தடுக்குமாறு பெப்ரல் வழக்குத் தாக்கல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ள வேட்பாளர்களின் நடவடிக்கைகளுக்காக அரச வளங்களை உபயோகிப்பதற்கு இடமளிக்க வேண்டாம் எனக் கோரி, பெப்ரல் அமைப்பு உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி மேற்படி மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வேட்பாளர்கள் அரச வளங்களை உபயோகிப்பதை தடுக்கும் வகையில் அரச நிறுவனங்கள் மற்றும் அதன் அதிகாரிகளுக்கு பணிப்புரைகளை வழங்குமாறு கோரி, தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஆலோசனைக்கு இணங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள நிதியமைச்சின் செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியே, மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கை எதிர்வரும் ஜூலை 3ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேற்படி மனு நேற்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, குமுதினி விக்ரமசிங்க மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உச்சநீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

# தொழிற்சாலை இரசாயன கசிவால் 30 பேர் பாதிப்பு

### பாணந்துறை பகுதியில் சம்பவம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாணந்துறை பகுதியிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட இரசாயனக் கசிவு காரணமாக, 30 ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை பின்வத்த நல்லுருவ பகுதியில் காணப்படும் தொழிற்சாலை ஒன்றிலேயே நேற்றுக் காலை 9:30 மணியளவில் இந்த இரசாயன கசிவு ஏற்பட்டுள்ளது. இதில் பாதிக்கப்பட்டவர்கள் பாணந்துறை அரசாங்க வைத்தியசாலையிலும் சிலர் தனியார் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாசனைத் திரவியங்கள் உள்ளிட்ட பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையில் பொருட்களை தயாரிக்கையில், பாவிக்கப்பட்ட இரசாயனப் பொருள் உபயோகத்தால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இப்பாதிப்பின் பின்னர், மேற்படி தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கோடி அற்புதருக்கு இன்று கொச்சிக்கடையில் திருவிழா






கோடி அற்புதராம் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா இன்று 13ஆம் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. இன்று காலை திருவிழா திருப்பலி பூசைகள் மூன்று மொழிகளிலும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளதுடன் மாலை 5.00 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி இடம் பெறவுள்ளது.

புனித அந்தோனியார் திருத்தல திருவிழா நிகழ்வுகள் ஜூன் 3ஆம் திகதி காலை திருப்பலி பூசை இடம்பெற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் தினமும் இடம் பெற்று நேற்று 12ஆம் திகதி மாலை பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் வெஸ்பர்ஸ் ஆராதனை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து இன்று காலை 4:00 மணிக்கு தமிழ் மொழியில் திருப்பலியும் 5.00 மணிக்கு சிங்கள மொழியில் திருப்பலியும் மீண்டும் காலை 6.00 மணிக்கு அருட்தந்தை ஜோய் மரியரட்ணம் அடிகளாரினால் தமிழ் மொழியில் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

காலை 8.00 மணிக்கு தமிழில் திருவிழா திருப்பலி கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து சிங்கள மொழியில் திருவிழா திருப்பலி துணை ஆயர் பேரருட்திரு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படுவதுடன் ஆங்கில மொழியில் திருவிழா திருப்பலி மதியம் 12 மணிக்கு துணை ஆயர் பேரருட்திரு ஜே. பி அந்தனி ஆண்டகையின் தலைமையிலும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி ஆரம்பமாவதுடன் வழமையான வீதிகளில் திருச்சொரூப பவனி இடம்பெற்று இரவு 8.00 மணிக்கு திருச்சொரூப ஆசீர்வாதம் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்று திருவிழா நிகழ்வுகள் கொடியிறக்கத்துடன் இனிதே நிறைவு பெறவுள்ளது.

இலங்கையில் பல பகுதிகளிலும் புனித அந்தோனியார் ஆலயங்கள் காணப்பட்டாலும் கொழும்பு, கொச்சிக்கடை ஆலயம் தனிச் சிறப்பு பெற்றதாகும். இலங்கையில் மட்டுமல்ல முழு உலகிலும் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக இந்த ஆலயம் மக்கள் மனதில் பதிந்துள்ளது என்றால் மிகையில்லை.

புதுமைகளுக்குப் பேர் போன ஆலயமாகவும் இன, மத பேதங்களுக்கு அப்பால் அனைத்து மக்களினதும் நம்பிக்கையை வென்ற ஆலயமாகவும் இது திகழ்கிறது. செவ்வாய்க்கிழமை தோறும் அணியணியாக வந்து உருக்கமாக தமது வேண்டுதல்களை சமர்ப்பித்துச் செல்லும் மக்கள் அதற்கு சான்றாக உள்ளனர்.

தன்னை நம்பி வருவோரை புனித அந்தோனியார் வெறுங்கையோடு அனுப்ப மாட்டார் என்ற நம்பிக்கையோடு அவர்கள் ஆலயத்தில் முழந்தாள்படியிடுவதை நாம் காண முடியும். உண்மைதான்! குடும்பநலம், உடல்நலம், மனநலம், ஆன்மநலம் என பல்வேறு நன்மைகளைத்தேடி ஓடிவரும் விசுவாசிகளை புனித அந்தோனியார் ஒரு போதும் வெறுங்கையோடு அனுப்புவதில்லை.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு ஒரு சிறப்பான வரலாறு உண்டு. பதினெட்டாம் நூற்றான்டில் இலங்கையானது ஒல்லாந்தரால் ஆளப்பட்டபோது நாட்டில் கத்தோலிக்க மதம் தடைசெய்யப்பட்டிருந்தது. கத்தோலிக்க மத குருமார்களை கண்ட இடத்தில் சிரச்சேதம் செய்வதற்கு படைவீரர்களுக்கு அன்றைய அரசு உத்தரவிட்டிருந்தது.

கத்தோலிக்க மக்கள் பெரும் அவல நிலையை எதிர்கொண்டனர். பிறப்பு, திருமணம், இறப்பு போன்றவற்றிற்குக் கூட குருமார் இன்றி அவதியுற்றனர். தொழில், வரி அரச சேவை முதலியவற்றிலும் கடும் பறக்கணிப்பும் துன்புறுத்தலும் காணப்பட்ட காலம் அது. இக்காலத்தில்தான் வண. யோசேப்வாஸ் அடிகளாரும், யாக்கோமே கொன்சல்வெஸ் அடிகளாரும் தம்முயிரைப் பணயம் வைத்து திருத்தொண்டாற்ற முற்பட்டனர். அவர்கள் கொழும்பிற்கு நிலையான தொண்டாற்ற அன்டோனியோ என்ற குருவானவரை இரகசியமாக வரவழைத்தனர். அன்டோனியோ அடிகளார் அன்றைய மெலிபன் வீதியில் ஒரு வியாபாரி வேடம் பூண்டு தங்கினார்.

எப்படியோ அதனை அறிந்த ஒல்லாந்தர் அவரைக் கைது செய்ய முயன்றனர். அவர்களது கண்களில் படாமல் ஒளிந்து வாழ்ந்து அவர் கொச்சிக்கடை பகுதிக்கு வந்தார். அக்காலத்தில் அது ஒரு சிறு மீனவர் கிராமமாகும். அக்கிராமத்தோருக்கும் குருவானவருக்கும் இடையிலான ஈடுபாடு ஒல்லாந்த படைவீரர்களை சற்று பணிய வைத்தது.

ஆண்டாண்டு காலமாக இப்பகுதி மக்கள் கடல் அரிப்பினால் தங்கள் நிலத்தை இழந்து வந்தார்கள். அதனைக் கட்டுப்படுத்த வல்லவர் என மக்கள் குருவானவரை நம்பினார்கள்.

அன்டோனியோ அடிகளார் தம் செப வல்லமையால் கடலரிப்பைக் கட்டுப்படுத்தினால் எப்படியாவது அவரைக் காப்பாற்றுவது என்றும் உறுதி கொண்டார்கள். அதுவரை அவருக்கு எந்த தீங்கு இழைக்கலாகாது என ஒல்லாந்தரிடமும் உறுதியுடன் கேட்டுக் கொண்டார்கள்.

அன்டோனியோ குருவானவருக்கான உடையணிந்து ஒரு பெரிய மரச்சிலுவையை கையில் ஏந்திக்கொண்டு கடற்கரையை அடைந்தார். இறைவனின் மகிமை வெளிப்பட வேண்டுமென்று மிக உருக்கமாக மன்றாடி கடலரிப்பு உச்ச நிலையிலிருந்த இடத்தில் அச்சிலுவையை நிறுவினார்.

அன்பே உருவான ஆண்டவர் தம் அடியாரின் இன்னல் தீர்க்க சித்தம் கொண்டார். அதனையடுத்து மூன்றாம் நாள் கடல் பின் வாங்கியது. அனைவருமே காணக்கூடிய வகையில் மணல்மேடு உருவானது. ஒல்லாந்தர் அவர் மீது பெரும் நம்பிக்கை கொண்டனர். அவர் விருப்பம்போன்று திருத்தொண்டாற்ற அவருக்கு அனுமதியளித்தனர். அன்று முதல் இன்று வரை இந்த திருத்தலத்தில் பல அற்புதங்கள் நடைபெற்று வருகின்றன. புனித அந்தோனியார் பெயரால் சிறுகுடிசை ஆலயம் அங்கு உருவாயிற்று. அன்டோனியோ அடிகளார் தம் கடைசிக்காலம் வரை அங்கிருந்து இறைவனின் மகிமையைப் பறைசாற்றி மரித்தார். அவரது உடல் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இன்று நாம் காணும் புனித அந்தோனியாரின் சிறிய பீடம்தான் கடலரிப்பு அற்புதத்தின்போது மரச்சிலுவை நடப்பட்ட இடம். 1806ஆம் ஆண்டு ஆலயம் விரிவாக்கப்பட்டதன் பின்னர் 1822ஆம் ஆண்டு கோவாவிலிருந்து கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டதுதான் இப்பீடத்திலுள்ள சிறிய திருச்சொரூபம். புனித அந்தேனியார் திருநாக்கு புதுவையில் பேணப்பட்டு வந்ததை நாம் அறிவோம். அதிலிருந்து கொண்டுவரப்பட்ட சிறிய பகுதியினையே இந்த சிறிய பேழையில் காணக்கூடியதாக உள்ளது. அதன் பின்னர் பல தடவைகள் ஆலயம் புதுப்பிக்கப்பட்டும் பெருப்பிக்கப்பட்டும் வந்தது. அது போன்ற நீண்ட ஒரு வரலாற்றை இந்த திருத்தலம் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்கொலை குண்டுதாரியினால் தகர்க்கப்பட்டாலும் மீண்டும் இந்த ஆலயம் முன்னரை விட கம்பீரமாக தோற்றமளித்து தம்மை அண்டி வருவோருக்கு அற்புதங்களை வழங்கி வருகின்றது.

புனித அந்தோனியாருக்கு திருவிழா எடுத்து மகிழும் இந்த நாளில் எமது நாட்டையும் மக்களையும் புனிதரிடம் ஒப்படைத்து நாட்டில் அமைதியும் சமாதானமும் என்றும் நிலவ பிரார்த்திப்போம்.

**- லோரன்ஸ் செல்வநாயகம்**

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
St. Anthony
Little ASIA
Dream Big Think Big Achieve Big
Wellawatte / Pettah
No,317,317A,Galle Road Wellawatte,Colombo 06,T.P-2504470
No,73,75A, Main St, Colombo 11,0112391745

St. Anthony
Please pray for us
New Rathna Mahal
JEWELLERS (PVT) LTD
97,Sea Street,Colombo-11.Tel:011-2 431 357
155,Main Street, Negombo.Tel 031-2231854

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
Dealers in Forage, Fetilizer, Animal Feeds and Medicines
S K SONS
25, Wolfendhal St, Colombo - 13.
T.P : 011 - 2433105 Mob: 077 - 7396162

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
SRI VIJAYAS
No.309 Sea St, Colombo 11.
T.P : 0112 449 373, Mobile - 0773813978.

ஹரே கிருஷ்ணா
ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம்
BANK - HATTON NATIONAL BANK
BRANCH - JAMPETTAH STREET
ACCOUNT NAME - ISKCON
ACCOUNT NO - 207010000891
SWIFT CODE - HBULKLX
BANK - COMMERCIAL BANK
BRANCH - KOTAHENA
ACCOUNT NAME - ISKCON
ACCOUNT NO - 1050669901
SWIFT CODE - CCEYLKLX
ஆலய அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது வங்கி வைப்பினூடாகவோ நன்கொடைகளை வழங்கலாம்
ISKCON
No,188 New Chetty St, Colombo 15,
T.P: 0112433325/0772288166/iskcon@slt.lk

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
JEYECHANDRANS
# 433, Galle Road, Colombo 06.
Tel: +94114528435/8, Fax: +94112362822, WhatsApp: +94778238402
# 145, Main Street, Colombo 11
Tel: +94112448870, Fax: +94112448860, WhatsApp: +94112448870
web site: www.jeyechandrans.com E-mail: info@jeyechandrans.com

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
St. Anthony
SARITA Textorium
Right Place for Right Choice
No. 99, Main Street, Colombo 11.
Tel : 2446023 Web : www.saritatex.lk
www.facebook.com /saritatextorium

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
DEVI
JEWEL OF THE ISLAND
Devi Jewellers, 131, Sea Street, Colombo-11.
+94 713 131 131, +94 743 813 454, 011 239 5001

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
ROBINSON
(PRIVATE) LIMITED
176, Main Street,Colombo11.
T.P: 0112 422 565,011 2448755,E-mail: ashok@robinsonlk.com

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
NAVEEN CERAMIC (PVT) LTD
297/12 George R De Silva Mw Colombo 13
T.P : 011 2325406,011 2345197,011 2345198 Fax : 011 2335637,
E-mail : info@naveen.lk, Web : http://www.naveen.lk

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
St. Anthony
APSARAS SAREE CENTRE
Varieties of Wedding Sarees
அப்சராஸ் சாரி சென்டர்
113, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 0112 336799 Hotline: 077 9997242
www.apsarassareecentre.com / E-mail: info@apsarassareecentre.com
எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
ZUZI
The Clothing Store
217 George R. De Silva Mawatha, Colombo 13
Phone: 0112 335 276

தினகரன் THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 31ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 06

## குறள் தரும் சிந்தனை



துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு

இன்சொல் பேசி எல்லோரிடத்திலும் கனிவுடன் பழகுவோர்க்கு நட்பில் வறுமை எனும் துன்பமில்லை.

# தரமற்ற கோழி இறைச்சி விற்பனையை தடுப்பதற்கு நடவடிக்கை அவசியம்!

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையின் விளைவாக பல பிரதேசங்களுக்கு அதிக மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றதோடு தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ள நிலையும் ஏற்பட்டது. அதன் விளைவாக மக்களது இயல்பு வாழ்வு பெரிதும் பாதிக்கப்பட்டது. குறிப்பிட்ட அளவிலானோர் இருப்பிடங்களை விட்டு வெளியேறி நண்பர்கள் உறவினர்களது இல்லங்களிலும் பாதுகாப்பான இடங்களிலும் தங்கியிருந்தனர். அதேநேரம் இச்சீரற்ற காலநிலையினால் மக்களது வாழ்வாதார நடவடிக்கைகளும் பாதிக்கப்படைந்தன.

மரக்கறி செய்கை உட்பட பல பிரதேசங்களில் கால்நடை வளரப்பு கைத்தொழில் துறையும் கூட பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. குறிப்பாக கோழி வளர்ப்புக்கு துறைக்கு இந்த வெள்ள நிலையும் கடும் மழைவீழ்ச்சியும் பல பிரதேசங்களில் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. அதனால் சில பிரதேசங்களில் வெள்ள நீரில் மூழ்கி பெருந்தொகையான கோழிகள் இறந்துள்ளன. அத்தோடு இந்த வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட கோழிகளும் உயிரிழந்துள்ளன.

ஆனால் இவ்வாறு உயிரிழந்த கோழிகளின் இறைச்சியை சந்தைப்படுத்தப்படும் மோசடி அம்பலத்துக்கு வந்துள்ளது. வெள்ள நீரில் மூழ்கி இறந்த கோழிகளதும் கடும் மழைவீழ்ச்சி காரணமாக அடிக்கடி உயிரிழக்கும் கோழிகளதும் இறைச்சி சந்தைப்படுத்தப்படுவதாக முறைப்பாடுகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பின்புலத்தில் தான் நுகர்வோர் விவகார அதிகார சபையின் தொழிலாளர் சங்கம் கோழி இறைச்சி தொடர்பில் சோதனைகளையும் தேடுதல்களையும் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் செயலாளர் அஜித் ஜயசுந்தர குறிப்பிடுகையில், வெள்ளம் காரணமாகவும், கடும் மழைவீழ்ச்சியினாலும் உயிரிந்த கோழிகளின் இறைச்சிகள் சந்தைப்படுத்தப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் கோழி இறைச்சி விற்பனை செய்யும் கடைகளில் திடீர் சோதனைகளை மேற்கொள்ளப்பட்டன. அந்த சோதனைகளின் போது சில இடங்களில் வெள்ளம் மற்றும் கடும் மழைவீழ்ச்சி காரணமாக இறந்த கோழிகளின் இறைச்சி சந்தைப்படுத்தப்பட்டு இருந்ததும் சில இடங்களில் மீட் போல்ஸ், சொசேஜஸ் போன்றவற்றின் உற்பத்திக்கு இவ்விதமான கோழிகளின் இறைச்சி பயன்படுத்தப்பட வழங்கப்பட்டிருந்ததும் கண்டறியப்பட்டது என்று குறிப்பிட்டார்.

இந்தப் பின்புலத்தில் கோழி இறைச்சியை சந்தையில் கொள்வனவு செய்யும் போது விழிப்புடன் செயற்படுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ள நுகர்வோர் விவகார அதிகார சபை தொழிலாளர் சங்கம், கோழி இறைச்சி வாங்கும் போது விழிப்புடன் செயற்படுமாறு கேட்டுக் கொண்டுள்ளதோடு மழை, வெள்ளத்தினால் இறந்த கோழிகளின் இறைச்சி குறித்த அறிவுறுத்தலையும் வழங்கியுள்ளது.

அதாவது இவ்விதமாக இறந்த கோழிகளின் இறைச்சி இரத்தம் வெளிப்பட்ட நிலையில் காணப்படக்கூடும் என்றும் கோழி இறைச்சியின் தோல் சிவப்பு நிறம் கொண்டதாக இருக்கலாம் என்றும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த சங்கத்தினரின் வேண்டுகோளையும் அறிவுறுத்தலையும் நுகர்வோர் பெரிதும் வரவேற்றுள்ளனர். இது காலத்திற்கு அவசியமான அறிவுறுத்தல் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இயற்கையாக இறந்த கோழிகளின் இறைச்சியை சந்தைப்படுத்துவது முற்றிலும் தவறானதும் பிழையானதுமான நடவடிக்கையாகும். இந்நடவடிக்கையானது இந்நாட்டின் கோழி இறைச்சி கைத்தொழில் துறையைப் பாதிக்கவே செய்யும். இறைச்சிக் கோழி வளர்ப்பு ஒரு வீட்டு கைத்தொழிலாக மாத்திரமல்லாமல் பண்ணைக் கைத்தொழிலாகவும் இந்நாட்டில் வளர்ச்சி பெற்றுள்ளது. கோழி இறைச்சி மற்றும் முட்டை நுகர்வுக்கு உள்ள கேள்வியே கோழி வளர்ப்பை இவ்வாறான கைத்தொழிலாக வளர வகை செய்துள்ளது.

இதன் பயனாக இத்துறையில் நாட்டில் குறிப்பிடத்தக்களவிலானோர் ஈடுபட்டுள்ளதோடு வாழ்வாதார வருமானத்தை ஈட்டிக் கொள்ளக் கூடியவர்களாகவும் உள்ளனர். மக்களுக்கு தேவையான புரதச் சத்தை வழங்கும் முக்கிய உணவாக கோழி இறைச்சி விளங்குகிறது. வெள்ளம் மற்றும் கடும் மழையினால் இறந்த கோழிகளின் இறைச்சியைச் சந்தைப்படுத்தும் நடவடிக்கை இக்கைத்தொழில் துறையின் வீழ்ச்சிக்கு வழிவகை செய்யும். அதேநேரம் இயற்கையாக இறந்த கோழிகளின் இறைச்சியை நுகரும் போது ஆரோக்கிய ரீதியிலான உபாதைகளுக்கு முகம் கொடுக்கவும் நேரிட வகை செய்யலாம்.

ஆகவே நாட்டின் கோழி வளர்ப்பு துறையின் நலன்களைக் கருத்தில் கொண்டும் மக்களின் ஆரோக்கிய நலன்களை முன்னிலைப்படுத்தியும் இயற்கையாக இறந்த கோழிகளின் இறைச்சியை சந்தைப்படுத்தும் மோசடியை சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாகக் கைவிட வேண்டும். அத்தோடு இவ்வாறான மோசடியைக் கட்டுப்படுத்தவும் இச்செயலில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவும் தவறலாகாது. அதுவே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

editor.tkn@lakehouse.lk

# கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருவிழா இன்று

கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த திருவிழா இன்று 13 ஆம் திகதி நடைபெறுகின்றது. இன்று நடைபெறுவது 190 ஆவது திருவிழா ஆகும்.

இன்று காலை 8 மணிக்கு திருவிழா திருப்பலி ஆரம்பமாகியது. திருவிழா திருப்பலியை கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் அன்டன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக்கொடுக்கிறார்.

இன்று காலை 10 மணிக்கு சிங்களத்திலும், நண்பகல் 12 மணிக்கு ஆங்கிலத்திலும் திருவிழா திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படுகின்றன.

அதனைத் தொடர்ந்து இன்று மாலை 5.30 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி ஆரம்பமாகிறது. திருச்சொரூப பவனி கொச்சிக்கடை தேவாலயத்தை வந்தடைந்ததும் இரவு 8 மணிக்கு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையினால் புனித அந்தோனியார் திருச்சொரூப ஆசீர்வாதம் வழங்கப்படவுள்ளது.

உலகின் அனைத்து மக்களாலும் கோடி அற்புதர் எனக் கொண்டாடப்படுகிறார் புனித அந்தோனியார். தாம் வாழ்ந்த காலத்திலும் இறப்புக்குப் பின்னும் கடவுள் அளித்த கொடையினால் அவர் அநேக புதுமைகள் செய்தார். இதனால் 'கோடி அற்புதர் புனிதஅந்தோனியார்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார்.

அவர் வாழ்ந்த காலத்தில் கடவுளுடைய கிருபையால் இவர் செய்த புதுமைகளால் இவரைநாடி வருவோர் அதிகமாயிற்று. இதனால் துறவியர்கள் மடத்தில் அமைதிக்குக் குந்தகம் ஏற்பட்டது. இதன் பொருட்டு மடத்தின் தலைமை குரு



இவர்எண்ணிலடங்கா புதுமைகள் செய்ய தடைவிதித்தார். நாள் ஒன்றுக்கு 13 புதுமைகள் மட்டுமே செய்ய கட்டளையிட்டார்.

ஒருநாள் இவர் அன்றைக்கு செய்யக் கூடிய 13 புதுமைகளையும் செய்து முடித்தபின் மாலையில் வெளியே உலாவச் சென்றார். அப்பொழுது உயரமான கட்டடத்திலிருந்து ஒருவர் தவறி விழுந்தவேளையில் 'அந்தோனியாரே என்னை காப்பாற்றும்' என்று உதவிக்குரல் எழுப்ப,

இவர் அவரை வானத்திலேயே அந்தரத்தில்தொங்கவைத்ததாகவும் அருகில் இருந்த மடத்திற்கு சென்று தலைமைக் குருவிடம் 14 ஆவது புதுமை செய்ய அனுமதி பெற்று அவரை தரையில் பத்திரமாக இறக்கியதாகவும் கூறுவர். ஒரே நேரத்தில் அந்தோனியார் இரு இடங்களில் போதித்ததாகவும் புதுமைகள் செய்ததாகவும் வரலாறு உண்டு.

அந்தோனியார் குழந்தை இயேசுவை காட்சியில் கண்டு கையில் ஏந்தியதாகவும் கூறுவர். ஆகவேதான் படங்களில் அவரது கையில் குழந்தைஇயேசுவும் மற்றொறு கையில் திருமறை நூலை கையில் வைத்திருப்பதாகவும் படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

காணமல் போன பொருட்கள் புனித அந்தோனியாரை நினைத்து மன்றாடினால் கிடைக்கிறது என்ற பக்தி விசுவாசம் இன்றும் மக்களிடம் காணப்படுகிறது.

1231ஆம் ஆண்டு பல ஊர்களில் மறையுரை ஆற்றியதாலும், கடும் தவ முயற்சிகளாலும் நோய்வாய்ப்பட்டார். அதே ஆண்டில் ஜூன் மாதம் 13 நாள் இறுதி திருவருட்சாதனங்களைப் பெற்றபின் இறைவனில் இளைப்பாறினார். அப்போது அவருக்கு வயது 36.

அதன் பின் 336 ஆண்டுகளுக்குப்பின் அவருடைய கல்லறையானது தோண்டப்பட்டு அவருடைய நாக்கு மட்டும் அழியாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்நாக்கு இன்னும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயமானது உலகெங்கும் பெருந்தொகை பக்தர்களைக் கொண்ட புகழ் பெற்ற திருத்தலமாகும்.

# மட்டக்களப்பு களுமுந்தன்வெளி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவம்



மட்டக்களப்பு படுவான்கரை பிரதேசத்திலுள்ள களுமுந்தன்வெளி கிராமத்தின் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி நள்ளிரவு கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகி 21.06.2024 பின்னிரவு தீமிதிப்பு, திருக்குளிர்த்தி வைபவம் நடைபெறவுள்ளன. மறுநாள் 22 ஆம் திகதி கும்பம் சொரிதலுடன் உற்சவம் நிறைவு பெறும்.

16ஆம் திகதி மாலை 5 மணிக்கு புண்ணியாகவாசனம், வாஸ்த்து சாந்தி என்ன இடம்பெற்று 7 மணிக்கு அம்மன் எழுந்தருளப்பண்ணல் நடைபெறும். நள்ளிரவு 12 மணிக்கு கும்பஸ்தாபனம் நடைபெறும்.

17 ஆம் திகதி அம்மனின் அடையாள அலங்காரத் தோரண ஊர்வல திருச்சடங்கு நடைபெறும். 18 ஆம் திகதி முலாம் நாள் வீதி ஊர்வலமும், 19 ஆம் திகதி இரண்டாம் நாள் வீதி ஊர்வலமும் நடைபெறும். 20 ஆம் திகதி தவநிலைச் சடங்கு நடைபெறும். 21 ஆம் திகதி களுமுந்தன்வெளிக் கிராமத்தின் வடக்குப் புறமாக அமைந்துள்ள திருக்கேதீச்சரப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து காவடி ஆட்டங்களுடன், தீக்கட்டை எழுந்தருளப்பண்ணல் இடம்பெற்று தீமூட்டுதல், அரும்புகுற்றுதல், விநாயகப் பானை எழுந்தருளப்பண்ணல், இடம்பெறும்.

மறுநாள் 22 ஆம் திகதி அதிகாலை 4.30 மணிக்கு தீமிதிப்பு, இடம்பெற்று பள்ளயமும், திருக்குளிர்த்தியும் இடம்பெறும். காலை 8 மணிக்கு மட்டக்களப்பு வாவியின் அம்பிளாந்துறையில் கும்பம் சொரிதலைத் தொடர்ந்து ஆலயத்தில் கன்னி காத்தான்மார் பூஜையும், சர்க்கரை அமுதூட்டலும் இடம்பெற்று காவியம், மங்களப்பாடல்கள் பாடி அன்னையின் இவ்வருடத்திற்கான பெருவிழா நிறைவு பெறவுள்ளது.

கிரியைகளைஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ த.கு.திருச்செல்வம் குருக்கள் தலைமையிலான குழுவினர் மேற்கொள்வர்.

கடந்த யுத்த காலத்தில் பெரிதும் பாதிப்புக்குள்ளான இவ்வாலயத்தை அக்கிராம மக்கள் ஒன்றிணைந்து புனரமைப்புச் செய்துகொண்டே வருகின்றார்கள். எனினும் இதுவரையில் முற்றுப்பெறவில்லை. சுற்றிவர வயல்நிலங்களால் சூழப்பட்ட அக்கிராமத்தில் அம்மன் ஆலயத்துடன் இணைந்ததாக ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயமும் திகழ்கின்றது.

இவ்வாலய அம்மனைத் தரிசனம் செய்தால் நோய் தீரும், பிள்ளைச் செல்வம் கிடைக்கும், செல்வம் பெருகும் போன்ற நம்பிக்கையில் அம்மக்கள் வழிபாடு செய்து வருகின்றனர்.

வருடத்திங்கு ஒருமுறை வருகின்ற இப் பெருவிழாவை முன்னிட்டு அக்கிராமமே விழாக்கோலம் பூண்டிருக்கும். மக்கள் தமது குலதெய்வத்தை பக்தி சிரத்தையுடன் நேர்த்திக் கடன்கள் வைத்து பூஜித்து வழிபட்டு வருகின்றனர்.

வ. சக்திவேல்
பெரியபோரதீவு தினகரன் நிருபர்

# பாக்குநீரிணையை நீந்திக் கடக்கவுள்ள திருமலை சாஹிரா கல்லூரி மாணவன்



திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவன் பஹ்மி ஹசன் சலாமா நாளைமறுதினம் 15ஆம் திகதி பாக்குநீரிணையை நீந்திக் கடக்கும் சாதனையை நிகழ்த்த உள்ளார். தரம் 10 இல் கல்வி கற்கும் 15 வயதுடைய இவர், கடந்த மூன்று மாதங்களாக இச்சாதனைக்கான தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்தியாவின் தனுஷ்கோடி அரிச்சல்முனையில் இருந்து தலைமன்னார் வரையான 32 கிலோமீட்டர் தூரத்தை 8 மணி நேரத்தில் கடப்பதற்கு தாம் எண்ணியுள்ளார் என்று புதனன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சலாமா கூறினார். கடந்த 18ஆம் திகதி இவர் அத்தூரத்தை பயிற்சிக்காக நீந்திக் கடந்துள்ளார். இவருக்கான நீச்சல் பயிற்சிகளை விமானப்படை கோப்றல் றொசான் அபேசுந்தர வழங்கி வருகின்றார்.

இந்தப் பயிற்றுநர் 2021 ஆம் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கு நீந்திச் சென்று மீளவும் அங்கிருந்து தலைமன்னாருக்கு 28 மணித்தியாலயம் 19 நிமிடம் 58 செக்கனில் நீச்சலை நிறைவு செய்து ஆழிக்குமரன் ஆனந்தன் ஏற்படுத்தியிருந்த 51 மணி நேர சாதனையை முறியடித்த சாதனையாளர் ஆவார். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாக்குநீரிணையை நீந்திக் கடந்த திருகோணமலையைச் சேர்ந்த ஹரிகரன் தனவந்தையும் இவரே பயிற்றுவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பஹ்மி ஹசன் சலாமா இதுவரை 30 இற்கும் மேற்பட்ட பாடசாலைமட்ட நீச்சல் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுள்ளர்.

அஷ்ரப் ஏ. சமத்

# வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் மாணவர்களுக்கு பாராட்டு விழா

வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் 2023ஆம் வருடம் க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்து, பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ள 47 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் இணைந்து இவ்விழாவினை ஏற்பாடு செய்திருந்தனர்.

அதிபர் அ.ஜெயக்குமணன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்குடா வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான திருமதி.எம்.ஏ.ரிஸ்மியா பானு, என்.நேசகஜேந்திரராஜ் ஆகியோருடன் கல்லூரியின் பிரதி அதிபர்கள், பழைய மாணவர் சங்கப் பிரதிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ள மாணவர்கள் அனைவரும் கல்லூரியின் மாணவர்களால் மலர் மாலை அணிவிக்கப்பட்டு, இசைக்கருவிகள் இசைக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டனர். விழா மண்டபத்தில் மாணவர்களினால் மங்கல விளக்குகள் ஏற்றப்பட்டு மதப் பிரார்த்தனைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து அதிதிகளின் உரைகள் இடம்பெற்றன.

கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தக முகாமைத்துவம், தொழினுட்பம் எனப் பல்வேறு பிரிவுகளில் சித்திகள் பெற்று இம்முறை பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றுள்ள மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் கல்குடா வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

எதிர்வரும் வருடங்களில் இன்னும் அதிகளவான மாணவர்கள் வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு செல்ல வேண்டும். அதற்காக அயராது உழைக்கின்ற ஆசிரியர்களையும் மாணவர்களையும் பெற்றோர்களையும் வாழ்த்துகின்றோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர். கல்லூரியின் அதிபரும் இம்மாணவர்களை பாராட்டியதுடன் பெற்றோர் மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செலுத்தும் பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

கல்குடா கல்வி வலயத்தில் அமைந்துள்ள பழைமை வாய்ந்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசியப் பாடசாலையில் இருந்து ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்திற்கு அதிகளவான மாணவர்கள் தெரிவாகி வருகின்றனர். இவ்வருடம் மருத்துவ பிரிவிற்கு ஒருவர் உட்பட விஞ்ஞானப் பிரிவில் 11 பேரும், பொறியியல் பிரிவிற்கு 3 பேர் உட்பட கணிதப் பிரிவில் 12 பேரும் தொழினுட்ப பிரிவில் 10 பேரும் கலைப் பிரிவில் 08 பேரும் வர்த்தக முகாமைத்துவப் பிரிவில் 06 பேருமாக மொத்தம் 47 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏ. ஶ்ரீதர்
வாழைச்சேனை தினகரன் நிருபர்





# நகர்வலம்



## வடமேல் மாகாணத்துக்கு 4200 ஆசிரியர் நியமனங்கள் வழங்க நடவடிக்கை

(கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்)





வடமேல் மாகாணத்தின் கல்வி மேம்பாட்டிற்காக புதிதாக 4200 ஆசிரியர் நியமனங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக மாகாண ஆளுநர் நசீர் அஹ்மட் தெரிவித்தார்.

குருநாகல் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் (11) மாகாண ஆளுநர் நசீர் அஹமட் மற்றும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற போதே அவர் இதனை தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர்களாக சாந்த பண்டார, டீ.பி.ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர்களான அசங்க நவரத்ன, மஞ்சுளா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், மாவட்ட அரசாங்க அதிபர் ஏக்கநாயக்க உட்பட அரச உயர் அதிகாரிகள், குருநாகல் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினர் என பலரும் இதில் கலந்து கொண்டனர்

இதன்போது கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், பெருந்தெருக்கள், காணி, வீடமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளின் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளுக்கு துரிதகதியில் தீர்வுகளை வழங்குவது குறித்து ஆராயப்பட்டது.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த ஆளுநர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் வேறுபாடுகள் மற்றும் அரசியல் சார்பு நிலைப்பாடுகளுக்கு அப்பால் பொதுமக்களுக்கு சேவையாற்ற வேண்டும்.

அத்துடன், பொதுமக்களுக்குச் சேவையாற்றும் விடயத்தில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு அதிகாரியும், எந்தநேரத்திலும் இதுதொடர்பில் தன்னைச் சந்திக்க வர முடியும் என்றும், அவ்வாறான சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு நான் எப்போதும் தயாராகவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாகாணத்தில் வழங்கப்படும் ஆசிரியர் நியமனங்கள் மட்டுமன்றி, சிற்றூழியர் நியமனங்கள் உள்ளிட்ட அனைத்து நியமனங்களின் போதும், குறித்த நியமனங்களைப்பெறுவோர் சிக்கல்கள் இன்றி சேவையாற்றுவதற்கான வகையில் அவர்களுக்கான நியமனங்களை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

இலங்கையின் கேந்திர முக்கியத்துவமிக்க இடத்தில் அமைந்துள்ள குருநாகல் மாவட்டம் என்பது மிக எளிதான முறையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பெறக் கூடிய இடமாக அமைந்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தை மாத்திரமன்றி, புத்தளம் உள்ளிட்ட ஒட்டுமொத்த வடமேல் மாகாணத்திலும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய வகையில் புதிய பொழுதுபோக்கு அம்சங்கள், புதிய பூங்காக்கள் அமைப்பதற்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளேன்.

குருநாகல் மாவட்டத்தில் காசநோய் பரவும் அபாயம் குறித்தும் அதிக கவனத்தை செலுத்தியுள்ளேன்.

காசநோயின் அபாயம் குறித்தும், அதன் பரவலைத்தடுப்பது குறித்தும் மாகாணம் முழுவதும் ஒரே நாளில் விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## Digital Media and Journalism பட்டறை நிகழ்வு; பிரதம அதிதியாக சாகல ரத்நாயக்க பங்கேற்பு





Digital Media and Journalism நிறுவனத்தின் பட்டறை மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் உமைர் நௌஷாத் தலைமையில் அண்மையில் கொழும்பு புதிய நகர மண்டபத்திலுள்ள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் கொழும்பு மாவட்டத்திலுள்ள 12 பாடசாலைகளைச் சேர்ந்த 350 மாணவர்கள் கலந்து கொண்டதுடன் பிரதம அதிதியாக ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் தலைமைத் அதிகாரியுமான சாகல ரத்நாயக்கவிடம் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி, முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால், பேராசிரியர் பி.ஏ. ஹுசைன் மியா, ஆலோசகர்கள் ரஸ்மி ரபீக், டாக்டர் இர்ஷாத் ஜாபிர், இர்ஷாத் ரசாக் மற்றும் மாவட்ட மருத்துவ அலுவலர் டொக்டர் இந்திகா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## சவூதிக்கான இலங்கையின் புதிய தூதுவருக்கு வரவேற்பு





சவூதி அரேபிய தொழிற்சந்தையை அபிவிருத்தி செய்து முகாமை செய்கின்ற நிறுவனமாகிய 'தகாமுல் ஹோல்டிங்ஸ் (Takamol Holdings) சவூதிக்கான இலங்கை புதிய தூதுவர் உமர் லெப்பை அமீர் அஜ்வத்தை கௌரவிக்கும் வகையில் அண்மையில் பகலுணவு விருந்தொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

சவூதி அரேபியாவுக்கான புதிய இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத்தை வரவேற்றுப் பேசிய நிறுவனத்தின் பணிப்பாளர் டொக்டர் வாபி அஸ்ஸிர்ரி, தகாமுல் நிறுவனம் தோற்றம் பெற்ற காலம் முதல் இலங்கை அதன் மிக நெருங்கிய பங்காளியாகவிருந்து வருவதாக தெரிவித்ததுடன் இனிவரும் காலங்களிலும் இலங்கைக்கான புதிய தூதுவருடன் நெருங்கிச் செயற்பட எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் போது தூதுவர் அமீர் அஜ்வத், ரியாத்திலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு தகாமுல் நிறுவனம் வழங்கி வருகின்ற ஆதரவுக்கும் கூட்டுறவுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டதுடன் பரஸ்பரம் இரு நாடுகளும் பயனடைவதை நோக்காக கொண்டு தொழில் சார்ந்த இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

சவூதி அரேபிய தொழில் சந்தையில் இலங்கை மனிதவளம் சிறந்த பங்களிப்பு செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தகாமுல் நிறுவனமே சவூதி அரேபியாவின் மனித வளங்கள் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சகத்தின் முன்னெடுப்புக்களில் ஒன்றான முஸானத் இலத்திரனியல் தளத்தைக் கையாளுகிறது.

முஸானத் இலத்திரனியல் தளம் என்பது ஒருங்கிணைக்கப்பட்ட விதத்தில் வீட்டுப் பணியாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதை உறுதிப்படுத்தி, அனைத்து தரப்பினரின் உரிமைகளும் பாதுகாக்கப்படுவதை அதிகரிக்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒரு முன்னெடுப்பாகும். இலங்கையும் சவூதி அரேபியாவும் 2014 ஆம் ஆண்டு வீட்டுப் பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டன. மேலும் ஆட்சேர்ப்புச் செயன்முறையை நெறிப்படுத்தி அதில் ஏற்படுகின்ற குறைபாடுகளை தீர்க்கும் நோக்கில் 2015 ஆம் ஆண்டு முஸ்ஸானத் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையின் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவும், தகாமுல் நிறுவனமும் சவூதி தொழிலாளர் சந்தையிலுள்ள பணியாட்களின் தொழிற் தேர்ச்சியை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு திறன்களைக் கண்டறிவதற்கான ஒப்பந்தமொன்றில் அண்மையில் கைச்சாத்திட்டன.

இதன் மூலம் இலங்கையிலிருந்து செயற்றிறன் வாய்ந்த பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வில் சவூதி அரேபிய தரப்பில் சவூதி தொழில் அமைச்சின் மனிதவள மற்றும் சமூக அபிவிருத்திக்கான பொது முகாமையாளர் முஹம்மத் அல்பக்ரி, தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான பொது முகாமையாளர் முஹம்மத் அல் ஷஹரி மற்றும் முஸானத் அதிகாரி அப்துல்லாஹ் அல்குவைர் ஆகியோர் கலந்து கொண்டதுடன், இலங்கை சார்பில் தூதரகப் பிரதானி மொகமட் அனஸ் மற்றும் தொழிலாளர் கவுன்சிலர் எச். டபிள்யூ. சமந்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கட்டாக்காலி மாடுகள், கழுதைகளின் நடமாட்டம் அதிகரிப்பு



கற்பிட்டி, புத்தளம் பிரதேச சபைகளுக்குட்பட்ட பிரதான, உள் வீதிகளில் கட்டாக்காலி மாடுகள் மற்றும் கழுதைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளமையால் வாகன சாரதிகள், பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர்.

குறித்த பகுதிகளில் கட்டாக்காலி மாடுகள் பகல் மற்றும் இரவு நேரங்களில் பிரதான, உள்வீதிகளில் சுற்றித் திரிவது, படுத்துறங்குவது காரணமாக அவ்வீதியூடான போக்குவரத்துக்கு பெரும் தடை ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கட்டாக்காலி மாடுகள் வீதியில் கூட்டம் கூட்டமாக சுற்றித்திரிவதால் வீதிப் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்து வருவதுடன் வீதி விபத்துக்களும் அதிகரித்துவருவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, கற்பிட்டி பிரதேச சபைக்குட்பட்ட கண்டல்குழி தொடக்கம் கற்பிட்டி நகர் வரையிலான பிரதான வீதியில் கட்டாக்காலி கழுதைகள் நடமாடித் திரிவதால் வீதிப்போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் சாரதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## உளநல ஆலோசனை

(திறப்பனை தினகரன் நிருபர்)

அநுராதபுரம் ஆயுர்வேத சமூக சுகாதார மேம்பாட்டு சேவைகள் இயக்குநர் பிரிவு மன உளைச்சல் மற்றும் சுகாதார பிரச்சினைகளை கண்டறிந்து அரச சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவு மற்றும் ஆலோசனைகளை வழங்கும் வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டம் மூன்று மாத யோகா மற்றும் கட்டுப்பாடு உடற்பயிற்சி திட்டம் மற்றும் மன அழுத்தத்தால் கண்டறியப்பட்ட பிற சுகாதார மேம்பாட்டு திட்டங்களை செயற்படுத்துகிறது.



சர்வதேச லயன்ஸ் கழகத்தின் சிறந்த பிராந்திய தலைவருக்கான சர்வதேச விருதை லயன் துரையானந்தனும், சிறந்த தலைவருக்கான சர்வதேச விருதை லயன் மகேந்திரனும் ஆகியோர் பெற்றுகொண்டனர். ஹோட்டல் ராம் ரிச் இல் நடைபெற்ற சர்வதேச டிரக்டர் Lion மகேஷ்பஸ்குவல் இவ்வருட ஆளுநர் லயன் அனுர குமரா திசாநாயக்க, முன்னாள் ஆளுநர் லயன் கிரேசன் பர்னாந்து மற்றும் அனைத்து மாவட்ட ஆளுநர் கவுசல் ராஜாபக்ச ஆகியோர் முன்னிலையில் இவ்விருதை பெற்றுக் கொண்டனர்.

## தும்மோதர பாலத்தின் நிர்மாண பணிகள் மீண்டும் ஆரம்பம்



(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

நாத்தாண்டிய தேர்தல் தொகுதியிலுள்ள தும்மோதர பாலத்தின் நிர்மாணப் பணிகள் மிக நீண்டகாலத்திற்கு பின்னர் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு குளியாப்பிட்டிய பிரதான வீதி வழியாகவே மேற்படி பாலம் அமைக்கப்பட்டுள்ளது. ஒல்லாந்தர் கால்வாய்க்கு குறுக்காக நிர்மாணிக்கப்படும் தும்மோதர பாலம் பொதுமக்களின் போக்குவரத்துக்கு சேவைக்கு மிகவும் பிரயோசனமிக்க ஒன்றாகும்.



சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு புத்தளம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மர நடுகை வேலைத்திட்டமும், சிரமதானப்பணியும் நேற்றுமுன்தினம் (11) ரத்மல்யாய கிராம சேவகர் பிரிவில் நடைபெற்றது.
சிட்டி போய்ஸ் சமூக அமைப்பு மற்றும் அப்பிரதேசத்தின் மகளிர் அமைப்பு என்பனவற்றின் உதவியுடனும், ரத்மல் யாயா கிராம உத்தியோகத்தர் அபுதாஹிர் தௌபீகா தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

## சடலம் மீட்பு



யாழ்ப்பாண பகுதியிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் பணிபுரியும் வைத்தியரொருவர், வைத்தியசாலை விடுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் நேற்றைய தினம் புதன்கிழமை வைத்தியசாலையில் நடந்தது.

மகப்பேற்று விடுதியில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்புக்கான காரணம் தெரியவராத நிலையில் சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## சிறுவர் சுகாதார மேம்பாட்டுக்காக பணியாற்றிய துறைசார் உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுவிழா





கல்முனை பிரதேசத்தில் போஷாக்குக் குறைபாட்டினால் அதிகம் பாதிக்கப்பட்ட பிள்ளைகளைக் கண்காணித்து, அவர்களின் சுகாதார மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் பாராட்டிப் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

CERI சர்வதேச தொண்டு நிறுவனம் கல்முனை பிரதேசத்தில் போஷாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவும் பொருட்டு பிராந்திய தாய்சேய் நலன்பிரிவுடன் இணைந்து கடந்த 06 மாதங்களாக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தது.

கல்முனை பிரதேசத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் முன்னெடுக்கப்பட்ட குறித்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பொதுச்சுகாதார தாதிய உத்தியோகத்தர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், பொதுச்சுகாதார மருத்துவ மாதுக்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினர்.

குறித்த உத்தியோகத்தர்களை பாராட்டிக் கௌரவிக்கும் பொருட்டு பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு ஏற்பாடு செய்த சேவை நலன் பாராட்டுவிழா அண்மையில் இடம்பெற்றது. பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.றிஸ்பின் ஒருங்கிணைப்புச் செய்திருந்த இந்நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சார்பாக கலந்து கொண்ட பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம். மாஹிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை, திருக்கோவில், இறக்காமம், பொத்துவில் ஆகிய பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளான டொக்டர் ஏ.எல்.இஸ்மாயில், டொக்டர் பீ.மோகனகாந்தன், டொக்டர் எப்.எம்.உவைஸ் மற்றும் CERI நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் உள்ளிட்ட அதன் உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இங்குள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கடமையாற்றும் பொதுச்சுகாதார தாதிய உத்தியோகத்தர்கள், மேற்பார்வை பொதுச்சுகாதார மருத்துவமாதுக்கள், பொதுச்சுகாதார மருத்துவ மாதுக்கள் இதன்போது பாராட்டிப் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

Ceri சர்வதேச தொண்டு நிறுவனம் போஷாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் சுகாதார நலன்கருதி பல்வேறு கிளினிக் வசதிகள், போஷாக்கு உணவுப் பொதி வழங்குதல் மற்றும் உதவித் தொகை வழங்குதல் என இப்பிரதேசத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆதம்லெப்பை றியாஸ்
(பாலமுனை விசேட நிருபர்)



கண்ணபுரம் கிழக்கு வக்கியல்ல ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வின்போது ஆளுமைமிக்க செயற்பாட்டாளராக விளங்கும் ஆரையம்பதியைச் சேர்ந்த கலாபூஷணம் இராசையா கிருஷணப்பிள்ளையை ஆலய பாிபாலன சபையினர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

# கிராம உத்தியோகத்தர்களுக்கான மூன்று மாத உள்வாங்கல் பயிற்சி

**திறப்பனை தினகரன் அ.புரம் மேற்கு தினகரன் நிருபர்கள் )**

கிராம உத்தியோகத்தர் சேவைக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த 84 கிராம உத்தியோகத்தர்களுக்கான மூன்று மாத உள்வாங்கல் பயிற்சித் திட்டம் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் அநுராதபுர மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தலைமையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(இந்தப் பயிற்சித் திட்டத்தின் முதல் மூன்று வாரங்கள் மாவட்ட செயலகத்தில் இவர்களுக்கான பயிற்சி அளிக்கப்படும். அங்கு பல்வேறு தலைப்புக்களில் 22 பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன. மீதமுள்ள நாட்களில் பிரதேச செயலக மட்டத்தில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

## இன்றைய பலன்கள் (13.06.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பழைய வாடிக்கையாளர்கள் மூலமாக நல்ல திருப்பத்தை சந்திக்க நேரலாம். கூட்டு தொழிலில் கூட்டாளிகளின் தலையிட்டால் நிர்வாகத்தில் அசோகரியம் ஏற்படும்.

**ரிஷபம் :**
எதிர்பார்த்த காரியங்கள் இடையூறு இன்றி நடைபெறும். சொந்தத் தொழிலில் உற்சாகமான சூழ்நிலை இருக்கும்.

**மிதுனம்:**
சிலருக்கு பதவியில் உயர்வு பணியிட மாற்றமும் கிடைக்கும். சொந்த தொழில் நன்றாக நடைபெறும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள்.

**கடகம்:**
உயர் அதிகாரிகளின் ஆதரவும் சக நண்பர்களின் ஒத்துழைப்பும் மனதிற்கு உற்சாகம் தரும். சொந்தத் தொழிலில் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**சிம்மம்:**
சொந்தத் தொழில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணப் புழக்கம் சரளமாக இருக்கும். என்றாலும் சிக்கனம் அவசியம் .

**கன்னி:**
சொந்தத் தொழில் உற்சாகம் பிறக்கும். புதிய வாடிக்கையாளர்கள் வரவினால் எதிர்பாராத வளர்ச்சியும் பண வரவும் வந்து மகிழ்ச்சி படுத்தும்.

**துலாம்:**
பொறுப்புகள் கை மாறி போகும். சொந்தத் தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வாடிக்கையாளர்களை தவிர அதிக முயற்சிகள் தேவைப்படும்.

**விருச்சிகம்:**
கூட்டாளிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் உண்டாகக் கூடும். குடும்பத்தில் எதிர்பாராத சிறு சிறு பிரச்சனைகள் தலை தூக்கினாலும் அவற்றை சாமர்த்தியமாக சமாளித்து விடுவீர்கள்.

**தனுசு:**
ஒரு சிலருக்கு சம்பள உயர்வு இடமாற்றமும் வந்து சேரும். சொந்தத் தொழில் ஆதாயம் தருவதாக இருக்கும். புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவதால் பணி சுமை அதிகரிக்கும்.

**மகரம்:**
இதுவரையில் கைக்கு வராமல் இருந்த தொகை கிடைத்து நின்று போயிருந்த பணிகளை தொடருவீர்கள். தொழில் ரீதியான முன்னேற்றத்திற்கு துணிச்சலான முடிவுகளை எடுப்பீர்கள்.

**கும்பம்:**
கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களிடம் சுமூகமாக நடந்து கொள்வது பிரச்சினைகளை தவிர்க்கும். குடும்பம் நன்றாக நடந்து வந்தாலும் சிறு சிறு பிரச்சனைகளும் இருக்கக்கூடும் .

**மீனம்:**
உயர் அதிகாரிகளின் அனுசரிப்பால் பிரச்சினையில் இருந்து விடுபடுவீர்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள் வாடிக்கையாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

## ஈஸ்டர் தாக்குதல்: SIS, CNI புலனாய்வு...

வழங்கியிருந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2018ஆம் ஆண்டு, நவம்பர் 30 அல்லது அதற்கு அண்மைய காலப்பகுதியில் வவுணதீவில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் கொலைச் செய்யப்பட்ட சம்வம் தொடர்பில் இராணுவ புலனாய்வுப் பணியகம், குற்றப் புலனாய்வு பிரிவு என்பன அறிந்து கொண்ட தகவல்கள் அறிவிக்கப்பட்டிருந்தன. அதில் எல்.டீ.டீ.ஈ அமைப்புக்கு தொடர்பிருப்பதாக நம்பப்பட்டது.

இருப்பினும் மேற்படி சம்பவத்துக்கு ஆறு மாதங்களுக்கு பின்னர் இராணுவ புலனாய்வுப் பணியகம் இதில் தேசிய தவ்ஹீத் ஜமாத் (NTJ) அமைப்புக்கு தொடர்பிருப்பதாக அறிந்துகொண்டது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு 2021 ஜனவரி 31இல், இறுதி அடங்கிய இறுவட்டு ஒன்றை விசாரணை ஆணைக்குழுவிடம் வழங்கியிருந்தது.

அது தொடர்பில் எந்தவொரு அதிகாரியிடமும் விசாரணை நடத்தும் அதிகாரத்தை புதிய விசாரணைக் குழுவிற்கு ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

புதிய குழுவின் அறிக்கையை 2024 செப்டெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதியிடம் கையளிக்குமாறு குழுவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

## அடுத்து வரும் சில வாரங்களில்...

கடந்த 18 மாதங்களில் சுமார் 75 சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டு நாட்டுக்குத் தேவையான அடிப்படை மாற்றங்களைச் செய்ய முடிந்துள்ளது. இது நாட்டில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த உதவும் என்பதை குறிப்பிட வேண்டும்.

நீதித்துறைக் கட்டமைப்பில், நீதியை நிலைநாட்டுதல் தொடர்பான மிகப்பாரிய சட்ட மறுசீரமைப்புகள் இடம்பெற்ற காலமாக இக்காலகட்டத்தைக் குறிப்பிடலாம்.

அரச துறையிலும், தனியார் துறையிலும் இலஞ்சம், மோசடி, ஊழல், கொமிஸ் எடுத்தல் போன்றவற்றைத் தடுக்கும் வகையில் ஊழல் தடுப்புச் சட்டம் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் ஊழல் எதிர்ப்பு சாசனத்துடன் பொருந்தும் வகையில், இது தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு பல அதிகாரங்களும் சுதந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. விளையாட்டு மற்றும் பாலியல் இலஞ்சம் தொடர்பாக புதிய குற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பெயரளவில் இருந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான சட்டம் தற்போது நிலையான நிலையை எட்டியுள்ளது. எனவே, நாட்டின் அனைத்து பிரஜைகளும் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கைகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் சொத்து பொறுப்பு அறிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்கிறார்கள். மேலும், வழக்குப் பொருட்கள் மற்றும் போதைப்பொருட்களை அகற்றுவது தொடர்பாக புதிய சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

குற்றச் செயல்கள் மூலம் பெறப்பட்ட சொத்துக்கள் குறித்து விசாரிக்க அதிகார சபை அமைக்கப்பட்டுள்ளது.

முதன்மை வழக்கு நடவடிக்கை சட்டத்திற்குத் திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. திருமணம் தொடர்பான புதிய சட்டமூலமும் முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும், முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் தொடர்பாக பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்றங்களை மாத்திரம் முன்வைத்து அந்த சட்டமூலத்தை திருத்த அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

தற்போது காதி நீதிமன்றம் தொடர்பாக பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. அதன்படி, இரண்டு மாற்றங்களைச் செய்ய முன்மொழியப்பட்டுள்ளது. அதேபோன்று, வெளிநாட்டு நீதிமன்ற தீர்ப்புகளை கையாளும் வெளிநாட்டு நீதிமன்ற தீர்ப்புகளை செயல்படுத்துவதற்கான வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல்...

அங்கத்தவர்களாகவே இங்கு வந்துள்ளீர்கள். அவ்வாறு செய்வதற்கான ஆலோசனையை முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவே வழங்கியிருந்தார். இதனால் இளைஞர், யுவதிகள் நாட்டின் முன்னேற்றுத்துக்கான தங்களது யோசனைகளை வழங்க முடியும். அந்த யோசனைகளை நாமும் செவிமடுப்போம்.

நாட்டின் பொருளாதார ரீதியான வங்குரோத்து நிலையை பற்றி பலரும் பேசுகிறார்கள். அதனை நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. நாடு பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி அரசியல் ரீதியாகவும் வங்குரோத்தடைந்துள்ளது.இதுவே உண்மையாகும். இவை இரண்டும் பிரித்துப் பார்க்க முடியாத பிரச்சினைகள் .நாட்டில் இதுவரையிலும் இறக்குமதியை மையப்படுத்திய பொருளாதாரமே காணப்பட்டது. தேவையான அனைத்துக் பொருட்களையும் இறக்குமதி செய்தோம். அதற்கு செலுத்தத் தேவையான பணமும் எம்மிடம் இருக்கவில்லை. இதற்கு மத்தியில் யுத்தத்துக்கும் செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் யுத்தத்திற்கு பின்னர் துரிதமான பொருளாதார வளர்ச்சியை எட்டிப் பிடிப்பதற்கான வாய்ப்பு நாட்டுக்கு கிடைத்திருந்தது. யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்களான பின்பும், இந்த முன்னேற்றத்தை அடைய முடியவில்லை.

இவ்வாறான நேரத்தில் நாட்டு மக்களுக்கு உண்மை நிலையை சொல்ல எவரும் முன்வரவில்லை. இருப்பினும் நாட்டில் பொருளாதார மாற்றம் ஒன்று அவசியம் என்பதை நான் வலியுறுத்தினேன். இதற்கான பணிகளை செய்யும் போது நாட்டை விற்கப் போவதாக பிரசாரம் செய்யப்பட்டது. இறுதியில் நாம் வங்குரோத்து நிலையை அடைந்தோம்.

நாட்டின் வருமான தேவையைக் கருத்திற்கொண்டு 2015 இல், நான் பிரதமராக இருந்த காலத்தில் வரி அதிகரிப்புச் செய்ய வேண்டியிருந்தது. 2019 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரிகளை குறைத்தார். அதனால் நாட்டின் வருமானம் குறைந்தது.

அந்த நேரத்தில் கொவிட் தொற்றும் பரவியது. நாட்டுக்கு 03 பில்லியன் டொலர் வெளிநாட்டு கையிருப்பு தேவைப்பட்டது. இருப்பினும் பாராளுமன்ற தேர்தல் காலத்தில் ஒருவரும் அது பற்றி பேசவில்லை.

ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கை பிரகடனத்தில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தோம். வேறு எவரும் அதுபற்றி பேசவில்லை. இதன் பலனாக ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒரேயொரு பாராளுமன்ற ஆசனம் மட்டுமே கிடைத்து.

உலகின் வேறு எந்தவொரு நாட்டிலும் ஒரு ஆசனத்தை வென்று பாராளுமன்றத்திற்கு தெரிவானவர்கள் பிரதமர் அல்லது ஜனாதிபதியாக பதவியேற்றதில்லை. ஆனால் இலங்கையில் இது நடந்தது. நாட்டின் அரசியல் வங்குரோத்து நிலையே இதற்கு காரணமாகும்.

## இன்று கொழும்பு, கொச்சிக்கடை...

மொழிகளிலும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளதுடன், மாலை 5.00 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி இடம் பெறவுள்ளது.

புனித அந்தோனியார் திருத்தல திருவிழா நிகழ்வுகள் ஜூன் 03 இல், திருப்பலி பூசை இடம்பெற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இதனைத் தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் தினமும் இடம் பெற்று நேற்று (12) புதன் மாலை பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் வெஸ்பர்ஸ் ஆராதனை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து இன்று (13) காலை 4:00 மணிக்கு தமிழ் மொழியில் திருப்பலியும் 5.00 மணிக்கு சிங்கள மொழியில் திருப்பலியும் மீண்டும் காலை 6.00 மணிக்கு அருட்தந்தை ஜோய் மரியரட்ணம் அடிகளாரினால் தமிழ் மொழியில் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

காலை 8.00 மணிக்கு தமிழில் திருவிழா திருப்பலி கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர், பேரருட்திரு அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து சிங்கள மொழியில் திருவிழா திருப்பலி துணை ஆயர் பேரருட்திரு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். ஆங்கில மொழியில் திருவிழா திருப்பலி மதியம் 12 மணிக்கு துணை ஆயர் பேரருட்திரு ஜே. பி அந்தனி ஆண்டகையின் தலைமையிலும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து இன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி ஆரம்பமாவதுடன், வழமையான வீதிகளில் திருச்சொரூப பவனி இடம்பெற்று இரவு 8.00 மணிக்கு திருச்சொரூப ஆசீர்வாதம் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறும். திருவிழா நிகழ்வுகள் கொடியிறக்கத்துடன் இனிதே நிறைவு பெறவுள்ளன.

## பெருந்தோட்ட மக்களுக்கான...

சமூக, ஆன்மீக சுகாதாரம் மற்றும் அறிவு, சிந்தனை , திறன் ஆகியவற்றை மேம்படுத்தி ஆரோக்கியமான மனிதர்களாக அவர்களை வளர்ச்சியடையச் செய்வதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

கேகாலை மாவட்டத்தை கேந்திரமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட 'மகிழ்ச்சித் தோட்டங்கள்' வேலைத் திட்ட எண்ணக்கருவை நடைமுறைப்படுத்துவது தொடர்பான முதல் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. நாடளாவிய ரீதியில் சுமார் 460 தோட்டங்கள் காணப்படுகின்றன. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 45 தோட்டங்கள் செய்யப்பட்டுள்ளன, அவற்றில் 07 தோட்டங்கள் கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ளன. நாட்டின் 05 மாகாணங்களின் 11 மாவட்டங்களிலும் மொத்த சனத்தொகையில் சுமார் 05 வீதமான அதாவது சுமார் ஒரு மில்லியன் மக்கள் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர்.

நேற்று ஆரம்பமான இப் புதிய வேலைத்திட்டத்தால், ஆறு மாதங்களுக்குள் சகல தோட்டங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் 400 தோட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால தெரிவித்தார். தோட்டத்துறையின் சுகாதாரம் ஏனைய சுகாதார கட்டமைப்புக்கு சமமான நிலைக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கடன் மறுசீரமைப்புகளுக்கு...

இந்த வருடத்தில் அதனை 03 வீதமாக அதிகரிக்க முடியுமென எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முழுமையானசெய்தி 09 ஆம் பக்கம்..

## முன்பள்ளி ஆசிரியர்களின்...

முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் 2,500 ரூபா மாதாந்த கொடுப்பனவு 5,000 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (12) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி இத்தீர்மானத்தை மற்றுமொரு குழுவில் வழங்கியிருந்ததாகவும், அதற்கமைய 8,700 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்படுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி...

அனுர குமார திசாநாயக்க எமது கட்சியினரைச் சந்தித்தார். எமது கட்சியின் நிலைப்பாட்டை அவருக்கு தெரிவித்துள்ளோம்.

அதிகார பரவலாக்கம் சம்பந்தமாக எதுவும் அவர் கூறா தால் கடந்தகால வடக்கு கிழக்கு பிரிப்பு சம்பந்தமான எனது அதிருப்தியை அவரிடம் தெரிவித்திருந்தேன்.

நியாயமான அதிகார பரவலாக்கல் சம்பந்தமான ஒரு பிரேரணயை அவர் முன்வைப்பாரானால், மக்கள் நிச்சயமாக அதனைப் பரிசிலீப்பார்கள். ஐந்து கட்சிகள் சார்பில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டால் அவரையே எமது கட்சி ஆதரிக்கும்.

ஆகவே, ஜனாதிபதித் தேர்தலில் நாம் தமிழ் பொது வேட்பாளருடனேயே நிற்போமென தெளிவாக அனுரவிடம் கூறியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பிபில மஹியங்கனை வீதியில்...

பிபில வேகம பிரதேசத்தைச் சேர்ந்த இராஜேந்திரன் ராஜகருணா (72) உடுவக வடுகே கல்யாணி (69) மற்றும் உயிரிழந்த பெண்ணின் உறவினரான உடுவக வடுகே குசும்லதா (72) ஆகியோர் விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த வேனை செலுத்திய அம்புசாமி தம்பதியின் மகன், பதுளை பொது வைத்தியசாலையிலும் வாகனத்திலிருந்த மற்றுமொருவர் சிரிகல வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேனிலிருந்த சிறுவன் படுகாயமடைந்ததுடன் , பஸ் சாரதி மற்றும் இணை சாரதி ஆகியோர் பிபில ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கை மலேஷியா இடையே...

ஏற்றுமதியை பல்வகைப்படுத்துதல் மற்றும் பொருட்கள், சேவைகளுக்கான சந்தை அணுகலை விரிவுபடுத்துதல் ஆகிய நோக்கில் இந்த ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது.

இவற்றின் முக்கியத்துவத்தை அரசாங்கம் அடையாளங்கண்டதையடுத்தே இந்த ஒப்பந்தத்தின் அவசியம் உணரப்பட்டுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதியில் மலேசியாக 34வது நாடாக உள்ளது. அத்தோடு 2013 ஆம் ஆண்டில், அந்த நாட்டிற்கு மேற்கொள்ளப்பட்ட மொத்த ஏற்றுமதியின் மதிப்பு 58.3 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும். இதற்காக இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, அதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காக நேற்று (12) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

## 66 மெற்றிக் தொன் உளுந்து...

வெளிநாடுகளில் இருந்து உளுந்து இறக்குமதி செய்வதற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதி அவசியம். இவ்வாறான அனுமதி இன்றி இந்த உளுந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பெண் கைது...(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் இவரைக் கைது செய்துள்ளது.இப்பெண் குறித்து 53 பேர் முறைப்பாடு செய்திருந்தனர். இதையடுத்து இவரைக் கைது செய்யும் ஏற்பாடுகளில் குற்றப்புலனாய்வு பிரிவினர் இறங்கினர். முறைப்பாட்டாளர்களிடமிருந்து மாத்திரம் நான்கு கோடியே 64,300 ரூபாவை இச்சந்தேக நபர் மோசடி செய்துள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

## ஹோமாகம தர்ம...(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு சபை, , ஜனாதிபதி செயலகம், வெகுஜன ஊடகம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, மேல் மாகாண சபை, ஹோமாகம பிரதேச செயலகம், ஹோமாகம பிராந்திய சபை, ஹோமாகம பிராந்திய கல்வி அலுவலகம், இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை பொலிஸ் ஆகியவை இணைந்து தர்ம ரஷ்மி பொசன் வலயத்தை ஏற்பாடு செய்துள்ளன.

பெரியவர்களுக்கான பஹன் கூடு போட்டியில் முதலிடம் பெறுவோருக்கு ரூ.10 லட்சமும், இரண்டாம் இடத்துக்கு ரூ.5 லட்சமும், மூன்றாம் இடத்துக்கு ரூ.2 லட்சமும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்.

இது தவிர, 4ம் இடம் முதல் 14வது இடத்துக்கு தலா 50,000 ரூபாயும், 15 முதல் 25வது இடத்துக்கு தலா 25000 ரூபாயும் வழங்கப்படும்.

மாணவ, மாணவியர்களுக்கான போட்டியில் முதலிடம் பெறுவோருக்கு ரூ.5 லட்சமும், இரண்டாமிடம் பெறுவோருக்கு ரூ.2 லட்சமும், மூனறாமிடம். பெறுவோருக்கு 1 லட்சமும் 4ஆம் இடம் முதல் 14 ஆம் இடம் வரை பெறுவோருக்கு ரூ.30000மும் வழங்கப்படும். 15 முதல் 25 இடம் வரை 20000 ரூபாய் பரிசு வழங்கப்படும்.

பொசன் பிரதேசத்திற்கு வருகை தரும் இலட்சக்கணக்கான மக்களுக்காக, பிடிபன நகரில் தானசாலைகளும் , பசுமைப் பல்கலைக்கழக மைதானத்தில் தினமும் இரவு 7 மணி முதல் பக்திப் பாடல் நிகழ்ச்சியும் நடைபெறும். இந்த நிகழ்ச்சி ரூபவாஹினி மற்றும் இலங்கை வானொலியில் தினமும் ஒளிபரப்பப்படும்.

லேக்ஹவுஸ் பத்திரிகையில் வெளியிடப்படும் கூப்பனை நிரப்புவதன் மூலம் தர்ம ரஷ்மி பொசன் பஹன் கூடு போட்டியில் பங்கேற்கலாம். மேலதிக தகவல்களை 0775448485 தர்ஷா அல்லது 0777207371 ஜெயமஹா என்ற தொலைபேசி இலக்கத்துடன் பெற்றுக்கொள்ள முடியும்.

## மக்கள் அச்சமின்றி நீரை அருந்தலாம்...

பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால், பொதுமக்கள் அனைவரும் அச்சமின்றி நீரைப் பயன்படுத்த முடியும். நீர் விநியோகம் தொடர்பில் பிரச்சினைகள் இருக்குமாயின் 1939 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறும் சபை தெரிவித்துள்ளது.

## காசாவில் ஆதரவற்ற மக்களை...

இவ்வாறு தெரிவித்தார். 'செல்வந்தவர்களுக்கும், அதிகாரம் படைத்தவர்களுக்கும் பொருந்தும் வகையில் மாத்திரமின்றி, சட்ட விதிகள் அடிப்படையிலான ஒழுங்கை உறுதி செய்ய அனைவருக்குமான பொதுவான நியாயமான விதிகளுக்காக கடுமையாக உழைப்பது இன்றியமையாதது. ஒரு நிலையான உலக ஒழுங்குக்கு சமமான மற்றும் நியாயமான முன்மாதிரியாக செயல்படுவது அவசியம்.

இதன் பொருள் சர்வதேச சட்டத்தை நிலைநிறுத்துவது மற்றும் நேர்மை, நீதி, இறையாண்மைக்கான கௌரவம் ஆகியவற்றின் கொள்கைகளை உறுதிப்படுத்துவது நமது செயல்களின் வழிகாட்டுதல்களாக அமையவேண்டும் என்றும் அவர் கூறினார்.

பொருளாதார ஸ்திரமின்மை, காலநிலை மாற்றம் மற்றும் புவிசார் அரசியல் மோதல்களின் எதிர்மறையான விளைவுகளை, சர்வதேச ரீதியில் தெற்கு பிராந்திய மக்கள் அடிக்கடி அனுபவித்துவருவாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பிரிக்ஸ் அமைப்பை விரிவாக்குவதல் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதன் ஊடாக சர்வதேச பயங்கரவாதம், சைபர் குற்றம் மற்றும் தொற்றுநோய் போன்ற அச்சுறுத்தலை எதிர்கொள்வதை தீர்க்க இதனால் முடியும் என்பது தனது கருத்தாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# உயர்தர வகுப்புக்கு மாணவர்களை இணைக்கும் தேசிய நிகழ்வு

**மாத்தளை சுழற்சி நிருபர்**





கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை உயர்தர வகுப்புகளுக்கு இணைத்துக் கொள்ளும் தேசிய வேலைத் திட்டம் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் மாத்தளை வில்கமுவ கல்வி வலயத்துக்குட்பட்ட நாமினி ஒய மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது 303 மாணவர்கள் உயர்தர வகுப்புகளுக்கு அன்றைய தினம் சேர்த்து கொள்ளப்பட்டனர்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவில் 133 பேரும் கலைப் பிரிவில் 83 பேரும் விஞ்ஞான பிரிவில் 32 பேரும் கணிதப் பிரிவில் 21 பேரும் வர்த்தக பிரிவில் 24 பேரும் பாடசாலை சேர்வு இடாப்பு பட்டியலில் சேர்த்து கொள்ளப்பட்டனர்.

இங்கு உரையாற்றிய ஆளுநர்,

இப்பாடசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாகவும் மாணவர்களின் ஆங்கில திறனை மேம்படுத்துவதற்கான சகல வசதிகளையும் பெற்றுக் கொடுக்கவுள்ளதாக தெரிவித்தார். மேலும் இங்குள்ள வகுப்பறை கட்டடமொன்றை திருத்தும் பணிகளுக்காக ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யவுள்ளதாக அவர் தெரிவித்தார். இந் நிகழ்வில் இராஜாங்க பிரதி அமைச்சர் ரோகண திசாநாயக்க, மாகாண பிரதம செயலாளர் அஜித் பிரேமசிங்க மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேனக ஹேரத், வில்கமுவ கல்வி வலய பணிப்பாளர், நாமினி ஒய மத்திய மகா வித்தியாலய அதிபர் குத்துங்க மற்றும் ஆசிரியர், பெற்றோர் பலரும் கலந்து கொண்டனர்.

## மலைச்சாரல்

# பஸ்களுக்காக மண்ணெண்ணெய் பதுக்கல் வெலிமடையில் பொலிஸார் தேடுதல்

**ஊவா சுழற்சி நிருபர்**



தனியார் பஸ் உரிமையாளர்களால் அதிகளவில் மண்ணெண்ணெய் கொள்முதல் செய்யப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிமடை மற்றும் சுற்றுப்புறங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மண்ணெண்ணெய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக பொது மக்களால் வழங்கப்பட்ட தகவலையடுத்து தனியார் பஸ் மற்றும் அவர்களின் களஞ்சியங்களில் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட பொலிஸார், அதிகளவிலான மண்ணெண்ணெய் கொள்கலன்களை கண்டுபிடித்துள்ளனர்.

பல தனியார் பஸ்களையும் இதன் போது சோதனை செய்தனர். இப்பிரதேசத்தில் பல தனியார் பஸ்கள் மண்ணெண்ணெயில் இயங்குவதையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

மண்ணெண்ணெய்யை பயன்படுத்தி பஸ்களை இயக்குவதால் சூழல் மாசடைவதுடன், தேவைக்கதிகமான மண்ணெண்ணெய்யை சேமித்து வைத்து பொதுமக்களை அசௌகரியங்களுக்குள்ளாக்கியமை போன்ற பல்வேறு குற்றங்களுக்காக அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளதாக வெலிமடைப் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்டுவருகின்றனர்.







'எதிர்காலத்தை செப்பனிடல்' என்னும் தொனிப்பொருளில் ரஷ்யாவில் நடைபெற்றுவரும் மாநாட்டில் கலந்துகொண்டிருக்கும் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், நாடுகளுக்கிடையிலான பொது விஞ்ஞாபனத்தில் கைச்சாத்திட்டதுடன் பெலாரிஸ் நாட்டின் கல்வி அமைச்சரிடம், மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கோரிக்கையையும் முன்வைத்தார்.

'சுற்றுச்சூழலுக்கு ஒரு புதிய சுவாசம்'

# நுவரெலியா ஸ்ரீ பியதிஸ்ஸ கல்லூரியில் மரநடுகை நிகழ்ச்சி ஆரம்பம்

**நுவரெலியா நிருபர்**

நுவரெலியா ஸ்ரீ பியதிஸ்ஸ கல்லூரியின் பாடசாலை மாணவர்களால் "சுற்றுச்சூழலுக்கு ஒரு புதிய சுவாசம்" எனும் தொனிப்பொருளில் மரநடுகை நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வேகமாக அதிகரித்து வரும் சனத்தொகை காரணமாக சுவாசிப்பதற்கு தேவையான ஆக்ஸிஜன் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில், நுவரெலியா ஸ்ரீ பியதிஸ்ஸ பாடசாலை அதிபர் யசந்தி திச்னாவின் யோசனைக்கமைய, சர்வதேச சுற்றாடல் தினத்துடன் இணைந்து இந்த மரநடுகை வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உதவி பிரதேச செயலாளர் சுஜானி வீரசிங்க தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பம்பரகெலே கிராம உத்தியோகத்தர் திருமதி சதுராணி ஆரியதாச, நுவரெலியா வஜிரனான வித்தியாலய துவா பிள்ளைகள் உட்பட பெருந்தொகையான பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# வெள்ளத்தால் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் பாதிப்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் தேயிலைச் செடிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர் சங்கம் புகார் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான தேயிலை தோட்டங்கள் சேற்று நீரில் மூழ்கியதால் இப்பாதிப்புக்குட்பட்டுள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். சேற்று நீர் தேயிலைச் செடிகளின் இலைகளில் பல நாட்கள் தேங்கி நிற்பதால் பெரும்பாலான மரங்கள் இறந்து வருவதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவர்களது முறைப்பாட்டையடுத்து தேயிலைச்சபை அதிகாரிகள் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு உதவும் நோக்கில் அவர்களுக்கான அறிவுறுத்தல்களை வழங்கவும் சேற்று நீரினால் பாதிக்கப்பட்ட தேயிலைச் செடிகளை சுத்தம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.





அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு உடனடி தீர்வு வழங்கக்கோரி கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீடு செய்யும் ஆசிரியர்களால் நேற்று (12) புதன்கிழமை நண்பகல் ஆர்ப்பாட்டமொன்று நுவரெலியா ஹாவாஎலிய மகளிர் உயர்நிலைப் பாடசாலை முன்பாக முன்னெடுக்கப்பட்டது. பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் தமது உணவு இடைவேளையின் போது இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# பஞ்சதள இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா

**நாகர்கோவில் விசேட, கோப்பாய் குறூப் நிருபர்கள்**

யாழ். வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலய பஞ்சதள இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. முற்பகல் 10.00 மணி முதல் 11.00 மணிவரையான சுப வேளையில் 1008 சங்குஸ்தாபனம் நிகழவிருப்பதனால் அடியார்கள் தங்கள் கைகளால் சங்கு ஸ்தாபனம் செய்து நாகதம்பிரானின் திருவருளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாக கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் காலை ஐந்து முப்பது மணிக்கு விநாயகர் வழிபாடு நடைபெற்று அனுக்சை, கணபதி ஹோமம், வஸ்து சாந்தி, சங்கு பூசை நடைபெற்று முற்பகல் 10.00 மணி முதல் சங்குஸ்தாபனம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. அடியார்கள் தங்கள் கைகளினால் சங்கு ஸ்தாபனம் செய்ய விரும்பின் பத்தாயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கி சங்கு ஸ்தாபனம் செய்யலாம் எனவும் கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# மன்னார் மடு அன்னையின் ஆடி மாத திருவிழா

## மாவட்ட செயலகத்தில் முன்னாயத்த கலந்துரையாடல்

**மன்னார் குறூப், தலைமன்னார் விசேட நிருபர்கள்**



மன்னார் மடுமாதா திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்நிலையில் திருவிழா ஒன்பது நாட்கள் நடைபெற்று, ஆடி மாதம் 2ஆம் திகதி திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

மன்னார் மடு அன்னையின் ஆடி மாத திருவிழாவுடன் மருதமடு அன்னைக்கு முடி சூட்டப்பட்ட தினத்தையிட்டு யூபிலி விழாவாகவும் இதன்போது கொண்டாடப்படவுள்ளது.

இந்நிலையில் இந்த திருவிழாவில் அரசியல் தலைவர்கள், பாப்பரசரின் பிரதிநிதி, கர்தினால், ஆயர்கள் உட்பட பல இலட்சம் பக்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இது தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனின் ஏற்பாட்டில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மதியம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றதுடன், இதில் பல விடயங்கள் கவனம் செலுத்தப்பட்டன. சுகாதாரம், போக்குவரத்து, குடிநீர், மின்சாரம், உணவு, தங்குமிட வசதி, பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக உரிய தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டு திருவிழாவுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் திருவிழாவில் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொள்ள இருப்பதால் முப்படை சார்ந்த பாதுகாப்பு அதிகாரிகளுடன் பாதுகாப்பு தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்துநாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், பொலிஸார், கடற்படையினர், இராணுவ உயர் அதிகாரிகளாகிய பலரும் கலந்து கொண்டனர்.

# வடக்கின் உதயம்

## யாழ்ப்பாணத்தில் 3,930 டெங்கு நோயாளர்கள்

**கரவெட்டி தினகரன், கோப்பாய் குறூப் நிருபர்கள்**

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 3,930 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இலங்கையில் இந்த ஆண்டு அதிகரித்த டெங்கு தாக்கத்தில் யாழ். மாவட்டம் இரண்டாவது இடத்தில் உள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. இலங்கையில் கொழும்பிற்கு அடுத்தபடியாக அதிக டெங்கு நோயாளர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் ஜூன் மாதத்தின் முதல் 11 நாட்களில் மாத்திரம் 971 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 25 ஆயிரத்து 891 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 9 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களின் எண்ணிக்கை 5,624 ஆகும் எனவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2024.06.11
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5501 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.31,254,616.00
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 6 0 6 3 1 1

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 076 — ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 6 3 1 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3743 — சீட்டிழுப்பு திகதி 2024.06.11 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.60,875,281.56
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 01 08 38 41 — விசேட எழுத்து A — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 90938

Mega POWER — 1849 — 2024.06.11 — 10508 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.435,697,148.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 10 — வெற்றி இலக்கங்கள் 45 54 60 69

VIP — திகதி 2024.06.11 — சீட்டிழுப்பு இலக்கம் 0327
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 9 8 8 1 7 0
L7 எழுத்து S — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ..31,254,774.04

ராசி சுப பலன் — திகதி 2024.06.11 — சீட்டிழுப்பு இலக்கம் 810 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,000,000.00
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 04 20 41 46 — தனயோக இலக்கம் 30704 — நாளுக்கான விதி எண் 20

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1531 — 2024.06.11 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.96,058,813.04
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 26 34 58 69 — விசேட எழுத்து Q — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 20856


# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



ஓய்வுபெற்ற பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் பத்மநாதன் முருகவேல் அகில இலங்கை சமாதான நீதவானாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவால் வழங்கப்பட்ட நியமனத்துக்கு அமைய, யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி டி.எஸ். சூசைதாஸ் முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சங்கரத்தை, வட்டுக்கோட்டையில் தற்போது வசிக்கும் அவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். முன்னாள் பிரபல விளையாட்டு வீரரான அவர், சர்வதேச, தேசிய மெய்வன்மை போட்டிகளில் தீர்ப்பாளராக கடமையாற்றி வருகிறார்.

தேசிய மட்ட வேகநடை போட்டிகளிலும் மத்தியஸ்தராக கடமையாற்றி வருகிறார். மேலும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்பினால் தரப்படுத்தப்பட்ட கிரிக்கெட் மத்தியஸ்தராகவும் அவர் உள்ளார்.

# குருநகரில் 22Kg கேரள கஞ்சா கைப்பற்றல்



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், குருநகர் பிரதேசத்தில் 22 கிலோகிராம் கேரள கஞ்சா பொலிஸாரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைப்பற்றப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குருநகர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது 10 பொதிகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் இந்த கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், இதனுடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# டிப்பர் மோதி ஒருவர் மரணம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ். கைதடி, நுணாவில் பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி ஏ 09 வீதி ஊடாக பயணித்த இந்த டிப்பர் வாகனம் மோதி இவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தை தொடர்ந்து டிப்பர் வாகன சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் வீதியால் நடந்து சென்ற போதே இந்த அசம்பாவிதத்துக்கு உள்ளாகியுள்ளார். 35 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபரிடம் ஆவணங்கள் எதுவும் இல்லையாயினும், இந்த நபர் தொடர்பான விபரங்களை அறிய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கிழக்கின் குரல்



## அஷ்ரப்பின் கனவை நனவாக்குவேன்

# ஒலுவில் துறைமுகம் கடற்றொழில் துறைமுகமாக விரைவில் அபிவிருத்தி

ஒலுவில் துறைமுகம் கடற்றொழில் துறைக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்யப்படுமென தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இத்துறைமுகம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் அமரர் அஷ்ரப்பின் கனவையும் நனவாக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற ஒலுவில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான விசேட கூட்டத்திலேயே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்தும் தெரிவித்ததாவது,



"ஒலுவில் துறைமுக அபிவிருத்தி தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபையும் சில முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. எனது வேண்டுகோளின் பேரில் அந்த நகர்வுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் நான் ஒலுவில் துறைமுகத்துக்கு அண்மையில் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டேன். இந்த துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் தமது கருத்துகள் உள்வாங்கப்படவில்லையென மக்கள் என்னிடம் தெரிவித்தனர். அதிலுள்ள யதார்த்தத்தை என்னால் புரிந்துகொள்ள முடியுமாகவுள்ளது. இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் நான் விரைந்து முடிவெடுக்க வேண்டிய கடப்பாடு எனக்கு உள்ளது.

இந்த துறைமுகத்தை வர்த்தக துறைமுகமாக அபிவிருத்தி செய்வதை விடவும், கடற்றொழில் துறைமுகமாக அபிவிருத்தி செய்வதே பொருத்தமானது. இது எனது அபிப்பிராயம். அதுவே இப்பகுதி மக்களின் விருப்பமாகும். பிரதேச மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நாட்டுக்கும் நன்மை ஏற்படும் விதத்தில் இதனை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

மர்ஹூம் அஷ்ரப் இத்துறைமுகம் தொடர்பாக கண்ட கனவை நான் நிச்சயம் நனவாக்குவேன்" என்றார்.

# க.பொ.த. உ/த பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு



ஆலையடிவேம்பு கல்விக் கோட்டத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ள 72 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது மாணவர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை பாண்டிருப்பு வட பத்திரகாளியம்மன் ஆலய மண்டபம் மற்றும் ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்துகொண்டார்.

இதன்போது தாம் எதிர்நோக்கும் நில அபகரிப்பு, நிர்வாக புறக்கணிப்பு, உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

# மின்கம்பத்துடன் டிமோ வாகனம் மோதி விபத்து

தோப்பூர் குறூப் நிருபர்



திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதியில் பச்சநூர் தேவாலயத்துக்கு முன்பாக மின்சாரக் கம்பத்துடன் மோதி டிமோ பட்டா ரக வாகனம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் விபத்துக்குள்ளானது.

தோப்பூரிலிருந்து திருகோணமலை நோக்கி இந்த வாகனம் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென்று மாடொன்று குறுக்கிட்டதன் காரணமாக வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. இதன்போது குறுக்கிட்ட மாடு அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளது. ஆயினும் வாகன சாரதி உயிர் ஆபத்தின்றி தப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை விபத்தினால் மின் கம்பம் மற்றும் வாகனத்தின் முன்பகுதியும் முழுமையாக சேதமடைந்துள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

# பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்டெடுத்தவர் ஜனாதிபதி

## காரைதீவில் முஷாரப் எம்.பி.

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு தாக்கங்களினால் வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டம் கட்டமாக மீட்டெடுத்துள்ளார் என்று அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

ஜனாதிபதி இன, மத, பிரதேச வேறுபாடின்றி நாடு என்ற ரீதியில் பணியாற்றி வருவதாகவும் அவரது நிர்வாகத்தின் கீழ் நாட்டை முன்னிலைக்கு கொண்டு செல்ல முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து காரைதீவு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட நிறுவனங்களுக்கும் நிர்மாணங்களுக்குமாக சுமார் பத்து மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்திருந்தார். அதன் ஒரு கட்டமாக சமூக சேவை நிறுவனங்களுக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கும் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு, காரைதீவு பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்திரன் தலைமையில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலக திட்டமிடல் உத்தியோகத்தர் பி.ராஜகுலேந்திரனின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு முஷாரப் எம்.பி. பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொருட்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வின் போதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



"நாடு வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளை நாட்டை மீட்ட சிறந்த தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களை நான் பார்க்கின்றேன். அவரது ஆட்சியில் நாட்டை முன்னிலைக்கு கொண்டு செல்ல முடியும். இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் விடுத்த வேண்டுகோளின் கீழ் சில பணிகளை காரைதீவு பிரதேச செயலக எல்லைக்குள் மேற்கொண்டேன். நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் இன பிரதேச ரீதியாக செயற்படுபவன் இல்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

நிகழ்வின் போது காரைதீவு பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும் அந்நூர் ஜும்ஆ பெரியபள்ளிவாசலின் உதவித் தலைவரும் ஜாஹீர் பௌண்டேசன் மற்றும் சமூக அபிவிருத்தி சபையின் ஸ்தாபகத் தலைவருமான ஏ.எம். ஜாஹீர், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் ஏ.எம்.அஷாம் மௌலவி உள்ளிட்ட அதிதிகளும் பிரசன்னமாகியிருந்தனர்.

# உலக சமுத்திர தினம்; அறுகம்பையில் நடைபவனி




அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

உலக சமுத்திர தினத்தையிட்டு உல்லே அல்அக்ஸா வித்தியாலயத்தின் அனுசரணையுடன் அறுகம்பை கிளீன் ஸ்ரீ லங்கா அமைப்பினர் ஒழுங்கு செய்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு மற்றும் நடைபவனி அண்மையில் அறுகம்பையில் நடைபெற்றது.

மாசற்ற கடலை உருவாக்குவதை தொனிப்பொருளாக கொண்டு ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வு, கிளீன் ஸ்ரீலங்கா அமைப்பின் தலைவர் ஏ.முசம்மில் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கை சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ்.அப்துல் மாலிக் நடத்தி வைத்துள்ளார். இதனை அடுத்து விழிப்புணர்வூட்டும் நடைபவனி நடைபெற்றது. இதில் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் எப்.எம்.உவைஸ், அறுகம்பை விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி எச்.என்.என்.பிரேமரத்ன, பொத்துவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி என்.எம்.டி.மலிந்த, கரையோரம் பேணல் உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# படைப்பாக்க போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரல்

ஒலுவில் விசேட நிருபர்

கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான தமிழ்மொழி மூலமான படைப்பாக்க போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் ச.நவநீதன் அறிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள அரச அலுவலகங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் பன்முக ஆளுமை, ஆக்க திறமைகள் மற்றும் கலை திறமைகளை வெளிப்படுத்தும் முகமாக படைப்பாக்க போட்டி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். சிறுகதை, குறுந்திரைப்பட திரைக்கதை பிரதி, புதுக்கவிதை, மரபுக் கவிதை, பாடலாக்கம், ஓவியம், புகைப்படம் ஆகிய படைப்பாக்கங்கள் போட்டிக்கான விண்ணப்பங்களாக கோரப்பட்டுள்ளது.

சிறுகதையானது 'தனித்துவத்தின் மகிமை', 'கடமையில் காணும் இன்பம்', 'கூண்டுக்கிளிகளின் பறப்பு' எனும் தொனிப்பொருள்களை அடிப்படையாக கொண்டவையாக அமைய வேண்டும்.

குறுந்திரைப்பட திரைக்கதையானது எழுத்துருவில் 'அறிவியல் மற்றும் கலாசார மரபுகளை பின்பற்றுவதில் இளம் தலைமுறையினர் எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான தீர்வுகளும்', 'சூழலை பேணுவோம்' 'சமூக பிரச்சினைகளுக்கான தீர்வு' ஆகிய தலைப்புகளை மையப்படுத்தியதாக அமைய வேண்டும்.

மரபுக்கவிதையானது 'நாலு இனங்கள் நமதெண்ணம் ஒன்று', 'நூல் தோட்டம் அறிவின் தோட்டம்' எனும் தொனிப்பொருள்களை அடிப்படையாக கொண்டதாக அமைய வேண்டும்.

புதுக்கவிதை, ஓவியம், புகைப்படம் போன்றவற்றுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமது ஆக்கங்களை திணைக்கள தலைவருடாக எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் மாகாண பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

# காணி ஆவணங்கள் பெறுவதற்கு ஆலோசனை

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி பிரதேச செயலக பிரிவில் உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் காணி ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனை வழங்கும் நடமாடும் சேவை நேற்று புதன்கிழமை புதிய காத்தான்குடி நூராணியா ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் உதயசிறீதரின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையின் போது, காணி அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்பவர்கள் தமது ஆவணங்களோடு சென்று தமக்கு தேவையான ஆலோசனை மற்றும் வழிகாட்டலை பெற்றுக்கொண்டனர். இதில் காத்தான்குடி பிரதேச செயலாளர் உதயசிறீதர், உதவிப் பிரதேச செயலாளர் சீல்மியா உட்பட மக்களுக்கு சேவைகளை வழங்கினர்.

# நஞ்சற்ற விவசாய உற்பத்திகளை மேற்கொள்ள விவசாயிகள் ஊக்குவிப்பு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் இயற்கை வளங்கள் அதிகளவில் காணப்படுவதுடன், சுற்றுச்சூழலை பாதுகாத்து, உள்ளூர் வளங்களை அதிக உச்சத்தில் பயன்படுத்தி, நஞ்சற்ற விவசாய உற்பத்திகளை மேற்கொள்வதற்கு உள்ளூர் விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டு வருவதாக வாகரை உதவி பிரதேச செயலாளர் அர்ச்சனா புவேந்திரன் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கங்களின் பாரம்பரிய உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நிகழ்வு, வாகரை பிரதேச செயலக முன்றலில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தால் பாரம்பரிய உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து சந்தைப்படுத்தும் திட்டம் அமுலாக்கப்படுகிறது. இந்நிகழ்வில் மேலும் தெரிவித்த அவர்,

"சமகாலத்தில் இரசாயனம் கலந்த தேக ஆரோக்கியத்தை பாதிக்கும் உற்பத்திகள் பெருகி விட்டன. இவற்றை உட்கொள்வதால் நாமும் நமது எதிர்கால சந்ததியும் உடல் ஆரோக்கியம் அற்றவர்களாக மாறக்கூடிய நிலைமை உள்ளது.

எனவே நில வளமும் நீர் வளமும் சேதன வளமும் நிறைந்துள்ள வாகரையில் நஞ்சற்ற விவசாய உற்பத்திகளை மேற்கொண்டு, அதன் மூலம் இங்குள்ள மக்கள் அதிகூடிய வருமானத்தை ஈட்டிக்கொள்ள ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்தகைய சிறந்த திட்டத்தை மக்கள் மத்தியில் அமுல்படுத்தி வரும் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் சேவைகள் பாராட்டப்பட வேண்டும்" என்றார்.

இதேவேளை இங்கு கருத்து தெரிவித்த இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் ரீ.திலீப்குமார்,

"இயற்கை வளத்தை குன்றாமல் பாதுகாத்து அவற்றை பயன்படுத்தி பிரதேச மக்கள் பொருளாதாரத்திலும் ஆரோக்கியத்திலும் அபிவிருத்தியிலும் முன்னேற வேண்டும். இதற்காகவே மூன்றாண்டுகளுக்கு முன்னர் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் பிரதேச மக்கள் பயனடைய வேண்டும். கூட்டுறவுச் செயற்பாட்டின் மூலம் பிரதேச மக்கள் சமூக பொருளாதார, கல்வி, சுகாதாரம், கலாசார சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் தாங்களாகவே உணர்ந்து முன்னேறும் நிலை உருவாக வேண்டும் என்பதை கருப்பொருளாகக் கொண்டே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது" என்றார்.


## அகதிகளாக இந்தியா சென்று

# நாடு திரும்பியோருக்கு விழிப்புணர்வூட்டும் திட்டம்

தம்பலகாமம் குறூப், திருகோணமலை தினகரன் நிருபர்கள்

அகதிகளாக இந்தியாவுக்குச் சென்று மீண்டும் அங்கிருந்து இலங்கைக்கு திரும்பியுள்ளவர்கள் எதிர்நோக்கி வரும் காணிப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கவும் மற்றும் அவர்கள் ஏனைய சேவைகளை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் விழிப்புணர்வூட்டும் திட்டம் திருகோணமலை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயலமர்வு, திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அம்மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நடைபெற்றது. திருகோணாமலை மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் IOM நிறுவனமும் இணைந்து இந்த செயலமர்வை நடத்தியது.



இந்தியாவிலிருந்து திரும்பியுள்ளவர்களின் காணி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வாக இந்த செயலமர்வு அமைந்துள்ளதுடன், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திரும்பியுள்ளவர்களை சமூகத்துடன் மீள ஒருங்கிணைக்கும் திட்டத்துக்குள் உள்வாங்கும் நடவடிக்கையாக இந்த செயலமர்வை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே.விஜயதாசன், பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பொ.தனேஸ்வரன், தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# 663 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க சர்வதேச நாணய நிதியம் உறுதி

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியம் 663 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக உறுதியளித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், இத்தகைய மாற்றங்களுடாக பல்வேறு அவதூறுகளை கேட்க நேர்ந்தாலும் நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக முன்னேற்றமடைந்து வருகிறது என்றும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் ஒத்துழைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தும் நிகழ்வு நேற்று தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் விளக்கமளிக்கும்போதே அமைச்சர் பந்துல குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரத்தின் பின்னர் எந்தவொரு [காலத்திலும் எதிர்கொள்ளாத பொருளாதார நெருக்கடி நிலையை நாடு எதிர்கொண்டது.

பொருளாதார புள்ளி விபரங்களுடன் சர்வதேசத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்கு அமைவாக அல்லாமல் நாட்டு மக்களின் மனதில்தவறான அபிப்பிராயங்களை விதைக்கும் கூற்றுக்களைத் தெரிவித்து வருவது இடம்பெறுகிறது. அதனை நிவர்த்தி செய்வது ஊடகங்களின் பொறுப்பாகும்.

எந்த ஜனாதிபதி அரசாங்கத்தை ஆட்சி செய்தாலும் எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும், நாட்டில் சுமக்க முடியாத வரவு செலவுத் திட்ட குறை நிரப்பே காணப்படுகிறது.

அன்றாட செலவுகளை நிவர்த்தி செய்யும் அளவுக்கு வருமானம் எந்தக் காலத்திலும் அரசாங்கத்திற்கு கிடைக்கவில்லை. எந்த அரசாங்கத்துக்கும் அன்றாடம் செலவு செய்வதற்கு நிதி தேவைப்படுகிறது.

அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதியக்காரர்களுக்கான கொடுப்பனவு, சமுர்த்தி உள்ளிட்ட கொடுப்பனவுகள் அரசாங்கத்தினாலேயே வழங்கப்படுகின்றன. அத்துடன் கடனுக்கான வட்டியையும் செலுத்த வேண்டியுள்ளது.

அந்த வகையில் எவர் அரசாங்கத்தை ஆட்சி செய்ததாலும் செலவுகளை நிவர்த்தி செய்வதற்கான வருமானம் கிடையாது.

கடந்த வருடத்தில் தேசிய வருமான வரித் திணைக்களம் மூலம் 1550 பில்லியன் ரூபா வருமானமாக கிடைத்துள்ளது. சுங்கத் திணைக்களத்தின் மூலம் 923 பில்லியனும் கலால் திணைக்களம் மூலம் 169 பில்லியனும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மூலம் 20 பில்லியனும் வருமானமாக கிடைத்துள்ளது.

வரியல்லாத வருமானம் 219 பில்லியனாகும். அனைத்து வைப்புக்கள் மூலம் 304 பில்லியன் வருமானம் கிடைக்கின்றது.

அந்த வகையில் அரசாங்கத்திற்கு மொத்தமாக 3201 பில்லியன் ரூபா கிடைக்கின்றது. எனினும் அரசாங்கத்தின் செலவு 4394 பில்லியனாகும். 1.1 ட்ரில்லியன் பற்றாக்குறையாக காணப்படுகிறது.



அபிவிருத்திக்கான செலவுகளும் கடன் மூலமாகவே பெறப்படுகின்றன. நாம் அனைத்து காலங்களிலும் தேசிய மற்றும் சர்வதேச கடன் மூலமாக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம்.

அவ்வாறு பெற்றுக் கொள்ளும் கடன்கள் பற்றாக் குறையாக காணப்படும் போது அரசாங்கம் பணம் அச்சடித்தது. பணம் அச்சடித்தல், பாரியளவு கடன்களை பெற்றுக் கொண்டமை, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணயநிதியத்திடம் கடன் பெற்றுக் கொள்ளாமல் இந்த செலவுகளை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்ல முயற்சித்த போது சர்வதேச சந்தைக்குச் சென்று கடன் பெற நேர்ந்தது.

நாட்டின் சுதந்திரத்திற்கு பின்னர் 2001ஆம் ஆண்டு அரசாங்கம் பொருளாதார ரீதியில் பின்னடைவு காண ஆரம்பித்தது. பொருளாதார நெருக்கடி உக்கிரமடைந்தது.

அப்போதே நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைக்கு சென்றோம். அந்த உடன்படிக்கைக்கிணங்க நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக மாற்று நடவடிக்கைகள் பலவற்றை பின்பற்றி வருகின்றோம். அந்தவகையில் பொருளாதாரம் முன்னேற்றம் காண ஆரம்பித்தது. ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களினால் பெரும் அவதூறுகளை கேட்க நேர்ந்தது.

பல்வேறு வேலைத் திட்டங்களை வரவு செலவு திட்டம் மூலம் கொண்டு வந்து பொருளாதார முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மீண்டும் இவ்வாறான நிலைமை ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் பாராளுமன்றத்தில் சட்டங்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தோம்.

அதற்காக நிதி பொறுப்பு முகாமைத்துவ சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தோம். அந்த சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது அதற்கு தலைமைத்துவம் வழங்கியவர் ரணில் விக்கிரமசிங்கவே. அதற்கு அமைச்சரவையின் அனுமதியும் கிடைத்தது.

2006ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஐந்து வீத குறை நிரப்பை கொண்டு வரும் வகையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து அந்த விடயங்களை கடைப்பிடித்து வந்திருந்தால் நாடு இந்தளவு பாரிய கடனை பெற்றிருக்க வேண்டிய அவசியம் கிடையாது. நாடு இந்தளவு வங்குரோத்து நிலையையும் அடைந்திருக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



### பணம் அச்சிடுவது நிறுத்தப்பட்டதால்

# வரவு செலவுத் திட்ட குறை நிரப்பை ஈடுசெய்ய நிதியை தேடுவது அவசியம்

## ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் சமரதுங்க தெரிவிப்பு

நாட்டில் பணம் அச்சிடுவதை அரசாங்கம் முற்றாக நிறுத்தியுள்ள நிலையில், வரவு செலவுத் திட்ட குறை நிரப்பை நிவர்த்தி செய்து கொள்ள தேவையான நிதியை தேடிக்கொள்ள வேண்டியுள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச். சமரதுங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய வியூக மறுசீரமைப்புகளை மேற்கொள்ளாது இலகுவான வழியில் பயணித்தமையே நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, எமது பொருளாதார முகாமைத்துவத்தின் போது வருமானம் மற்றும் செலவுகளுக் கிடையிலான பாரிய இடைவெளியை முன்னெடுத்துச் செல்வதும் சிக்கலுக்குரிய விடயமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பான விசேட தெளிவூட்டல் நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், 1954ஆம் ஆண்டு முதல் இதுவரை ஆறு தடவைகள் மாத்திரமே வரவு செலவுத் திட்ட அறிக்கையில் மேலதிக நிலை காணப்பட்டுள்ளதுடன் அதனைத் தவிர இதுவரையான வரவு செலவுத் திட்டத்தில் பாரிய குறை நிரப்புகளே காணப்படுகின்றன.

அதன் தொடர்ச்சியாகவே இந்த பாரிய இடைவெளி மற்றும் குறை நிரப்பு தொடர்ந்தும் இடம்பெறுகின்றது.

அந்த வகையில் இவ்வாறான வரவு செலவுத் திட்ட குறை நிரப்பை சரி செய்வதற்காகவே பெரும்பாலும் பணம் அச்சடிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் தற்போது பணம் அச்சடிப்பதை அரசாங்கம் முழுமையாக நிறுத்தியுள்ளது. அதனால் குறை நிரப்பை சரி செய்வதற்கு அரசாங்கம் தேவையான வருமானத்தை ஈட்டிக் கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன் அரசாங்கத்தினால் சுமக்க முடியாத அளவுக்கு நலன் புரி நடவடிக்கைகளுக்கு நிதி செலவிடுவதும் வரவு செலவுத் திட்ட குறை நிரப்புக்கு மற்றுமொரு காரணமாகும்.

வருமானத்தை ஈட்டிக் கொள்ளக் கூடிய மற்றும் பொருளாதார மறுசீரமைப்பை மேற்கொண்டுள்ள நாடுகளுக்கு அவ்வாறான நலன்புரி நடவடிக்கைகளுக்கு பணம் ஒதுக்குவது பெரும் சிக்கலாக அமையாது.

அந்த வகையில் அரசாங்க நிறுவனங்கள் தொடர்ச்சியாக நட்டமீட்டி வருவதும் வரவு செலவுத் திட்ட குறை நிரப்பு ஏற்பட ஒரு காரணமாகிறது.

2019 ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் திகதி அரசாங்கம் மாற்றமடைந்து ஒரு வாரத்துக்குள்ளேயே வரிச்சலுகை வழங்கப்பட்டதால் நூற்றுக்கு 12 வீதமாக காணப்பட்ட வரி வருமானம் நூற்றுக்கு 04 வீதமாக குறைவடைந்தது. அத்துடன் வரி அதிகரிப்பும் மேற்கொள்ளப்படாமல் குறைந்த வட்டி வீதமே காணப்பட்டது. அந்த வகையில் பொருளாதார நெருக்கடிக்கு முக்கியமான காரணங்களாக அவற்றையும் குறிப்பிட முடியும்.

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நூற்றுக்கு 70 வீதமாக நாட்டின் பொருளாதார பண வீக்கம் பதிவாகியுள்ளது.

இறுதியில் ஏப்ரல் 2022 ஏப்ரல் 12ஆம் திகதியளவில் நாம் பெற்றுக் கொண்ட கடனை திருப்பிச் செலுத்தவும் எம்மிடம் நிதி இல்லை என்பதை உலகிற்கு தெரிவிக்க நேர்ந்தது.

இந்த நிலைமை தொடர்ந்திருந்தால் நாடு இப்போது எத்தகைய விளைவுகளை எதிர்நோக்கி இருக்கும் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

தற்போது மத்திய வங்கியிலிருந்து நிதி பெற்றுக் கொள்ளாமல்



திறைசேரியினால் நிதியை முகாமைத்துவம் செய்ய முடிந்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு எம்மால் முடிந்துள்ளது. வெளிநாட்டுக் கையிருப்பில் முன்னேற்றம் காணப்படுகிறது. அந்த வகையில் பொது பொருளாதார கலந்துரையாடல்களை நாட்டில் முன்னெடுத்து தேசிய ஒருமைப்பாட்டுடன் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.

அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட செய்தியாளர் மாநாட்டில் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், ஆசிரிய பீடப் பணிப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் சிசிர பரணதந்திரி, சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவர் சட்டத்தரணி சுதர்ஸன குணவர்தன, ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் பேராசிரியர் சுதந்த லியனகே, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் இந்திக்க ஜயரத்ன உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### IMF கடன் ஒத்துழைப்பு வேலைத் திட்டதுடன்

# கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அரசு முன்னுரிமை அளித்தே செயற்படுகிறது

## மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கலாநிதி சந்திரனாத் அமரசேகர

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்புக்கான வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பது மற்றும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முழுமைப்படுத்துதல் ஆகியவற்றுக்கு அரசாங்கம் முன்னுரிமையளித்து செயற்படுவதாக மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கலாநிதி சந்ரனாத் அமரசேகர தெரிவித்தார்.

அரசாங்கத்தின் திட்டமிட்ட செயற்பாடுகளால் 2023ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி 2.3 வீதமாக காணப்பட்டதுடன் இந்த வருடத்தில் அதனை 03 வீதமாக அதிகரிக்க முடியுமென எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் மிக மோசமான பணவீக்கம் 2022 செப்டம்பர் மாதத்திலேயே பதிவாகியுள்ளதாகவும் அது நூற்றுக்கு 45 வீதத்தால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டதாகவும் தெரிவித்த மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், கொரோனா சூழ்நிலை, தேசிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட தவறான பொருளாதார கொள்கை மற்றும் தீர்மானங்களும் இந்த நிலைக்கு காரணமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட சமூக, அரசியல் நெருக்கடி குறுகிய காலத்தில் உருவான ஒன்றல்ல என்பதை சுட்டிக்காட்டிய அவர், பல வருடங்களாக மேற்கொண்ட நடவடிக்கைகளின் பிரதிபலனே அது என்றும் தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக தெளிவுபடுத்தும் நிகழ்வில் விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

இந்த நெருக்கடிகளின் பின்னர் அரசாங்கமும் மத்திய வங்கியும் பல முக்கிய கொள்கைகளை நடைமுறைப்படுத்தின.

முதலாவதாக நிதி ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதேபோன்று கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. மத்திய வங்கி மூலம் கொள்கை ரீதியாக வட்டி வீதம் நூற்றுக்கு 7 வீதத்தால் அதிகரிக்கப்பட்டது.

அதன் பின்னர் அதே வருடத்தில் மேலும் நூற்றுக்கு 2 வீதத்தால் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டது.

அதேபோன்று மத்திய வங்கியினால் நிதி நிறுவனங்களின் நிலையான தன்மையை பாதுகாப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அந்த வகையில் அரசாங்கத்தின் வரி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக முக்கிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

மீண்டு வரும் செலவினத்தை நீக்கியமை, ஆட்சேர்ப்புகளை நிறுத்தியமை, அவசியமற்ற செலவுகளை கட்டுப்படுத்தியமை, அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதில் கட்டுப்பாடுகளை விதித்தமை அரசாங்கத்தின் முக்கிய நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்தமை போன்றவை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டன.

அந்த மறுசீரமைப்பு வேலைத் திட்டம் மூலமான திட்டங்கள் தற்போது பயன் தர ஆரம்பித்துள்ளன. அந்த வகையில் 2023ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் நூற்றுக்கு 2 . 3 வீதமாக பதிவாகியுள்ளது.

அந்த வகையில் இந்த வருடத்தில் நூற்றுக்கு 2 அல்லது மூன்று வீத பொருளாதார வளர்ச்சியை நாம் எதிர்பார்த்துள்ளோம். நாட்டில் தற்போது வருடாந்த



பணவீக்கம் நூற்றுக்கு ஒன்பதாக குறைவடைந்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முன்னேற்றகரமாக இடம் பெற்று வருகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்புக்கான வேலைத் திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறான நிலையிலும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும் இதற்கு முன்பிருந்த பொருளாதார பாதிப்புகள் இப்போதும் காணப்படுகின்றன.

அதேவேளை, நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்பு தற்போது 5.5 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

அத்துடன் நாட்டு மக்கள் மற்றும் நிறுவனங்கள் கடன் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக மத்திய வங்கியின் வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்புக்கான வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பது மற்றும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முழுமைப்படுத்துவது ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

லோரன்ஸ் செல்வநாயகம்
படங்கள் : மாலன் கருணாரட்ன

# கொழும்பு தேசிய மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக்கு அதிநவீன படுக்கைகள்

கொழும்பு ரோட்டரி கழகத்தின் வேண்டுகோளின் பேரில், மெடிக்கல் ஹெல்ப் இன்டர்நேஷனல் அமைப்பு இலங்கை தேசிய மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் உள்ள புதிய அவசர சிகிச்சை மற்றும் பூர்வாங்க சிகிச்சை பிரிவுக்கு 30 புதிய அதிநவீன படுக்கைகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் புதிய அவசர சிகிச்சை மற்றும் பூர்வாங்க சிகிச்சைப் பிரிவில் இந்தப் புதிய படுக்கைகளை சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால வழங்கி வைத்தார்.

கொழும்பு ரோட்டரி கழகத்தின் மேற்குப் பிரிவின் ஆளுநர் ஜெரோம் ராஜேந்திரத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இத்தத் திட்டத்துக்கு மெடிக்கல் ஹெல்ப் இன்டர்நேஷனல் நிதியுதவி வழங்குகின்றது. ஏற்கனவே செயற்பட்டு வரும் இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக இப்படுக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

டாக்டர் மஹிபால தனது உரையில், அரசு மருத்துவமனைகளுக்கு சுகாதாரம் தொடர்பான நன்கொடைகளைக் கையாள்வதில் சுதந்திர உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மருத்துவ நன்கொடைக் குழுவின் (IDFMDC) முக்கிய பங்கை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

ஆரம்பத்தில் MHI ஆல் முன்மொழியப்பட்ட இத்திட்டம் சுகாதார அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது, இந்த குழு நன்கொடையாளர்களின் பொறுப்புணர்வை உறுதி செய்கின்றது.

இது ஒரு நிலையான முன்முயற்சியாகும், வெளிப்படைத்தன்மை கொண்ட இத்திட்டம், சுகாதார அமைப்பின் திறமையான எதிர்காலத்திற்கான அர்ப்பணிப்புக்கான சான்றாகும்.






மெடிக்கல் ஹெல்ப் இன்டர்நேஷனல் என்பது இலங்கை மற்றும் அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஒரு பொதுத் தொண்டு நிறுவனமாகும், இது உலகெங்கிலும் உள்ள பல தொண்டு மற்றும் பரோபகார அமைப்புகளுடன் இணைந்து சுகாதாரம் தொடர்பான திட்டங்களை ஆரம்பிக்க ஒத்துழைக்கின்றது.

MHI, அதன் பங்காள நிறுவனங்களின் வலுவான ஒத்துழைப்புடன், உலகம் முழுவதிலுமிருந்து 60 பில்லியனுக்கும் அதிகமான மருந்துகளை ஒருங்கிணைத்துள்ளது.

அதன் கூட்டுப் பங்காளிகளுடன் இணைந்து, MHI கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கைக்கு ரூபாய் 200 மில்லியன் பெறுமதியான மருந்துகள், நுகர்பொருட்கள் மற்றும் சுகாதாரம் தொடர்பான உபகரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது, இது சுகாதாரத் துறையை கணிசமாக மேம்படுத்தியுள்ளது. MHI இன் முக்கிய பங்குதாரர்களில் ஒன்றான எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ்/ஈஎஃப்எல், கப்பற் போக்குவரத்துக்கு நிதியுதவி அளித்தது.

டாக்டர் பிரதீப் ரத்னசேகர, டாக்டர் ருவன் துஷார, டாக்டர் இந்திக லனோரோல், டாக்டர் விக்கிரமசிங்க (கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம்), திலினி டி சில்வா, கலன எரகொட, மற்றும் மெஹறாஜ் சாலி ஆகியோரும் மெடிக்கல் ஹெல்ப் இன்டர்நேஷனல் சார்பாக ஷான் சண்முகநாதன், அனிஷா தர்மதாச முன்னாள் தலைவர்கள் மற்றும் கொழும்பு மேற்கு ரோட்டரி கழகத்திலிருந்து திலக் குணவர்தன ஆகியோரும் கையளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டனர்

# பாவாணர் அக்கரைப்பாக்கியனின் வாழ்வியல் பயணம் நூல் வெளியீடு

அக்கரைப்பற்று தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர் செ.பேரின்பராசாவினால் தொகுக்கப்பட்ட 'பாவாணர் அக்கரைப்பாக்கியனின் வாழ்வியல் பயணம்' எனும் நூல் வெளியீட்டு விழா கோளாவில் பெருநாவலர் வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளருமான வா.குணாளன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர். திரவியராஜ் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக முன்னாள் எம்.பி கவீந்திரன் கோடீஸ்வரன் கலந்து கொண்டார்.

விசேட அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அனுசியா சேனாதிராஜா, டொக்டர் சித்திரா தேவராஜன், ஓய்வுநிலை அதிபர் க.கோபாலபிள்ளை, தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர் க.இரத்தினவேல் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்தினை ஆசிரியை சாமந்தி டினேஸ் வழங்க வரவேற்புரையை தமிழ்ச் சங்க செயலாளர் வி.சிவன்செயல்



வழங்கினார். தலைமையுரையினை தலைவர் வா.குணாளன் வழங்கினர்.

நூல் அறிமுகத்தை பிரதேச செயலாளரும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இணைந்து செய்து வைத்ததுடன், நூலாளர் பாவாணர் அக்கரைப்பாக்கியனிடம் இருந்து நூலின் பிரதிகளை பெற்றுக் கொண்டனர். அதிதிகளின் கரங்களினால் முதல் நூலினை விரிவுரையாளர் கலாநிதி ச.புவனேந்திரன் சார்பாக அவரது சகோதரர் ஆசிரியர் பிரதீபன் பெற்றுக்கொண்டார்.

நூல் அறிமுக உரையினை திருக்கோவில் ஆசிரியர் வளநிலைய முகாமையாளரும் தமிழ்ச்சங்கத்



தின் உபதலைவருமான ந.சுதாகரன் வழங்க, நூல் நயவுரையினை ஓய்வுநிலை அதிபர் க.தவராசா வழங்கினார்.

நிகழ்வில் ஆசிரியை ஜெகதாரணியினால் நெறியாள்கை செய்யப்பட்ட நடனம் இடம்பெற்றதுடன், நூலாளர் அக்கரைப்பாக்கியன் மற்றும் பிரதேச செயலாளர் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு அக்கரைப்பாக்கியன் அவர்களிடம் கல்விகற்ற பழைய மாணவர்களும் நூலாளரை பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

இறுதியாக அதிதிகளின் உரை இடம்பெற்றது.

**வி.சுகிர்தகுமார்**
வாச்சிக்குடா விஷேட நிருபர்

# மட்டக்களப்பு புதிய மாவட்ட செயலக தளபாட கொள்வனவுக்காக ரூ.75 மில்லியன் நிதி ஒதுக்கீடு





இராஜாங்க அமைச்சர் சிவ.சந்திரகாந்தன் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில் மட்டக்களப்பு புதிய மாவட்ட செயலக அலுவலக தளபாட கொள்வனவுக்காக ரூ.75 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒல்லாந்தர் கோட்டையில் இயங்கிவந்த மாவட்ட செயலகத்தின் இடவசதி பற்றாக்குறை காரணமாக புதிய மாவட்ட செயலக கட்டடத்தின் ஆரம்ப வேலைகள் திராய்மடு பகுதியில் கடந்த 2016ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் நிர்மாண பணிகள் மிக நீண்ட காலமாக இழுபறியில் காணப்பட்டமையால் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவராக சிவ. சந்திரகாந்தன் பொறுப்பேற்றதன் பின்னர், அதற்கான நிதியை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு மட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பயனாக புதிய மாவட்ட செயலகத்தின் பணிகளை முழுமையாக முடிவுறுத்தி இந்த ஆண்டு மக்கள் பாவனைக்கு வழங்குவதற்கான சாத்தியப்பாடு உருவாகியுள்ளது.

அந்தவகையில் மட்டக்களப்பு திராய்மடுவில் அமைந்துள்ள புதிய மாவட்ட செயலக கட்டடத்தை, கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி சென்று பார்வையிட்டிருந்தார்.

புதிய மாவட்ட செயலகத்துக்கு தேவையான ஏனைய அடிப்படை வசதிகள் தொடர்பாக, இராஜாங்க அமைச்சரினால் விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

எனவே குறித்த விடயம் தொடர்பில் பிரதமரும், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனவிடம் இதுதொடர்பில் கோரிக்கை விடுத்தார். அதற்கமைய புதிய மாவட்ட செயலக தளபாட கொள்வனவுகளுக்காக ரூ.75 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விஜயத்தின் போது, மட்டக்களப்பு மாவட்ட செயலக பதில் திட்டமிடல் பணிப்பாளர் ஜதீஸ்குமார், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் நிர்மலராஜ், பொறியியலாளர் எந்திரி. சுமன் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரின் பிரத்தியேக செயலாளர் த. தஜீவரன் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.


## கேள்வி அழைப்பு

### மாவட்ட பொது வைத்தியசாலை – மாத்தறை

மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கீழ்க்காணும் பொருட்களை வழங்கக்கூடிய அரசில் பதிவுசெய்த நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இவ்வழங்கலிற்கான சகல கேள்வி விண்ணப்பங்களும் கீழ்க்காணுமாறு பெற்றுக்கொள்ளலாம்.

| தொடர் இல | வழங்கல் பற்றிய விபரம் | தேவைப்படும் அளவு | விண்ணப்ப தாரியின் தகைமைகள் | மீளிளக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ |
|---|---|---|---|---|
| 01 | கேஸ்மன் துணி பச்சை நிறம் (60 அங்குலம் அகலம்) | 1700 மீட்டர் | கம்பனிகள் பதிவு செய்யும் சான்றிதழ் | 3500.00 |
| 02 | கேஸ்மன் துணி நீல நிறம் (60 அங்குலம் அகலம்) | 1600 மீட்டர் | | |
| 03 | கேஸ்மன் துணி சாம்பல் நிறம் (60 அங்குலம் அகலம்) | 500 மீட்டர் | | |
| 04 | காரிக்கன் துணி (60 அங்குலம் அகலம்) | 1650 மீட்டர் | | |
| 05 | காரிக்கன் துணி (30 அங்குலம் அகலம்) | 8000 மீட்டர் | | |
| 06 | திரைச்சீலை செட்டின் கிறீம் கலர் (60 அங்குலம் அகலம்) | 1000 மீட்டர் | | |
| 07 | வெள்ளை கட்டில் விரிப்பு 90"X72" | 1000 | | |
| 08 | கட்டங்களுள்ள துணி 54"X72" | 500 | | |
| 09 | நுளம்பு வலை (சிங்கிள்) | 50 | | |
| 10 | ரெக்சின் துணி 54" | 500 மீட்டர் | | |

இப் பொருட்களை வழங்கக்கூடிய நிறுவனங்களில் இருந்து குறித்த கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூ. 3500.00 விண்ணப்பப்படிவக் கட்டணத்தை மாத்தறை பொது வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் குறித்த நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் எழுத்துமூல வேண்டுதலைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. கேள்வி விண்ணப்பங்கள் 2024 ஜூன் 13 முதல் ஜூலை 02 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2024 ஜூலை 03 மு.ப. 10.30 வரையான காலத்திற்குள் பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு சமர்ப்பிக்கலாம். அன்றே மு.ப. 10.30 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்வி விண்ணப்பதாரிக்கு அல்லது அவர்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொ.பே. இல.: 041-222 7820 அல்லது 041-2222261 (கிளை 134) அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை.**
**மாத்தறை**


# ஆந்திர முதல்வராக நேற்று சந்திரபாபு நாயுடு பதவியேற்பு

## ரஜினியை தேடிச்சென்று கைகுலுக்கிய பிரதமர் மோடி!

ஆந்திரா முதல்வராக 4 ஆவது முறையாக சந்திரபாபு நாயுடு நேற்று பதவியேற்றார். இந்த விழாவில் நடிகர் ரஜினிகாந்தை தேடிச்சென்று பிரதமர் மோடி கைகுலுக்கிய சம்பவம் அவரது ரசிகர்களை நெகிழ வைத்துள்ளது.

ஆந்திரா மாநிலத்தில் லோக்சபா மற்றும் சட்டசபை தேர்தல் ஒன்றாக நடந்தது. இதில் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டியின் வை.எஸ்.ஆர் காங்கிரஸ் கட்சி படுதோல்வியடைந்தது. காங்கிரஸ் + கம்யூனிஸ்ட் கூட்டணியும் எழுச்சி பெறவில்லை.

மாறாக சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் + நடிகர் பவன் கல்யாணின் ஜனசேனா + பா.ஜ.க கூட்டணி அமோக வெற்றி பெற்றது. சட்டசபைத் தேர்தலில் மொத்தமுள்ள 175 தொகுதிகளில் தெலுங்கு தேசம் கட்சி 135 தொகுதிகளைக் கைப்பற்றியது. பவன்கல்யாணின் ஜனசேனா கட்சி 21 இடங்களிலும், பா.ஜ.க 8 இடங்களிலும் வெற்றி பெற்றன. மொத்தமாக இந்தக் கூட்டணி 164 இடங்களை கைப்பற்றியது.

மாறாக ஆளும் கட்சியாக இருந்த ஜெகன் மோகன் ரெட்டியின் வை.எஸ்.ஆர் காங்கிரஸ் 11 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. இந்தத் தேர்தல் வெற்றியை தொடர்ந்து சந்திரபாபு நாயுடு 4வது முறையாக ஆந்திரா முதல்வராக நேற்று பதவியேற்றார். விஜயவாடாவில் நடந்த பதவியேற்பு விழாவில் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, நிதின் கட்கரி, ஜேபி நட்டா, நடிகர் ரஜினிகாந்த், சிரஞ்சீவி, பவன் கல்யாண் உட்பட பலர் பங்கேற்றனர்.

விழா மேடைக்கு பிரதமர் மோடியை சந்திரபாபு நாயுடு மற்றும் பவன் கல்யாண் அழைத்து வந்தனர். இந்த சமயத்தில் தம்பி பவன் கல்யாணுடன், சிரஞ்சீவியும் இணைந்தார். இதையடுத்து ஒருபுறம் சிரஞ்சீவி, இன்னொரு புறம் பவன் கல்யான் நிற்க இருவரின் கைகளை சேர்த்து பிரதமர் மோடி உயர்த்தி காண்பித்தார். அதன்பிறகு மோடி அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தார்.

இந்தச் சமயத்தில் பின்னால் நின்ற சந்திரபாபு நாயுடு நடிகர் ரஜினிகாந்த் நிற்கும் திசையை நோக்கி கைகாட்டி சிக்னல் கொடுத்தார். இதையடுத்து விறுவிறுவென ரஜினிகாந்தை நோக்கிச் சென்ற பிரதமர் மோடி அவரிடமும், அவரது மனைவி லதாவிடமும் கைகுலுக்கினார். அவர்கள் பரஸ்பரம் நலம் விசாரித்துக் கொண்டனர். இந்த வீடியோவை ரஜினி ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.



மேலும் இந்த விழாவில் மேடையில் நின்ற ஓ பன்னீர் செல்வத்திடமும் பிரதமர் மோடி கைக்குலுக்கினார். அதுமட்டுமன்றி முன்னாள் துணை ஜனாதிபதி வெங்கய்யா நாயுடுவிடம் கைக்குலுக்கிய மோடி, அவரிடம் சிறிது நேரம் பேசி கொண்டிருந்தார்.

# தமிழிசையை மேடையில் கண்டித்த அமித் ஷா!

தமிழக பா.ஜ.கவின் முன்னாள் தலைவராக இருந்த தமிழிசை சௌந்தரராஜன் பின்பு புதுச்சேரி மற்றும் தெலுங்கானா மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டார். இந்த நிலையில் தனது ஆளுநர் பதவியை ராஜினாமா செய்த தமிழிசை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க சார்பாக மத்திய சென்னை தொகுதியில் வேட்பாளராகப் போட்டியிட்டு படுதோல்வி அடைந்தார்.



இந்நிலையில் தமிழகத்தில் பா.ஜ.கவின் முன்னாள் தலைமைக்கும், இன்னாள் தலைமைக்கும் இடையே மோதல் போக்கு நிகழ்வதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் பதவியேற்பு விழா ஆந்திராவில் நேற்று நடந்தது. இதில் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, ஜே.பி.நட்டா, தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

அப்போது மேடையில் தமிழிசை அமித்ஷாவுக்கு வணக்கம் சொல்லிவிட்டுச் செல்லும்போது, அமித்ஷா உடனே அவரை அழைத்து கடுமையாகக் கண்டிக்கிறார். பதிலுக்குத் தமிழிசை ஏதோ கூற வரும்போது அதனை மறுத்து அமித்ஷா பேசும் வீடியோ தற்போது படுவைரலாகி வருகிறது.

# கௌரவிப்பு நிகழ்வு



இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலை ஊழியர் நலன்புரிச்சங்கம் நடத்திய ஆண்டு விழா நிகழ்வில் இலங்கையில் வடபிராந்திய போக்குவரத்து சபை நிலையில் சிறந்த சாரதிக்கான விருது பெற்ற கொலின் (அச்சுவேலி) மற்றும் சிறந்த பொறியியலாளருக்கான விருது பெற்ற பாலகிருஷ்ணவரன் (தெல்லிப்பழை) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை போக்குவரத்து சபையின் யாழ். சாலை ஊழியர்களின் பிள்ளைகளாக இருந்து தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற, க.பொ.த. சாதாரணதரம் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற, உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ். சாலை முகாமையாளர் என்.குணசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசனும், சிறப்பு விருந்தினராக யாழ். பேருந்து நிலைய ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி என்.லோகநாதனும் கௌரவ விருந்தினர்களாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் என். கேதீசனும் வடபிராந்திய செயலாற்றல் பிராந்திய முகாமையாளர் ஏ.ஜெ.லெம்பேட்டும் கலந்து கொண்டனர்.

# யாழில் நாளை சொற்பொழிவு

**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழ்ப்பாணத்தில் இரு வேறிடங்களில் சிவநெறி பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நாளை வெள்ளிக்கிழமை சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன. வாராந்த சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு, நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

'உள்ளம் பெருங்கோவில்' எனும் விடயப் பொருளில் இளம் சைவப்புலவர் தி.ச.நவநீதன் சிறப்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளார். ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாத குருக்கள் ஆசியுரையையும் பரிபாலன சபை தலைவர் சி.தயாநாதன் தலைமையுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டு பரிசில்களும் இதன்போது வழங்கப்படவுள்ளன.

இதேவேளை சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்த திருவாசக சிறப்பு சொற்பொழிவு தொடர் 9 யாழ். தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகரும் திருபொற்சண்ணமும் எனும் விடயப்பொருளில் சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ.த.குமரன் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

# வவுனியா தமிழ் கலவன் பாடசாலையில் சாதனை

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி, இம்முறை வவுனியா தமிழ் கலவன் பாடசாலையில், ஏழு பேர் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் இக்கல்லூரியில் இருவர் மூன்று பாடங்களிலும் "ஏ" அதிசிறப்பு சித்தி பெற்றுள்ளனர். வர்த்தகப் பிரிவு மாணவர் அஜந்தன் மற்றும் கலைப்பிரிவு மாணவி சபீனா சிவகுமார் ஆகியோரே மூன்று பாடங்களிலும் "ஏ"சித்தி பெற்றுள்ளனர்

இப்பாடசாலையிலிருந்து இம்முறை வர்த்தகப் பிரிவிலிருந்து ஐவரும், கலைப் பிரிவிலிருந்து 14 பேருமாக மொத்தம் 19 பேர் இப்பரீட்சைக்குத் தோற்றினர். இந்நிலையில், ஏழு பேர் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில், வர்த்தகப் பிரிவில் பிரதீபன் மதுராங்கன், ஜெய்கீசன் சஞ்சுதன், டிலானி கேதீஸ்வரன் மற்றும் கலைப் பிரிவில் ஜதுஷா மோகன் ராஜ் , சங்கவி சிவகணேஷ் ஆகிய மாணவ மாணவிகளும் பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர். பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகியுள்ள ஏழு பேரும் பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக அதிபர் மாணிக்கம் அரிபூரண நாதன் தெரிவித்துள்ளார்.

# மட்டுவிலில் மோட்டார் ஷெல் மீட்க நடவடிக்கை

**சாவகச்சேரி விசேட நிருபர்**



சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் சந்திரபுரம் கிராமத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் வெடிக்காத நிலையில் மோட்டார் ஷெல் ஒன்று அடையாளம் காணப்பட்டது.

வாய்க்கால் வெட்டும் போது மேற்படி வெடிபொருள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரின் உதவியுடன் வெடிபொருளை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABP-4138 | பஜாஜ் | 2017 | கண்டி |
| ABN-9504 | பஜாஜ் | 2016 | மாதரா |
| ABO-8146 | பஜாஜ் | 2016 | மாதரா |
| ABN-6626 | பஜாஜ் | 2016 | ராகம |
| AAT-9217 | பியாஜியோ | 2014 | ராகம |
| AAI-8690 | பஜாஜ் | 2013 | எம்பிலிபிட்டிய |
| AAK-7351 | பஜாஜ் | 2013 | குருநாகல் |
| AAJ-0442 | பஜாஜ் | 2013 | ராகம |
| AAK-3822 | பஜாஜ் | 2013 | கண்டி |
| AAD-0744 | பஜாஜ் | 2012 | ராகம |
| YU-5479 | பஜாஜ் | 2011 | மாதரா |
| YV-9871 | பஜாஜ் | 2011 | எம்பிலிபிட்டிய |
| YM-5995 | பஜாஜ் | 2011 | ராகம |
| YQ-3798 | பஜாஜ் | 2011 | ராகம |
| YQ-2841 | பஜாஜ் | 2011 | சிலாவ் |
| YM-4970 | பஜாஜ் | 2011 | ராகம |
| YF-0185 | பஜாஜ் | 2010 | மாதரா |
| QZ-7905 | பஜாஜ் | 2010 | நவரேலியா |
| YC-1503 | டி.வி.எஸ் | 2010 | ராகம |
| QM-3002 | பஜாஜ் | 2007 | ராகம |

| மோட்டார் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| CAB-4551 | ஹோண்டா | 2014 | ராகம |
| KL-2105 | டொயோட்டா | 2007 | ராகம |
| KH-4287 | சுசுகி | 2004 | ராகம |
| JW-0267 | KIA | 2001 | ராகம |
| 19-8145 | டொயோட்டா | 1993 | கண்டி |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAF-7773 | மஹிந்திரா | 2017 | மாதரா |
| DAA-0248 | மஹிந்திரா | 2015 | மாதரா |

| டூயல் பர்போஸ் கேப் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| PU-9381 | மஹிந்திரா | 2012 | ராகம |
| PR-7719 | மஹிந்திரா | 2011 | பாணடுரா |

| டூயல் பர்போஸ் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| HS-7242 | மிட்சுபிஷி | 1999 | மாதரா |
| 57-7079 | மஸ்தா | 1991 | ராகம |

| ஜீப்ஸ் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| KH-9379 | மைக்ரோ | 2009 | ராகம |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம்
அது ஏல அடிப்படையில் இருக்கும்

ராகம 0778 523 285
திருகோணமலை 0773 382 612
ரத்தினபுரி 0774 857 351
கண்டி 0773 972 860
நுவரெலியா 0777 717 562
அனுராதபுரம் 0767 139 916
அம்பாரா 0773 547 556
குருநாகல் 0764 425 205
எம்பிலிபிட்டிய 0773 610 188
பாணடுரா 0775 215 263
மாத்தறை 0743 601 121
சிலாவ் 0770 288 804


## சப்ரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

**சப்ரகமுவ மாகாண சபை அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் விலங்கு அபிவிருத்தி ஆலோசகர் பதவியின் IIம் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2024**

சப்ரகமுவ மாகாண சபை அரச சேவையில் தொழில்நுட்ப சேவையில் விலங்கு அபிவிருத்தி ஆலோசகர் வெற்றிடத்தை நிரப்புவதற்காக, தகைமையுள்ள சப்ரகமுவ மாகாணத்தில் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி : 2024.07.12

02. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது 18 இற்கு குறையாமலும், 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

03. பதவியுடன் சம்பந்தப்பட்ட சம்பள அளவு :

1. இல. 03/2016 மற்றும் 2016.02.25ம் திகதிய அரச நிர்வாக சுற்றுநிருபத்தின் பிரகாரம் இப்பதவியுடன் சம்பந்தப்பட்ட சம்பள வகுதி MN - 3-2016 ஆவதுடன் மாதாந்த சம்பள அளவு ரூ.31,040-10x445-11x660-10x730-10x750- ரூ.57550/- ஆகும்.

04. இவ் ஆட்சேர்ப்பின் முழுமையான அறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் www.sg.gov.lk மற்றும் www.psc.sg.gov.lk இணைதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**ஈ.கே.ஏ. சுனீதா,**
**செயலாளர்,**
**மாகாண அரச சேவை ஆணைக்குழு, அலுவலகம்,**
**சப்ரகமுவ மாகாணம்**
**2024.06.12**

## கொழும்பு மாநகர சபை

**கேள்வி அறிவித்தல்**

**கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரினால் பொதுச் சந்தைகளில் வெற்றிடமாகவுள்ள இறைச்சிக் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.**

| கேள்வி இலக்கம் | விபரம் |
|---|---|
| CMC/MT/RV/ TEND/02/01-2024 | 2024 ஆகஸ்ட் மாதம் முதல் 2026 டிசம்பர் மாதம் வரையில் கொழும்பு மாநகர சபைக்குரித்தான பொதுச் சந்தைகளில் வெற்றிடமாகவுள்ள இறைச்சிக் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்காக நகல்பிரதிகளுடனான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. |

1. Borella Market

| | Shop | Nature | Tender price | Tender Deposit |
|---|---|---|---|---|
| 1 | 7B/35 | BEEF | 180,000.00 | 90,000.00 |
| 2 | 7B/36 | CHICKEN | 400,000.00 | 200,000.00 |

2. Dematagoda Market

| | Shop | Nature | Tender price | Tender Deposit |
|---|---|---|---|---|
| 1 | 50/03 | BEEF | 800,000.00 | 400,000.00 |

3. Deans Road Market

| | Shop | Nature | Tender price | Tender Deposit |
|---|---|---|---|---|
| 1 | 44/05 | BEEF | 150,000.00 | 75,000.00 |
| 2 | 44/06 | BEEF | 175,000.00 | 87,500.00 |
| 3 | 44/10 | BEEF | 150,000.00 | 75,000.00 |
| 4 | 44/12 | BEEF | 110,000.00 | 55,000.00 |

4. Kollupitiya Market

| | Shop | Nature | Tender price | Tender Deposit |
|---|---|---|---|---|
| 1 | 09 | MUTTON | 540,000.00 | 270,000.00 |
| 2 | 10 | BEEF | 800,000.00 | 400,000.00 |

5. Bambalapitiya Market

| | Shop | Nature | Tender price | Tender Deposit |
|---|---|---|---|---|
| 1 | 24 | BEEF | 500,000.00 | 250,000.00 |

6. Wellawatta Market

| | Shop | Nature | Tender price | Tender Deposit |
|---|---|---|---|---|
| 1 | 01 | PORK | 77,000.00 | 38,500.00 |
| 2 | 02 | BEEF | 550,000.00 | 275,000.00 |
| 3 | 03 | MUTTON | 420,000.00 | 210,000.00 |

7. Jinthupitiya Market

| | Shop Number | Nature | Tender price | Tender Deposit |
|---|---|---|---|---|
| 1 | 01 | MUTTON | 959,400.00 | 479,700.00 |
| 2 | 03 | MUTTON | 850,000.00 | 425,000.00 |
| 3 | 06 | CHICKEN | 425,000.00 | 212,500.00 |

8. Nagalagam Veediya Market

| | Shop | Nature | Tender price | Tender Deposit |
|---|---|---|---|---|
| 1 | 381/1 | CHICKEN | 700,000.00 | 350,000.00 |
| 2 | 381/7 | CHICKEN | 700,000.00 | 350,000.00 |
| 3 | 381/8 | PORK | 190,000.00 | 95,000.00 |

9. Vistwike Market

| | Shop Number | Nature | Tender price | Tender Deposit |
|---|---|---|---|---|
| 1 | 30/05 | MUTTON | 154,800.00 | 77,400.00 |

10. Kirulapone Market

| | Shop | Nature | Tender price | Tender Deposit |
|---|---|---|---|---|
| 1 | 145 | CHICKEN | 7,691,600.00 | 3,845,800.00 |
| 2 | 149 | BEEF | 2,000,000.00 | 1,000,000.00 |

2024-06-13ஆம் திகதி முதல் 2024-07-02ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்வி ஆவணங்களை (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 -** நகர மண்டப தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு மாநகர சபை, கொழும்பு 07, நகர மண்டப வளவில் அமைந்துள்ள மாநகர பொருளாளர் திணைக்களத்தின் வருமானப் பிரிவிற்கு எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றைச் செய்து விண்ணப்பக் கட்டணமான 5,900.00 ரூபாவைச் செலுத்தி கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 02 -** கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து **(www.colombo.mc.gov.lk)** தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

- மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக 5,900.00 ரூபாவை பின்வரும் வகையில் செலுத்தலாம்.
  1) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.
  2) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் வட்டார அலுவலகக் கொடுப்பனவு கருமபீடங்களில் செலுத்தலாம்.
- சகல வட்டார அலுவலகங்களில்
- நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புப் பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு-10.
- பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கேள்வி ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.
- 2024-07-02ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதுடன் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்படும் விண்ணப்பங்கள் செல்லுபடியாகாது.
- கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் சகல விண்ணப்பங்களுக்குரித்தான இயைபுடைய கேள்வி வைப்புத் தொகையை 2024-07-03ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் மாநகர பொருளாளர் திணைக்களத்தின் வருமானப் பிரிவிற்குச் செலுத்துதல் வேண்டும்.
- உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024-07-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் 2024-07-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் உடன் திறக்கப்படும். அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கேள்விகள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
- இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112-692465 எனும் தொலைபேசி இலக்கத்தில் பிரதி மாநகர பொருளாளர் (வருமானம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**


* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Lake House Branch Acc. No. 000000377

The Housewives' companion
Classifieds on
Daily News

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 301 -7XXX | TOYOTA | CAMRY | 1986 |
| 015 -1XXX | NISSAN | SUNNY HB12 | 1987 |
| GV -2XXX | NISSAN | MARCH | 2000 |
| **வேன்** | | | |
| 052 -6XXX | ISUZU | FARGO | 1987 |
| 252 -0XXX | NISSAN | LARGO | 1991 |
| **லொறி** | | | |
| 226 -2XXX | TOYOTA | TOYOACE | 1994 |
| PP -1XXX | TATA | ACE | 2010 |
| PP -7XXX | TATA | ACE | 2010 |
| PR -7XXX | MAHINDRA | MAXXIMO | 2011 |
| PS -8XXX | TATA | ACE-EX | 2012 |
| PT -5XXX | TATA | ACE EX | 2012 |
| PU -4XXX | TATA | SUPER ACE | 2012 |
| PV -2XXX | MAHINDRA | MAXXIMO | 2013 |
| PW -0XXX | LANKA ASHOK LEYLAND | DOST LX | 2013 |
| PW -4XXX | MAHINDRA | MAXXIMO PLUS | 2013 |
| PY -1XXX | TATA | ACE EX2 | 2014 |
| PY -3XXX | TATA | SUPER ACE | 2014 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BFG -4XXX | BAJAJ | PULSAR 150 | 2017 |
| BHM-5XXX | HONDA | DIO SCV 110 | 2019 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| QL -6XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QV -6XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2024 ஜுன் 13ஆம், 14ஆம், 17ஆம் மற்றும் 18ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2024 ஜுன் 18ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

Mercantile Investments and Finance PLC

தொடர்பு:
ஜானக்க - 0711 624 559 / தினேஷ் - 0718 751 995

www.skillsads.com

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்கோரல்

| தொ/ இல | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | "மகநெகும மஹமெதுர" வீதி அபிவிருத்தி அதிகாரசபை கட்டிடம் மற்றும் வளாகத்திற்கான விரிவான காப்புறுதிக் கொள்கை திட்டம் **Contract No:** ***RDA/DPR/PRO/WK/NCB/INP/2024/76*** |

**தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய** மேல்குறிப்பிடப்பட்டுள்ள சேவையினை வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.06.13** ஆம் திகதி முதல் **2024.07.03** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைவர்,
பிராந்திய கொள்முதல் குழு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

SELACINE

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்கோரல்

**வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக களுத்துறை நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவிற்காக வாடகை அடிப்படையில் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் வழங்கல்**

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) களுத்துறை நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் களுத்துறை நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவிற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சேவை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ/ இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|---|
| 01 | RDA/KT/EE/SU/ 2024/10 | களுத்துறை வேலைத்தளப் பிரிவிற்கு டிப்பர் வாகனம் ஒன்றினை (கியூப் 01) ஆறு (06) மாத காலங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல். |
| 02 | RDA/KT/EE/SU/ 2024/11 | பானதுறை வேலைத்தளப் பிரிவிற்கு டிப்பர் வாகனம் ஒன்றினை (கியூப் 01) ஆறு (06) மாத காலங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல். |
| 03 | RDA/KT/EE/SU/ 2024/12 | பண்டாரகம வேலைத்தளப் பிரிவிற்கு டிப்பர் வாகனம் ஒன்றினை (கியூப் 01) ஆறு (06) மாத காலங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல். |
| 04 | RDA/KT/EE/SU/ 2024/13 | நேபட வேலைத்தளப் பிரிவிற்கு டிப்பர் வாகனம் ஒன்றினை (கியூப் 01) ஆறு (06) மாத காலங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல். |
| 05 | RDA/KT/EE/SU/ 2024/14 | களுத்துறை நிறைவேற்று பொறியியலாளர் வேலைத்தளப் பிரிவிற்கு பெக்கோலோடர் (JCB) இயந்திரமொன்றினை ஆறு (06) மாத காலங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல். |

2. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

தலைவர்,
பிராந்திய கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - களுத்துறை.
தொ.பே : 034-2229135

SELACINE

---

# இலங்கை தரநிருணய வரைவு கட்டளைகள் நிறுவனம்

SLSI

**தொழில்நுட்பவியல் அமைச்சின் கீழானது**

## பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கான அழைத்தல் 2024/25

பின்வரும் அமைவிடங்களிலுள்ள அதனது கட்டிட தொகுதிகளுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக ஒப்பந்தக்காரரொருவரை தெரிவு செய்வதற்காக கேள்வி ஆவணங்களை இலங்கை தரநிருணய வரைவு கட்டளைகள் நிறுவனமானது அழைக்கின்றது.

அ) கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா பிரதேசம் 17 ஆம் இலக்கத்திலுள்ள
பிரதான கட்டிடம்.

ஆ) கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா பிரதேசம் 17 ஆம் இலக்கத்திலுள்ள
ஆய்வுகூட சேவைகள் கட்டிடம்.

இ) கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா பிரதேசம் 15/2 ஆம் இலக்கத்திலுள்ள
குத்தகைக்கு பெறப்பட்ட கட்டிடம் (பிரதான கட்டிடத்திற்கு முகப்பாகவுள்ளது)

ஈ) கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா பிரதேசம் 04 ஆம் இலக்கத்திலுள்ள
குத்தகைக்கு பெறப்பட்ட கட்டிடம் (பிரதான கட்டிடத்திற்கு முகப்பாகவுள்ளது)

உ) கொழும்பு-08, பொரளை, டட்லி சேனாநாயக்க மாவத்தை 02 ஆம் இலக்கத்திலுள்ள குத்தகைக்கு பெறப்பட்ட கட்டிடம்.

2024.06.13 ஆம் திகதியிலிருந்து 2024.06.28 ஆம் திகதி வரையும் 3,500 இலங்கை ரூபா + SSCL + பெசேவ ஆகியவற்றை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், வார நாட்களின் அலுவலக நேரங்களில் இலங்கை தரநிருணய வரைவு கட்டளைகள் நிறுவன நிருவாகத்திற்கான பணிப்பாளரிடமிருந்து விலைமனுக்கோரல் படிவங்கள் மற்றும் விபரங்களையும் கையேற்றுக் கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்கள் 2024.07.01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**இலங்கை தரநிருணய வரைவு கட்டளைகள் நிறுவனம்,**
**இல.: 17, விக்டோரியா பிரதேசம்,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி: 0112 671567-72**

---

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு**
**மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**
**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்**

# வெற்றிடங்கள்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், அக்ரகார மருத்துவ காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகன காப்புறுதி, சாதாரண காப்புறுதி போன்ற காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்துவதோடு உள்நாட்டு காப்புறுதியாளர்களின் மீள்நிதியளிப்பாளராக செயற்படும் இலங்கையினுள் நிறுவப்பட்டுள்ள ஒரே நிறுவனமாகும். காப்புறுதித் துறையில் தனியார் காப்புறுதியாளர்களின் மீள்நிதியளிப்பு அமர்வு, 18 வருடங்களுக்கு மேலாக அதன் இருப்பில் அடைந்த பெறுமைமிக்க சாதனை கண்டுபிடிப்பு, வளர்ச்சி மற்றும் இலாபம் ஆகியவற்றுடன் உள்நாட்டு காப்புறுதி தொழிலில் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்காக தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. அலுவலக உதவியாளர் - Office Aide**

தகைமைகள்: க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றியிருக்க வேண்டும்.
சம்பள அளவு : PL 1 -2016 ரூபா 24,750 -10x250 -10x270 -7x300 -15x330 – 37,000]
வயது : 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**02. சாரதி - Driver**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட உரிமத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (எதிர்பார்க்கப்படும் திறமையை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்)

**மற்றும்**

சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட உரிமத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (எதிர்பார்க்கப்படும் திறமையை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்) மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

ஆரம்ப அரைத் தேர்ச்சி (PL2) அல்லது ஆரம்ப தேர்ச்சியற்ற (PL1) வகுதிக்குரித்தான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- கனரக வாகன சாரதி உரிமத்தைப் பெற்றிருத்தல் மேலதிக அனுகூலமாகும்.

சம்பள அளவு : PL 3 -2016 ரூபா [26,290 –10 x270 -10 x300 -10 x330– 12x350 – 39,490]
வயது : 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**நியமனத்தின் தன்மை**

இந்த நியமனம் நிரந்தர நியமனமாகும். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் உண்டு.

சகல விண்ணப்பதாரர்களும்

- இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் மற்றும் பதவிக்குரித்தான கடமையைச் செய்வதற்கான உடல் மற்றும் உள ரீதியான தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நன்னடத்தை தன்மையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பதாரர்கள்**

- உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர் மற்றும் முகவரி சகிதம் தயாரித்துக்கொண்ட சுய தரவு விபரங்கள் சகிதமான விண்ணப்பப் படிவத்தை, சகல கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் தகைமைகள், சேவை அனுபவத்தை உறுதி செய்யும் பிரதிகள் சகிதம் அனுப்புதல் வேண்டும். தற்போது அரச / கூட்டுத்தாபனம் / நியதிக் சட்டச்சபைகளில் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
- சகல விண்ணப்பங்களையும் பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02 எனும் முகவரிக்கு 2024-06-27ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்,**
**இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு - 02**

---

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## கண்டி மாநகர சபை

**Supply and Delivery - LED 40W Street Lamp complete set**
**(including 2m, 7/0.53 twin wire, Arm and 2 clamps)**
**IFB No.: CPC/KMC/FD/PC 06/2024/PA1**

1. கீழே விபரிக்கப்பட்டவாறு LED 40W Street Lamp complete set (including 2m, 7/0.53 Twin wire, arm and 2 clamps) என்பதன் வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கண்டி மாநகர சபை இப்போது அழைக்கின்றது.

| அம்ச இல. | பொருளின் இன வகையின் சுருக்கமான விளக்கம் | அளவு (எண்ணிக்கை) | விலைமனு முறி - இ.ரூபாவில் - 2024.11.01 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் | ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதலுக்கான காலம் |
|---|---|---|---|---|
| 1. | LED 40W Street Lamp complete set (including 2m, 7/0.53 Twin wire, arm and 2 clamps) | 62 எண்ணிக்கைகள் | 35,000.00 ரூபா | பெறுகைக் கட்டளை வழங்கப்பட்ட திகதியிலிருந்து 45 நாட்கள் |

**விதிக்கப்பட்ட தேவைப்படுத்தல்கள் :**

கேள்வி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான உற்பத்தியாளரின் சட்டபூர்வ அனுமதியைக் கொண்டுள்ள உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவர் அத்துடன் உற்பத்தியாளரினால் தயாரிக்கப்பட்ட உற்பத்திகளை வழங்கல்.

2. கேள்வி ஆவணக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள கேள்விதாரர் மேலதிக தகவலை கண்டி மாநகர சபையின் வழங்கலுக்கான கணக்காளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 081 2 232 071) (மின்னஞ்சல்: **supplieskmc@gmail.com)** மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் அலுவலக நேரங்களில் வழங்கலுக்கான கணக்காளரின் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு: விலைமனுதாரர் LED -40W Street Lamp complete set (including 2m, 7/0.53 Twin wire, arm and 2 clamps) என்ற வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் வியாபாரத்தில் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்களாக இருந்திருத்தல் வேண்டும். கேள்விதாரர் ஒரு உற்பத்தியாளராக அல்லது ஒரு வழங்குநரொருவராக உற்பத்தியாளரினால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திகளுக்கான விலைமனுக்களை சமர்ப்பிக்கவும் வேண்டும். மேலதிக விபரங்கள் கேள்வி ஆவணங்களின் III ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.
5. 2024.06.18 ஆம் திகதியிலிருந்து 2024.07.09 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.45 மணி வரையும் வேலை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமான 2360.00 ரூபாவை பெசேவ உடன் (இரண்டாயிரத்து முன்னூற்றி அறுபது ரூபாவுடனான பெசேவ) செலுத்திய பின்னர் ஆங்கில மொழியிலுள்ள கேள்வி ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2024.07.10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் கேள்வி ஆவணங்கள் பதிவுத் தபாலில் இரு பிரதிகளில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மாநகர சபை பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான கேள்வி ஆவணங்கள் நிராகரிக்கப்படும். 2024.07.02 ஆம் திகதியன்று கண்டி மாநகர சபையின் புதிய மண்டபத்தில் நேரடியாக சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் முன்னிலையில் கேள்வி ஆவணங்கள் அவைகளை மூடிய பின்னர் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2024.10.10 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள தொகைக்கான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட விலைக்கோரல் ஆவண முறியொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.


மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:
விலைமனுக்களை ஒப்படைத்தல் மற்றும் திறப்பதற்கான முகவரி:

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**கண்டி.**
**தொலைபேசி: 081 2 222 275**
**தொலைநகல்: 081 2 232 071**

---

# சிறு விளம்பரம்


## மோட்டார் வாகனங்கள்



117

**வேன்கள்**
**விற்பனைக்கு**

54-2310 TOYOTA LITEACE, 1988, VAN அதியுயர் விலைக்கானது. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711210810. 039085



122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
**விற்பனைக்கு**

QF-9320 BAJAJ 2006, QN-7192 BAJAJ 2007, AAI-7374 BAJAJ 20 13 THREE WHEELE R அதியுயர் விலைக்கானது. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1121081 0 . 039081

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் | பொறியியலாளரின் மதிப்பீடு (மில்.ரூ.) | CIDA தரம் | விலைக்கோரல் ஆவண முறி(ரூ) | ஒப்பந்தக் காலப்பகுதி (நாட்களில்) |
|---|---|---|---|---|---|
| RDA/ PD(NP)/CE (V)/VVN/ FD/2024/01 | மதவாச்சி-மன்னார் - தலைமன்னார் வீதியில் 27/1 ஆம் இலக்க பாலத்தின் (Single Cell box) | 9.19 | சி-6 மற்றும் சி-7 மாத்திரம் | 137,800.00 | 91 |

மேலேயுள்ள வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. 2024 ஜூன் 12 ஆம் திகதியிலிருந்து 2024 ஜூன் 25 ஆம் திகதியன்று வரையும் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கங்களை பார்வையிடுமாறு ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பத்திரிகை விளம்பரம்
## காணி சுவீகரிப்பு சட்டத்தின் 7ம் பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது இல : DS/KU/LND/ACQUS/1/5**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு இல : 4-3/14/2020/CEB/82**

பின்வரும் உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசு சுவீகரித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2378/58 ஆம் இலக்க 06.04.2024 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானியின் III ஆம் பகுதியை பார்க்கவும்.

**கு.குணநாதன்,**
**பிரதேச செயலாளர்.**

**2024.05.28**
**பிரதேச செயலகம்,**
**குச்சவெளி**

**உப அட்டவணை**

| | | |
|---|---|---|
| பிரதேச செயலாளர் பிரிவு | : | குச்சவெளி |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | கும்புறுப்பிட்டி தெற்கு |
| கிராமம் | : | கும்புறுப்பிட்டி |
| காணியின் பெயர் | : | பெரிய தோட்டம் மற்றும் நரியோட்டுக்காடு |
| வரைபட இலக்கம் | : | CM 260225 |
| துண்டு இலக்கம் | : | 01 |
| விஸ்தீரணம் | : | 0.0334 ஹெக்டேயர் |

## பெறுகை அறிவித்தல்
### மின்வலு மற்றும் சக்தி
### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
### 13 எண்ணிக்கையுடைய நோட் புக் கணனிகளுக்கான வழங்கலுக்கான கேள்விகோரல்
**B/35/2024**

13 எண்ணிக்கையான நோட் புக் கணனிகளின் வழங்கலுக்காக தகுதியுள்ள வழங்குனர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகோரல்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கேள்வி ஆவணங்களில் கூறப்பட்டுள்ளவாறு தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகியிருத்தலும் வேண்டும்.

2024.07.02 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை (ரூ.1653.58 +2.5% SSCL + 18% பெசேவ) ஆகியவற்றை இபெகூ இற்கு செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள 1 ஆம் மாடியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரிடமிருந்து கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

அனைத்து விலைமனுக்களும் 56,000 ரூபா பெறுமதியான விலைக்கோரல் ஆவண முறியொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2024.07.03 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு கீழேயுள்ள முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்வி ஆவணங்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்படும் கேள்விதாரர் **https://eroc.drc.gov.lk/** என்ற இணையதளத்தின் ஊடாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு அவர்களின் விலைமனுக்களுடன் பிசிஏ-3 சான்றிதழானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்வி ஆவணங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்)**
**மே/பா.,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 011 5455331. தொலைநகல்: 011 5455424**

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

## DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA
## MINISTRY OF IRRIGATION
### REQUEST FOR BIDS (RFB)
### Climate Resilience Multi-Phase Programmatic Approach (L.No. : 8996-LK)
## NATIONAL COMPETITIVE BIDDING

### PROCUREMENT OF PUBLIC ADDRESS SYSTEMS, MANUAL SIRENS AND MEGAPHONES FOR DMC FOR COMMUNICATION OF EARLY WARNINGS IN SRI LANKA
**Contract No : SLMOI/CRES/DMC/G/NCB/35**

### PROCUREMENT OF EQUIPMENT FOR CONTROLLING EMERGENCY SITUATIONS IN SRI LANKA FOR DISASTER MANAGEMENT CENTER
**Contract No : SLMOI/CRES/DMC/G/NCB/38**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the International Bank for Reconstruction and Development (IBRD) towards the cost of Climate Resilience Multi-Phase Programmatic Approach of Ministry of Irrigation and intends to apply part of the proceeds of this loan to payments under the above contracts.
2. The Chairman, **Project Procurement Committee on behalf of Climate Resilience Multi-Phase Programmatic Approach** now invites sealed bids from eligible and qualified bidders for **above contracts.**
3. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) procedure.
4. Interested bidders may obtain further information from **Project Director, Climate Resilience Multi-Phase Programmatic Approach, No. 11, Jawatte Road, Colombo 05, T.P: 0112507855/0112058451, Fax: 0112058451, E-mail : pdcresmpa@gmail.com** and inspect the bidding documents free of charge from **14th June 2024 to 05th July 2024** during normal working days between 9.30 am and 3.30 pm.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the address below during normal working days **from 14th June 2024 to 05th July 2024 until 3:30 pm** upon payment of a non-refundable fee as per **Table No. 01.** The method of payment will be by cash.

**Table 01**

| RFB Reference | Non-Refundable Tender Fee |
|---|---|
| SLMOI/CRES/DMC/G/NCB/35 | LKR 32,000.00 |
| SLMOI/CRES/DMC/G/NCB/38 | LKR 8,000.00 |

6. Bids shall be delivered in duplicate to the address below as per the time and date mentioned in **Table No. 02.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

**Table 02**

| RFB Reference | Bid Submission & Opening |
|---|---|
| SLMOI/CRES/DMC/G/NCB/35 | 08th July 2024 – 0900 hrs |
| SLMOI/CRES/DMC/G/NCB/38 | 08th July 2024 – 1100 hrs |

7. Bids shall be valid until **07th October 2024.**
8. All bids shall be accompanied by a **Bid Security,** *(as per the format given in the Bidding Document)* as per **Table No. 03.**

**Table 03**

| RFB Reference | Bid Security |
|---|---|
| SLMOI/CRES/DMC/G/NCB/35 | Lot 01 – LKR 350,000.00 |
| | Lot 02 – LKR 255,000.00 |
| | Lot 03 – LKR 2,000,000.00 |
| SLMOI/CRES/DMC/G/NCB/38 | Lot 01 – LKR 12,000.00 |
| | Lot 02 – LKR 37,500.00 |
| | Lot 03 – LKR 345,000.00 |
| | Lot 04 – LKR 37,500.00 |
| | Lot 05 – LKR 18,750.00 |

Bid Security shall be valid until **04th November 2024.**

9. Pre-Bid Meeting will be arranged on 24th June 2024 as per **Table No. 04** at the Conference Room, Climate Resilience Multi-Phase Programmatic Approach, No.11, Jawatta Road, Colombo 05.

**Table 04**

| RFB Reference | Pre Bid Meeting |
|---|---|
| SLMOI/CRES/DMC/G/NCB/35 | 24th June 2024 – 0900 hrs |
| SLMOI/CRES/DMC/G/NCB/38 | 24th June 2024 – 1100 hrs |

**Chairman,**
**Project Procurement Committee**
**Climate Resilience Multi-Phase Programmatic Approach**
**No. 11, Jawatte Road,**
**Colombo 05.**
13th June 2024

## i - Live /i – Lead திட்டங்களின் கீழ் மிதிவண்டிக்கான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களுக்கு அழைப்பு

### 2024, மிதிவண்டி பெறுகையின் கீழ் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான அழைப்பு

இஸ்லாமிய நிவாரண அமைப்பு 2004 இல் நாட்டில் சுனாமி தாக்கியதன் பின் சிறிது காலத்தில் இலங்கையில் செயற்பாடுகளை ஆரம்பித்தது. பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு விரைவாக உதவுவது மற்றும் மீட்சி நடவடிக்கையிலேயே அது பிரதானமாக அவதானம் செலுத்தியுள்ளது.

இஸ்லாமிய நிவாரண அமைப்பு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் 2005 இல் சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்டதோடு (FL97514) அது தொடக்கம் இலங்கை எங்கும் தனது மனிதாபிமான பணிகளை தொடர்ந்து வருகிறது. இனம் அல்லது மதம் என்ற எந்த பாகுபாடும் காட்டாது அவர்களின் பன்முகத்தன்மையை பொருட்படுத்தாது பாதிக்கப்படும் சமூகங்களுக்கு அது பணியாற்றி வருகிறது. தற்போதைய நிலையில், இஸ்லாமிய நிவாரண அமைப்பு தனது அடைவை நாட்டின் பல மாவட்டங்களிலும் விரிவுபடுத்தியுள்ளது.

**முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனு விபரம்**

| | |
|---|---|
| பெண்கள் BICYCLE 26” பெறுகை | Standard Ladies Steel Frame, Double Bolt Centre Pull Brake, Steel Rims, Fully Covered with Oil Clock Chain Case, Thicker Top & Rod<br>Handle Bar, Carrier, Front Basket, Side Stand, Brake Lever with Grip, Heavy-duty Pedal. (Color Black -540nos, Blue Color-300 nos) Total 840 nos |
| (விலைமனுக்களை ஏற்கும் இறுதித் திகதி - நேரம்) | 2024 ஜூன் 26 அன்று பி.ப. 4.30 (புதன்கிழமை) |
| (கேள்விமனு திறக்கப்படும் திகதி - நேரம்) | 2024 ஜூன் 27 அன்று மு.ப. 09.00 (வியாழக்கிழமை) |
| (கேள்வி தொடர்பில் விசாரணைக்கு தொடர்பு இலக்கம் மற்றும் முகவரி) | தொலைபேசி - 067-2280009 |

தேவையான அளவு, விநியோக விபரங்கள், கொடுப்பனவு விதிமுறைகள், கேள்வி செயற்பாட்டு திகதி முதலியவை தொடர்பில் மேலதிக விபரங்கள் அடங்கியதாக விரிவான விபரக் குறிப்புகளுக்கு கீழுள்ள இணைப்பை பார்க்கவும்,

Website : https://www.islamic-relief.lk - மிதிவண்டிக்கான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களுக்கு அழைப்பு - 2024

இந்த கேள்விமனு தொடர்பில் ஏதேனும் தெளிவை பெற வேண்டுமாயின், procurement@islamic-relief.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக தொடர்பு கொள்ளவும்.

உங்களது கேள்விமனு ஆவணங்களை 2024/06/26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

முழு கேள்விமனு முன்மொழிவுகளின் முழுமையான தொகுதியை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

**இஸ்லாமிய நிவாரணம் - இலங்கை,**
**இல. 1பி,**
**(பிரின்ஸ் கோணர் தொகுதி),**
**பிரதான வீதி, அக்கரைப்பற்று - 01**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை
### முதலீட்டு சந்தர்ப்பங்கள்

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு உரிமையுள்ளதும் கொழும்பு துறைமுகத்தினுள்ளே அமைந்துள்ள பெறுமதியுள்ள காணிப்பரப்பை சர்வதேச துறைமுகம் தொடர்பான சேவை வழங்கல் நிலையத்திற்கு குத்தகைக்கு வழங்கல்**

1. கொழும்பு துறைமுகத்தின் ஆழநீர் கொள்கல முனையங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள 10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியில் சர்வதேச துறைமுகங்கள் தொடர்பான சேவை வழங்கல் நிலையமொன்றை செயற்படுத்த விரும்புகிறவர்களிடமிருந்து சாத்தியமான விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது அழைப்பதற்கு விரும்புகின்றது.
2 ஆர்வமுள்ள சாரார் கீழே கூறப்பட்டுள்ளவாறு கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் வழிகாட்டி ஆவணம் ஆகியவற்றை இதுஅ இடமிருந்து பெற்றுக் கொண்ட பின்னர் விலைமனுக்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
3. 2024.06.11 ஆம் திகதியிலிருந்து 2024.07.22 ஆம் திகதி வரையும் வார நாட்களில் பி.ப. 1.30 மணி வரையும் கொழும்பு-10, T.B. ஜயா மாவத்தை, 464ஏ ஆம் இலக்க ஏச்கியு கொழும்பு கட்டிட 8 ஆம் மாடியின் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் காணி முகாமைத்துவ பிரிவு பிரதான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் வழிகாட்டி ஆவணம் ஆகியவற்றை, கேள்வியிடக்கூடிய வரிகள் அல்லது நிருவாக அறவீடுகளின் ஆகுசெலவாக மீளளிக்கப்படாத தொகையாக100,000 ரூபா அல்லது 325 அஐடொ செலுத்திய பின்னர், பெற்றுக் கொள்ளலாம்.
4. விலைமனுக்கூறல் முறியின் தொகையானது 1 மில்லியன் அஐடொ என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட, இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது இதுஅ இன் நிதிப் பிரிவிற்கு ரொக்கப்பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
5. தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையுடன் குத்தகை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.
6. ஆரம்ப குத்தகை ஒப்பந்த காலமானது 35 வருடங்களாகும்.
7. உள்ளூர் இறக்குமதி அல்லது உள்ளூர் ஏற்றுமதி மற்றும் பலநாடுகள் ஒன்றிணைந்த உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் ஆகியவற்றிற்கான இதுஅ இற்கான தண்டப்பண விகித பணக்கொடுப்பனவுகள் கேள்வி விண்ணப்பங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.
8. விலைமனுதாரரின் நிதி நிலைமையை உறுதி செய்வதற்காக விலைமனுதாரர் கீழே வழங்கப்பட்டுள்ள தகைமைகளுக்கான ஆகக்குறைந்த தகவுத்திறனை திருப்திப்படுத்தல் வேண்டும்.
   ஏ) தகுதிக்காக முன்னைய நிதி ஆண்டுகளில் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகளின் வருடாந்த வருமானது 15 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும். அதே காலப்பகுதிக்காக வெளிநாட்டு அமைப்புக்கள் வருடாந்த நிதிப்புரள்வாக 50 மில்லியன் அஐடொ ஐ கொண்டிருத்தல் வேண்டும். கூட்டு ஆதனங்களின் வருமானது கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் அறிக்கைகள் 15 பில்லியன் ரூபாவை விஞ்சினால் மாத்திரமே கூட்டு ஆதனங்கள் அனுமதிக்கப்படும்.
9. விலைமனுக்கள் பாதுகாப்பு முத்திரைக்குறி இடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “LEASE OF VALUABLE LAND AREA INSIDE THE PORT OF COLOMBO BELONGING TO SRI LANKA PORTS AUTHORITIES FOR THE PURPOSE OF INTERNATIONAL PORT RELATED SERVICE SUPPLY CENTER (Ref. No. SLPA/PREM/03/06/2024)” என குறிப்பிடப்பட்டு இடப்பரப்புக்கள் மற்றும் காணி அபிவிருத்தி பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடப்படல் வேண்டும்.

   **விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முகவரி:**
   பிரதான முகாமையாளர் (இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவம்),
   இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,
   5 ஆம் மாடி, தலைமையக கொழும்பு கட்டிடம்,
   இல. 464ஏ, T.B. ஜயா மாவத்தை
   கொழும்பு-10.
10. விலைமனுக்கள் 2024.07.23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2024.07.23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முன்மொழிவுகள் கேள்விச் சபையினால் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்மொழிவுகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
11. இது தொடர்பான மேலதிக விபரங்கள் 0711732275, 0716-848473 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பதில் கடமையாற்றும் பிரதி பிரதான முகாமையாளரிடமிருந்து (இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவம்) பெற்றுக் கொள்ளலாம்.
12. இந்த விலைமனுக்கோரல் செயற்பாட்டிற்கான எந்தவொரு நிகழ்வு தொடர்பாக எந்தவொரு சாராருக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவிற்கான எந்த கடப்பாட்டையும் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது ஏற்றுக் கொள்ளாது.

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted
For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/24/PT/03/055 | Spare parts for Isuzu 4JBI Engines | 15,000.00 | 1,000.00 | 2024.07.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/03/053 | Injector Pump spares for Mitsubishi S6S Engines of Mitsubishi/Caterpillar Forklifts | 20,000.00 | 1,000.00 | 2024.07.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்துசாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குனரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்படவிரும்பினால்,பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவுசெய்து உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுசான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் (பிசிஏ 03 படிவம்)
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பொருட்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 ஜூன் 14 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கிலமொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45,லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# பெறுகை அறிவித்தல்

**தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, பெருந்தெருக்கள் மற்றும் தகவல் அமைச்சு**

**மாகாண நிலையான அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் வீதி மற்றும் தகவல் அமைச்சு**

மாகாண நிலையான அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் உலக வங்கி செயற்றிட்டம் 2024இன் கீழ் செயற்படுத்தப்படும் கைத்தொழில்கள் 25 இற்காக 2024.05.29ம் திகதி தினமின, டெயிலி நியூஸ், தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பெறுகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்காணும் கைத்தொழிலின் மதிப்பிடப்பட்ட தொகை, கேள்விப் பிணை பெறுமதி, CIDA பதிவு கீழ்க்காணுமாறு திருத்தப்படுவதுடன், அவ் அறிவித்தலின் ஏனைய தகவல்கள் மாறுபட மாட்டாது.

| தொடர் இல. | செயற்றிட்ட இலக்கம் | பாடசாலை | வேலை விபரம் | மானிய நிதியிடல் | தேவைப்படும் CIDA பதிவு | மீளளிக்கப் படாத பிணை வைப்பு (ரூ) | கேள்விப் பிணை பெறுமதி (ரூ) | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 20 | H/C/24/05 | ஹ/ ஒகந்தயாய மா.வி | 60 + 20 கட்டிடம் நிர்மாணம் (1ம் கட்டம்) | உலக வங்கி | C7, C6 | 2500.00 | 47,000.00 | 4.6 |

**ரஞ்சித் யாப்பா,**
**பெறுகைக் குழுத் தலைவர்,**
**தென் மாகாண கல்வி அமைச்சு,**
**முதலாம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ காலி,**
**2024.06.13**

# GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

## PRESIDENTIAL SECRETARIAT - DECENTRALIZED CAPITAL BUDGET PROGRAMME (DCB)-2024

### DIVISIONAL SECRETARIAT-ERAVUR TOWN (BATTICALOA DISTRICT)

### NATIONAL COMPETITIVE BIDDING (GOODS)

### INVITATION FOR BIDS

The Chairman, Regional Procurement Committee (RPC) on behalf of the Presidential Secretariat invites sealed bids from eligible and qualified Bidders for the supply of goods described in the table below.

| Contract No. | Description of the Work | No. of Quantity | Allocated Amount (Rs.) | Bid Security / Validity | Non Refundable Bid Fee (Rs.) |
|---|---|---|---|---|---|
| ET/ACC/24/P/CDKC/01 | Supply, Installation, Service and Maintenance of Brand New and Branded Photocopy Machines | 11 | 2,666,000.00 | 26,660.00 & 10.09.2024 | 1,500.00 |
| | Supply, Installation of Brand New and Branded Desktop Computers | 7 | 1,590,000.00 | 15,900.00 & 10.09.2024 | 1,500.00 |

1. Bidding will be conducted through National Competitive Bidding procedure.
2. To be eligible for contract award, the successful Bidders shall have not been blacklisted and the Supplier should be registered their business for including goods to be supplied (Business Name Registration Certificate or Company Registration Certification should be annexed along with the bid).
3. Interested bidders may obtain further information from Procurement Entity namely "Divisional Secretary, Divisional Secretariat, Eravur Town" and inspect the bidding documents from 09.00 a.m. to 3.00 p.m. during office days.
4. Interested Bidders may purchase a complete set of bidding documents in English Language from Procurement Entity by submitting written request letter to the Divisional Secretary, Divisional Secretariat, Eravur Town from 13 June 2024 to 25 June 2024 (Office days) from 09.00 a.m. to 03.00 p.m. upon payment of a non-refundable fee specified in the list. The method of payment will be by cash or deposit to the official Bank Account No. 123100160000073 of People's Bank, Eravur.
5. Bids shall be submitted as original to the address below on or before 26 June, 2024 at 3.00 p.m. by registered post or directly in to Bid Box kept at Divisional Secretariat, Eravur Town along with the duplicate copy.
6. Bidder should write **"Supply, Installation, Service and Maintenance of Brand New and Branded Photocopy Machines"** & **"Supply, Installation of Brand New and Branded Desktop Computers"** on the top left-hand corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend.
7. All bids shall be accompanied by a Bid Security of the amount mentioned in the list.

**Mrs Nihara Moujood,**
**Chairman - RPC,**
**Divisional Secretariat,**
**Eravur Town.**
13.06.2024

**The address referred to above is :**
**Chairman,**
**Regional Procurement Committee**
**Divisional Secretariat, Eravur Town.**
**Tel : 065-2240938**
**Fax : 065-2240500**

# நீர்கொழும்பு மாநகர சபை

## கேள்வி அறிவித்தல்

நீர்கொழும்பு மாநகர சபையினால் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குத்தகைகளை 2024-07-01ஆம் திகதி முதல் 2025-12-31ஆம் திகதி வரையான 1 1/2 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக முத்திரையிடப்பட்ட இரு பிரதிகளுடனான கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை 01**

| தொ. இல. | குத்தகை | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வருடாந்தம்) ரூபா | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | விஸ்கிறீன் மாவத்தை மாட்டிறைச்சிக் கடை | 663,000.00 | 50,000.00 | 3,000.00 |
| 02 | முன்னக்கரய மாட்டிறைச்சிக் கடை | 654,000.00 | 50,000.00 | 3,000.00 |
| 03 | கொச்சிக்கடை மத்திய சந்தை மாட்டிறைச்சிக் கடை | 254,000.00 | 25,000.00 | 3,000.00 |
| 04 | கொச்சிக்கடை மத்திய சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 32,000.00 | 10,000.00 | 3,000.00 |
| 05 | கொச்சிக்கடை மத்திய சந்தை பன்றியிறைச்சிக் கடை | 210,000.00 | 25,000.00 | 3,000.00 |
| 06 | கீர்த்திசிங்க வீதி மாட்டிறைச்சிக் கடை | 270,000.00 | 25,000.00 | 3,000.00 |
| 07 | கீர்த்திசிங்க வீதி கோழியிறைச்சிக் கடை | 95,000.00 | 10,000.00 | 3,000.00 |

**அட்டவணை 02**

| தொ. இல. | குத்தகை | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (மாதாந்தம்) ரூபா | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | நீர்கொழும்பு மாநகர சபையினுள் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை | 15,000.00 | 25,000.00 | 3,000.00 |

**அட்டவணை 03**

| தொ. இல. | குத்தகையின் பெயர் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை ரூபா | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | CIB பின்புறமுள்ள தவறணைத் தோட்டக் காணி | (முழுக் காணிக்கும் ஒரு நாளைக்கு) 4,000.00 | 50,000.00 | 3,000.00 |
| 02 | நீர்கொழும்பு பிரதான பஸ் தரிப்பிடத்தில் பஸ் நிறுத்தக் கட்டணம் | (மாதாந்தம்) 700,000.00 8,400,000.00 | 50,000.00 | 3,000.00 |

| | | |
|---|---|---|
| **கேள்வி விண்ணப்பப்படிவ விநியோகம்** | - | **2024-06-13ஆம் திகதி முதல் 2024-06-27ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை நீர்கொழும்பு மாநகர சபையின் கணக்காளர் பிரிவில்** |
| **கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படுதல்** | - | **2024-06-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இந்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.** |
| **கேள்விப் படிவங்களைத் திறத்தல்** | - | **2024-06-28ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு** |

**நிபந்தனைகள்**

01. சகல கேள்விகளும் அவைகளை குத்தகைக்கு வழங்கும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு சட்டபூர்வமாக செல்லுபடியாகும். முதலாம் வருடத்திற்காக செலுத்தும் கேள்வித் தொகையின் 5% அதிகரிப்பு சகிதம் எதிர்வரும் 06 மாதத்திற்கான கேள்விக் கட்டணமாக அறவிடப்படும்.
02. இலங்கைப் பிரஜைகள் மட்டுமே விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
03. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
04. மாதிரிப் படிவக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையைச் செலுத்தியதன் பின்னரே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். விண்ணப்பத்துடன் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
05. கேள்விப் பிணை வைப்புத் தொகையைத் தவிர ஏனைய அனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட வரியைச் செலுத்துதல் வேண்டும்.
06. 01ஆம் மற்றும் 03ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகைகளுக்காக வெற்றிகரமான கேள்விதாரர் சபையினால் எழுத்துமூலம் அறிவிக்கப்படும் நாளில் அல்லது அதற்கு முன் மொத்தக் குத்தகைத் தொகையின் 25% பிணை வைப்புத் தொகை மற்றும் அதற்குரித்தான அரசாங்கத்தின் சகல வரித் தொகைகளையும் ஒரே தடவையில் செலுத்தி சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ள வேண்டும்.
07. 02ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகைகளுக்காக வெற்றிகரமான கேள்விதாரர் சபையினால் எழுத்துமூலம் அறிவிக்கப்படும் நாளில் அல்லது அதற்கு முன் 06 மாத வாடகைத் தொகையை வைப்பொன்றாக ஆரம்பத்திலேயே ஒரே தடவையில் செலுத்தி சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ள வேண்டும் என்பதுடன் ஏதாவது இழப்பு/நட்டம் ஏற்பட்டால் வைப்புத் தொகையிலிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு கட்டுப்படல் வேண்டும்.
08. 03ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சபை ஆதனத்திற்காக கேள்விப் பெறுமதி 1000000.00 ரூபாவிற்கு மேல் கேள்விகளைச் சமர்ப்பிக்கும்போது, கேள்வித் தொகையின் 03 மாதத்திற்குச் சமமான மற்றும் ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும் மாநகர ஆணையாளரின் பெயரில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட வங்கிப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
09. கேள்விப் படிவத்தில் விலைகளை எழுத்திலும் இலக்கத்திலும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பின்னர் விலைகளில் மாற்றத்தை ஏற்படுத்தினால் ஒற்றைக் கோட்டினால் வெட்டி விண்ணப்பத்தில் கையொப்பமிட்டு உறுதி செய்திருத்தல் வேண்டும். மாற்றப்பட்ட விலைகளை பிழையின்றி தெளிவாக எழுத்திலும் இலக்கத்திலும் எழுதியிருத்தல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
10. உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது சபையினால் வழங்கப்படும் மாதிரிப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து வைப்புப் பற்றுச்சீட்டின் பிரதியொன்றுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் மற்றும் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியெனக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு எனும் முகவரிக்கு 2024-06-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
11. கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூல அனுமதி வழங்கப்பட்ட ஒருவர் கலந்து கொள்ளலாம்.
12. எந்தவொரு நியாயமான காரணமும் இன்றி வெற்றிகரமான கேள்விதாரரினால் கேள்வி நிராகரிக்கப்பட்டால் அவரது கேள்வி வைப்புத் தொகை மற்றும் வங்கி பிணை முறி சபைக்குரித்தாக்கப்பட்டு தகுதிநீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படுத்தப்படும்.
13. இந்த கேள்வி தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை மாநகர ஆணையாளர் தன்னகத்தே கொண்டுள்ளார். மேலதிக விபரங்களை மாநகர கணக்காளரிடமிருந்து (031-2281987) அறிந்துகொள்ளலாம்.

**மாநகர ஆணையாளர்,**
**நீர்கொழும்பு மாநகர சபை அலுவலகத்தில்.**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**
**2024-06-11ஆம் திகதி.**





## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி இன் பின்வரும் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகளை வாடிக்கையாளர் சார்பாக எமது நிறுவனத்தால் இல.123, ஒராபிபாஷா மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப 9.30 - பி.ப 2.00 வரை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 02/03/2024 | 01/04/2024 | 26th & 27th June 2024 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ∴பினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ∴பினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஒரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

## பொது அறிவித்தல் நீதிமன்ற கட்டளை மற்றும் முடிவுறுத்துனர் நியமனம்

கம்பனியின் பெயர்: எம் ரி டி வோக்கர்ஸ் பிஎல்சி
பதிவிலக்கம் : PQ 80
பதிவு அலுவலகத்தின் முகவரி: இல. 18, புனித மைக்கேல் வீதி, கொழும்பு-03.
வழக்கு இல.: CHC/87/2019/CO
முடிவுறுத்தும் கட்டளைத் திகதி : 2024 ஏப்ரல் 30
நீதிமன்றம் வர்த்தக மேல் நீதிமன்றம்
முடிவுறுத்துனரின் நியமனத் திகதி: 2024 மே 29
முடிவுறுத்துனருக்கு வழங்கப்படும் அறிவித்தலின் திகதி 2024 மே 29
முடிவுறுத்துனரின் பெயர் கெட்டவ கண்டகே சுதத் குமார்
முடிவுறுத்துனரின் முகவரி: இல. 46, லும்பினி மாவத்தை, தலுகம, களனி
முடிவுறுத்துனரின் அலுவலக முகவரி: 3 ஆம் மாடி, யத்தம கட்டிடம், இல. 142, காலி வீதி, கொழும்பு-03.

## மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

வ/ப வயம்ப கூட்டுறவு கிராமிய வங்கி சங்கத்தின் அடகுப் பிரதிநிதிகளான வ/ப - சிலாபம் பலநோக்குக் சுட்டுறவுச் சங்கத்தின், அம்பகந்தவில, வெல்ல, வெலிஹேன, தினபொல, ஜயபிம, முகுனுவட்டவன, முன்னேஷ்வரம், குமாரகட்டுவ, பங்கதெனிய, சிலாபம், மானுவன்கம

கிளைகளில் 2023.03.31ம் திகதியும் உட்பட அத்தினம் வரை அடகு வைக்கப்பட்டு, 2024.07.05 வரை மீட்கப்படாத தங்க நகைகள் 2024.07.07 (ஞாயிறு) தினம் மு.ப. 9.30 முதல் வ/ப - சிலாபம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**கூட்டுறவாளர்,**
**பொது முகாமையளர்,**
**வ/ப - சிலாபம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**இல. 41, கொழும்பு வீதி, சிலாபம்,**
**தொ.பே. இல, 032-2222364**

The Housewives' companion
Classifieds on
Daily News

## அறிவித்தல்

### விலைக்கோரலுக்கான அழைப்பு

## இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

**கேள்வியின் பெயர்** : **ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்**
**கேள்வி இல.** : **KA/ADM/PROC/2024(08)**

இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தின் களுத்துறை கிளை அலுவலகப் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகையில் 2024/2026 வருடங்களுக்காக ஜெனிட்டோரியல் சேவைகளைப் பெற்றுக்கொள்வற்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| சேவை இடம் | முகவரி | பணியாளர் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | பெண் | ஆண் |
| கிளை அலுவலகம் - களுத்துறை | இல. 14/1, ஞானோதய மாவத்தை, களுத்துறை தெற்கு | 02 | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் - களுத்துறை | இல. 31/2, காலி வீதி, மஹவஸ்கடுவ, வஸ்கடுவ | - | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் - பயாகல | இல. 196, காலி வீதி, பயாகல | 01 | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் - அலுத்கம | இல. 126, களுவா மோதர, காலி வீதி, அலுத்கம | 01 | 01 |
| பிரதிப் பொது முகாமையாளர் (செயற்பாட்டு தெற்கு) அலுவலகம், களுத்துறை வடக்கு | இல. 30/1, வடக்கு சுமங்கள வீதி, களுத்துறை வடக்கு | 01 | - |

01. எதிர்பார்க்கப்படும் சேவைக் காலம் விலைக்கோரல் கையளிக்கப்படும் நாள் முதல் இரண்டு வருடங்களாகும்.
02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறை மூலம் விலைனுக்கள் கோரப்படும்.
03. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை களுத்துறை தெற்கு, ஞானோதய மாவத்தை, 14/1 இலக்கத்தில் அமைந்துள்ள களுத்துறை தெற்கு கிளை அலுவலகத்தில் இன்று முதல் 07 நாட்களுக்குள் வேலை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.30 மணி வரை) விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. மீளளிக்கப்படாத 1,500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தியதன் பின் விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை களுத்துறை தெற்கு கிளை அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யலாம். குறித்த கட்டணத்தை களுத்துறை கிளை அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
05. விலைமனுக்களை 2024-07-04ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கிளை அலுவலகத்திற்கு நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
06. விலைக்கோரல்கள் 2024-07-04ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு கிளை அலுவலகத்தின் பெறுகைக் குழுவினால் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
07. விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாள் முதல் 60 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (பதில் பொதுமுகாமையாளர்),**
**இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,**
**கிளை அலுவலகம், களுத்துறை,**
**இல. 14/1, ஞானோதய மாவத்தை,**
**களுத்துறை தெற்கு.**
**034-2223764**

## கொழும்பு மாநகர சபை

### விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ME/ME/DR/96/2024 | வெள்ளவத்தை பம்பி நிலையத்தில் இரண்டு CMC பம்பிகளை நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் | 5,900.00 | 1000,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | EM1 CIDA தரத்தைக் கொண்ட நீர்க்குழாய் மற்றும் வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (திட்டங்கள்) தொலைபேசி: 011-2692403 |
| 02 | ME/ME/ML/23/2024 | ஹைலெவல் வீதி சந்தி / பேஸ்லைன் வீதியில் மோட்டார் போக்குவரத்து சமிஞ்ஞைகளை வழங்குதல், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்கான கேள்வி | 5,900.00 | 320,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | வெற்றிகரமான விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாதிருத்தல் வேண்டும் மற்றும் கடந்த ஐந்து வருட காலத்தினுள் குறைந்தபட்சம் 09 மாதங்கள் இதனையொத்த திட்டங்களில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். | பொறியியல் பணிப்பாளர் (TDRS) தொலைபேசி: 011-2694593 |
| 03 | ME/ME/DR/29/2024 | ராஜகுரு ஶ்ரீ சுபுதி வீதி, தனியார் வீதி, காலி வீதி மற்றும் ரொக்ஸி கார்டனில் CMF 09 இல் தெரிவு செய்யப்பட்ட அமைவிடங்களின் Spot திருத்தவேலைகள் - கட்டம் 2 | 5,900.00 | 12,000,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | C 01 CIDA தரத்தைக் கொண்ட நீர் வழங்கல் மற்றும் சாக்கடை ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (திட்டங்கள்) தொலைபேசி: 011-2692403 |

**விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.**

**முறை 01 -** கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.
   அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.
   ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.
   - வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு-06.
   - சகல வட்டார அலுவலகங்கள்

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.
   1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
   2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 -** நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2024-07-03ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

   அ) கொடுப்பனவுகளை 2024-07-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் மேற்கொள்ளுதல் வேண்டும்.
   ஆ) நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2025.01.30ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2024.12.31ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024-07-04ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2024-07-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. "வெள்ளவத்தை பம்பி நிலையத்தில் இரண்டு CMC பம்பிகளை நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்" திட்டத்திற்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-06-24ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு-10, மாளிகாகந்த, வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவில் இடம்பெறும்.

ஊ. "ராஜகுரு ஶ்ரீ சுபுதி வீதி, தனியார் வீதி, காலி வீதி மற்றும் ரொக்ஸி கார்டனில் CMF 09 இல் தெரிவு செய்யப்பட்ட அமைவிடங்களின் Spot திருத்தவேலைகள் - கட்டம் 2" திட்டத்திற்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-06-25ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு-10, மாளிகாகந்த, வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவில் இடம்பெறும்.

எ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களுக்கு விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

## விலைமனுக் கோரல்

### நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

### நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கெ.0ாள்கைகள் அமைச்சின் சுத்திகரிப்பு சேவைக்கான விலைமனுக்கோரல்

01. கொழும்பு 01, லோட்டஸ் வீதியில் அமைந்துள்ள தளமாடி உள்ளிட்ட 05 மாடிகளைக்கொண்ட நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பழைய கட்டடம் மற்றும் கீழ்த்தளமாடி மற்றும் மேல்தளமாடி உள்ளிட்ட 07 மாடிகளைக் கொண்ட புதிய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கட்டிடத்திற்காக சுத்திகரிப்புச் சேவை 2024/2025 ஆம் ஆண்டுகளில் ஒரு வருட காலத்தில் (2024.07.22 ஆம் திகதி முதல் 2025.07.21 ஆம் திகதி வரை) நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டிக்குரிய விலைமனுக் கோரலின் கீழ் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்கின்ற விலைமனுதாரர்களிடமிருந்து மாத்திரம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் பொருட்டு அமைச்சின் சிறிய அளவு பெறுகைக் குழுவின் தலைவரினால் 2024.07.04 ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

    இதற்காக தாங்கள் பூர்த்தி செய்யவேண்டிய அடிப்படைத்தகைமைகள் பின்வருமாறு.

    (I) வியாபாரத்தின் பெயரைப் பதிவுசெய்யும் கட்டளைச்சட்டத்தின் கீழ் அல்லது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல்.

    (II) அரசாங்க/ கூட்டுத்தாபனத் துறையில் சுத்திகரிப்பு சேவை வழங்கல் தொடர்பில் குறைந்தபட்சம் 03 வருட அனுபவம் (குறைந்தபட்சம் ஒரு நிறுவனத்தில் அல்லது 30 ஊழியர்களை ஈடுபடுத்தியிருத்தல் வேண்டும்)

    (III) குறைந்தபட்சம் 100 தொழிலாளர்களைக் கொண்ட தொழிலாளர் குழுவொன்று இருக்கவேண்டிய அதேவேளையில் சொல்லப்பட்ட தொழிலாளர்களுக்கு கடந்த 12 மாதங்களுக்குள் அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு பங்களிப்புத் தொகையை செலுத்தியுள்ளது என்பதனை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(**கவனிக்கவும்:-** விண்ணப்பப் படிவத்துடன் மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமைக்கான சான்று ஆவணங்களின்/ சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட நகல்பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

02. விலைமனுக் கோரல் ஆவணங்களில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளவாறு விலைமனு முறி மற்றும் ஏனைய ஆவணங்களை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. இதற்காக திருப்பிச் செலுத்தப்படாத ரூபா 3,500.00 தொகையை செயலாளர் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் பெயரில் எழுத்துமூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பித்ததன் பின்னர், 2024.06.13 ஆம் திகதி முதல் 2024.07.03 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரை மேற்குறிப்பிட்ட முகவரியில் அமைந்துள்ள நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் புதிய கட்டடத்தில் மேல்தளமாடியில் அமைந்துள்ள கணக்குப் பிரிவில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். அதேபோன்று தங்களுக்கு விலைமனு ஆவணங்களை பரிசீலனை செய்துபார்க்க வேண்டிய தேவையிருந்தால் அதற்கும் மேற்குறிப்பிட்ட திகதிகளில் அதனை இலவசமாக பரிசீலனை செய்து பார்க்கமுடியும்.
04. விலைமனுதாரர் தமது விலைமனுக்களுடன் ரூபா 300,000.00 தொகையை இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்துள்ள வணிக வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுப் பிணையை/ வங்கிப் பிணையொன்றை அல்லது அந்தப்பெறுமதிக்கு திருப்பிச் செலுத்தப்படுகின்ற விலைமனு வைப்புத் தொகையை "நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளர்" இன் பெயரில் வைப்புச் செய்வதற்காக அமைச்சின் கணக்குப்பிரிவில் உள்ள சிறாப்பரின் கொடுப்பனவுக் கருமபீடத்தில் அந்தத் தொகையை செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். விலைமனுப் பிணையானது, விலைமனுவை திறக்கும் திகதியிலிருந்து நூற்றி இருபது (120) கலன்டர் நாட்கள் வரை (அதாவது 2024.11.01 ஆம் திகதி வரை) செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
05. உரிய விதத்தில் பூர்த்திசெய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை விலைமனுக்களை பொறுப்பேற்கும் உரிய நேரம் முடிவடைவதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் புதிய கட்டடத்தில் மேல்தளமாடியில் உள்ள கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விமனுப் பெட்டியில் போடுதல் அல்லது 2024.07.04ஆம் திகதியன்று பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பிரதான கணக்காளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, லோட்டஸ் வீதி, கொழும்பு 01 எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப முடியும். விலைகளை சமர்ப்பிக்கின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சில் சுத்திகரிப்பு சேவைக்கான விலைகள்" என குறிப்பிடுதல் வேண்டும்.
06. விலைமனுக்களுக்கு முன்னரான கலந்துரையாடலொன்று 2024.06.24 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கணக்குப்பிரிவில் இடம்பெறும்.
07. விலைமனுக்களை பொறுப்பேற்பது முடிவடைந்தவுடன் அதாவது, 2024.07.04 ஆம் திகதியன்று பி.ப 2.00 மணிக்கு திறைசேரியின் புதிய கட்டடத்தில் மேல்தளமாடியிலுள்ள கணக்குப்பிரிவில் இடம்பெறவுள்ள விலைமனுக்களைத் திறக்கும் நிகழ்வுக்கு விலைமனுதாரர்களுக்கு அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகளுக்கு மாத்திரம் பங்குபற்ற முடியும்.
08. விலைமனுக்கோரல் ஆவணங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் தேவையாயின் கணக்காளரிடம் (வழங்கல்) 011-2484538/ 011-2484600 (நீடிப்பு- 1430/ 4109) பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர், அமைச்சின் சிறியளவு பெறுகைக் குழு,**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, கொழும்பு 01**

# மழை குறுக்கிட்டதால் இலங்கையின் உலகக் கிண்ண கனவு தகர்ந்தது

## தென்னாபிரிக்கா முதல் அணியாக அடுத்த சுற்றில்



கடும் மழை மற்றும் மைதானத்தில் நீர் நிரம்பியதை அடுத்து புளோரிடாவில் நேற்று (இலங்கை நேரப்படி) நடைபெறவிருந்த நேபாளத்திற்கு எதிரான போட்டி கைவிடப்பட்டதை அடுத்து இலங்கை அணியின் டி20 உலகக் கிண்ண எதிர்பார்ப்பு கிட்டத்தட்ட பறிபோயுள்ளது.

இதனையடுத்து டி குழுவில் முதல் மூன்று போட்டிகளிலும் வெற்றியீட்டி அந்தக் குழுவில் முன்னிலை பெற்றுள்ள தென்னாபிரிக்க அணி தொடரில் முதல் அணியாக சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேற்றம் கண்டது.

பிராந்தியத்தில் வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நிலையில் புளோரிடாவில் கடும் மழை பொழிந்தது. மழை சற்று தணிந்ததை அடுத்து மைதானப் பணியாளர்கள் போட்டிக்காக மைதானத்தை தயார் செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர்.

மத்திய புரோவாட் மைதானத்தில் மழைக்கு மத்தியிலும் கணிசமான நேபாள ரசிகர்கள் கூடியிருந்தபோதும் அங்கு தேங்கி இருக்கும் நீரை அகற்றும் முயற்சி வெற்றி அளிக்காத நிலையில் போட்டியை கைவிட்டு இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி பகிர்ந்தளிக்கப்பட்டது.

இலங்கை அணி ஏற்கனவே தனது முதல் இரு போட்டிகளிலும் தென்னாபிரிக்கா மற்றும் பங்களாதேஷ் அணிகளிடம் தோற்ற நிலையில் அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பு பொரும்பாலும் பறிபோயுள்ளது.

இலங்கை அணி தற்போது சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேற வேண்டுமாயின் இன்று (13) கிங்ஸ்டவுனில் நடைபெறவுள்ள பங்களாதேஷ் எதிர் நெதர்லாந்து இடையிலான போட்டி மழையால் கைவிடப்பட்டு, தொடர்ந்து இலங்கை அணி ஜூன் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள தனது கடைசி குழு நிலைப் போட்டியான நெதர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும்.

அதேபோன்று ஜூன் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டியில் தென்னாபிரிக்க அணி நேபாளத்திற்கு எதிராக பெரும் வெற்றியை பெற வேண்டும். பின்னர் ஜூன் 16 ஆம் திகதி நடைபெறும் போட்டியில் நேபாள அணி பங்களாதேஷ் அணியை குறுகிய இடைவெளியில் வீழ்த்த வேண்டும்.

இதேவேளை புளோரிடாவின் லோடர்ஹில்லில் சீரற்ற காலநிலை தொடரும் நிலையில் அங்கு நடைபெறவுள்ள எஞ்சிய போட்டிகளுக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இங்கு ஜூன் 14 ஆம் திகதி ஏ குழுவுக்காக அமெரிக்கா மற்றும் அயர்லாந்து அணிகளும், ஜூன் 15 இல் கனடா மற்றும் இந்திய அணிகளும், ஜூன் 16 ஆம் திகதி அயர்லாந்து எதிர் பாகிஸ்தான் அணிகளும் மோதவுள்ளன. இங்கு இந்த வாரம் முழுவதும் மழை பொழியும் என்று முன்னறிவிப்புச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலகு வெற்றியுடன் அடுத்த சுற்றுக்கு ஆஸி. முன்னேற்றம்



நமீபியாவுக்கு எதிரான டி20 உலகக் கிண்ணத்தின் பி குழுவுக்கான போட்டியில் 9 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டிய அவுஸ்திரேலிய அணி சுப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

அன்டிகுவாவில் இலங்கை நேரப்படி நேற்று (12) நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட நமீபிய அணியை 72 ஓட்டங்களுக்கே சுருட்ட அவுஸ்திரேலியாவால் முடிந்தது. அடம் சம்பா 12 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தி டி20 போட்டிகளில் 100 விக்கெட்டுகளைத் தொட்டார்.

பதிலெடுத்தாடிய ஆஸி. அணி 5.4 ஓவர்களிலேயே ஒரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. இதன்படி பி குழுவில் 3 போட்டிகளிலும் வெற்றியீட்டிய ஆஸி. அடுத்த சுற்றுக்கு முன்னேறியதோடு அந்தக் குழுவில் இருக்கும் நடப்புச் சம்பியன் இங்கிலாந்து வெறுமனே ஒரு புள்ளியுடன் முதல் சுற்றுடன் வெளியேறும் நெருக்கடியை சந்தித்துள்ளது.

# இலங்கைக்கு மீண்டும் தோல்வி



புரூணை அணிக்கு எதிரான இரண்டாவது நட்புறவுப் போட்டியிலும் இலங்கை கால்பந்து அணி 0–1 என்ற கோல் கணக்கில் தோல்வியை சந்தித்தது.

புரூணை தலைநகரில் உள்ள ஹசனல் பொல்கியா மைதானத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற போட்டியில் 36 ஆவது நிமிடத்தில் புரூணை அணித் தலைவர் முஹ்த் ஹசன் கோல் புகுத்தினார்.

இதில் புரூணை அணி வீரர் இன்டேரா புட்டேரா 61 ஆவது நிமிடத்தில் சிவப்பு அட்டை பெற்று வெளியேற்றப்பட்ட நிலையில் அந்த அணி 10 வீரர்களுடன் ஆடியபோதும் இலங்கையால் கடைசி வரை பதில் கோல் ஒன்றை திருப்ப முடியாமல்போனது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டியிலும் புரூணை 1–0 என வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

குவைட்

# வெளிநாட்டு தொழிலாளர் வசிக்கும் கட்டடத்தில் தீ: 41 பேர் உயிரிழப்பு



குவைட்டில் புலம்பெயர் தொழிலாளர்கள் வசிக்கும் கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீயில் குறைந்தது 41 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தெற்கு மன்காப் மாவட்டத்தில் நேற்றுக் (12) காலை ஏற்பட்ட இந்தத் தீயில் மேலும் பலர் காயமடைந்திருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தீ ஏற்பட்ட பகுதி வெளிநாட்டு தொழிலாளர்கள் செறிந்து வசிக்கும் இடமாகும். எனினும் கொல்லப்பட்டவர்கள் விபரம் உடன் வெளியாகவில்லை.

தமது நாட்டவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக குவைட்டுக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

விபத்து இடம்பெற்ற பகுதிக்கு வந்த பிரதி பிரதமர் ஷெய்க் பஹத் அல் யூசுப், கட்டடத்தின் உரிமையாளரை கைது செய்யும்படி உத்தரவிட்டார். 'துரதிருஷ்டவசமாக சொத்து உரிமையாளர்களின் பேராசை இதற்கு வழிவகுத்திருக்கிறது' என்று உள்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சராகவும் இருக்கும் பஹத் அல் யூசுப் குறிப்பிட்டார்.

தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் தீ பரவுவதற்கான காரணம் பற்றி விசாரணை நடத்தி வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆறு மாடிகள் கொண்ட இந்தக் கட்டடத்தில் சுமார் 200 வெளிநாட்டு பணியாளர்கள் தங்கி இருப்பதாக கூறப்படுகிறது. கட்டடத்தின் வெளிப்பகுதி தீயால் கருகியுள்ள படங்கள் வெளியாகியுள்ளன.

எண்ணெய் வளம் கொண்ட குவைட்டில் பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டு தொழிலாளர்கள் இருப்பதோடு இவர்களில் பெரும்பாலானவர்கள் தென் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாட்டவர்களாவர்.

இவர்கள் நிர்மாணம் அல்லது சேவை தொழில்துறைகளிலேயே அதிகம் ஈடுபட்டுள்ளனர்.

தீ தரைத்தளத்தில் ஏற்பட்டதை அடுத்து எழுந்த புகையால் கட்டடத்தில் இருப்பவர்கள் மூச்சுத்திணறலால் பாதிக்கப்பட்டிருப்பதாக தீயணைப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# அமெ. ஜனாதிபதி பைடனின் மகன் குற்றவாளியாக தீர்ப்பு



துப்பாக்கி வைத்திருந்த வழக்கில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மகன் ஹன்டர் பைடன் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்ததை அடுத்து நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பை மதிப்பதாக பைடன் தெரிவித்துள்ளார்.

2018 இல் போதைப்பொருள் பயனப்படுத்துவதை மறைத்து துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே 54 வயதான ஹன்டர் பைடன் குற்றவாளி என 12 பேர் அடங்கிய நீதிபதிகள் குழாம் தீர்ப்பளித்துள்ளது. இதனால் அவர் சிறைத் தண்டனையை எதிர்கொள்ள வாய்ப்பு உள்ளது.

பதவியில் இருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஒருவரின் பிள்ளை குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

டெல்வாரில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் பைடன் பங்கேற்காதபோதும் முதல் பெண்மணி ஜில் பைடன் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

எனினும் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் டெல்வார் புறப்பட்டுச் சென்ற பைடன், மகனை கட்டித்தழுவி ஆறுதல் வழங்கினார்.

'நான் ஜனாதிபதியாக இருந்தாலும், ஒரு தந்தையாவேன். ஜில் மற்றும் நான் எமது மகனை நேசிப்பதோடு இன்று அவர் இருக்கும் நிலைமையை இட்டு பெருமை அடைகிறோம்' என்று பைடன் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'இந்த வழக்கின் தீர்ப்பை ஏற்பதோடு ஹன்டர் மேல்முறையீடு செய்ய திட்டமிட்டிருக்கும் நிலையில் நீதித்துறை செயற்பாடுகளை தொடர்ந்து மதிக்கிறேன்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச செய்திகள்

# காசா போர் நிறுத்தத் திட்டத்திற்கு பதில் அளித்தது ஹமாஸ் அமைப்பு

## அமெரிக்கா பரிசீலனை: பிளிங்கன் கட்டார் விரைவு

அமெரிக்க ஆதரவு போர் நிறுத்தத் திட்டத்திற்கு ஹமாஸ் அமைப்பு தனது பதிலை அளித்ததை அடுத்து அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் முக்கிய மத்தியஸ்தராக செயற்படும் கட்டாருக்கு நேற்று பயணமானார்.

போர் நிறுத்த முயற்சியாக பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் பிளிங்கன் கட்டார் தலைவரை சந்தித்து பேசவுள்ளார். பலஸ்தீன போராட்ட அமைப்புடனான செய்தி பரிமாற்றத்தில் கட்டார் நடுநிலை வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மே 31 ஆம் திகதி ஜோ பைடனால் அறிவிக்கப்பட்டு கடந்த திங்களன்று பாதுகாப்புச் சபையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தத் திட்டத்திற்கு ஹமாஸ் மற்றும் சிறிய போராட்டக் குழுவான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு பதிலளித்திருப்பதாக எகிப்து மற்றும் கட்டார் மத்தியஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இந்த இரு அமைப்புகளும் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பில், உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கான சாதகமான நிலைப்பாட்டில் இருப்பதாகவும், காசாவில் இஸ்ரேல் தற்போது முன்னெடுத்து வரும் தாக்குதல்களை 'முற்றாக நிறுத்துவதற்கே முன்னுரிமை அளிக்கப்படும்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

லெபனானின் அல் மயாதீன் தொலைக்காட்சியில் பேசிய ஹமாஸ் மூத்த அதிகாரியான ஒசாமா ஹம்தான், 'முன்மொழிவில் சில கருத்துகளை மத்தியஸ்தர்களுக்கு முன்வைத்தோம்' என்று குறிப்பிட்டார். எனினும் அந்த விபரத்தை அவர் வெளியிடவில்லை.

'எந்த ஓர் உடன்படிக்கையும் எமது மக்கள் மீதான சியோனிஸவாதிகளின் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவருவது, இஸ்ரேலிய படைகளை வெளியேற்றுவது, காசாவின் மீள் கட்டுமானம் மற்றும் கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கை ஆகிய அமைப்பின் நிலைப்பாட்டை உறுதி செய்வதாகவே ஹமாஸின் பதில் உள்ளது' என்று ஹமாஸ் அதிகாரி ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

கட்டார் மற்றும் எகிப்து வெளியுறவு அமைச்சுகள் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பில், இந்த பதிலை ஆராய்ந்து வருவதாகவும், உடன்படிக்கை ஒன்று எட்டப்படும் வரை அமெரிக்காவுடன் சேர்ந்து தமது மத்தியஸ்த முயற்சிகளை தொடர்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு இந்த பதில் கிடைத்திருப்பதாகவும் அது மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு பேச்சாளர் ஜோன் கிர்பி குறிப்பிட்டுள்ளார்.

'ஹமாஸ் பதில் ஊடாக நாம் எமது வழியில் பணியாற்றுவோம்' என்று கிர்பி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



### உறுதியான பதில்

மத்தியஸ்தர்கள் ஊடாக ஹமாஸின் பதில் கிடைத்திருப்பதாக பெயர் குறிப்பிடாத இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் ஹமாஸ் தனது பதிலில் பிரதானமான மற்றும் மிகவும் அர்த்தபூர்வமான விடயங்களில் மாற்றங்கள் செய்திருப்பதாகவும் ஜனாதிபதி பைடனால் முன்வைக்கப்பட்டிருந்த பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான முன்மொழிவு ஒன்றை நிராகரித்திருப்பதாகவும் அந்த அதிகாரி கூறியதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஹமாஸ் அளித்திருக்கும் பதில் தொடர்பான விபரத்தை லெபனானின் அல் அக்பார் பத்திரிகை வெளியிட்டுள்ளது. அதில் 42 நாட்களைக் கொண்ட முதல் கட்ட போர் நிறுத்த முடிவில் தற்காலிக போர் நிறுத்தம் நிரந்தர போர்நிறுத்தமாக மாற்றப்பட வேண்டும் என்றும் இஸ்ரேலிய துருப்புகள் முற்றாக காசாவில் இருந்து வாபஸ் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தற்காலிக போர் நிறுத்தம் ஒன்று செற்படுத்தப்படும் முதல் கட்டத்தின் முதல் நாளில் இஸ்ரேலிய துருப்புகள் மக்கள் வசிக்கும் பகுதிகளில் இருந்து வாபஸ் பெற வேண்டும் என்பதோடு மூன்றாவது நாளில் எகிப்துடனான ரபா எல்லைக் கடவையில் இருந்து வெளியேற வேண்டும் என்று ஹமாஸின் பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைதிகள் பரிமாற்றம் தொடர்பில் ஹமாஸ் கூறியிருப்பதாவது, முதல் கட்டத்தில் 33 இஸ்ரேலியப் பணயக்கைதிகள் பிணமாக அல்லது உயிரோடு விடுவிப்பதோடு ஏழாவது நாளில் இஸ்ரேல் காசாவில் இருந்து முழுமையாக வாபஸ் பெறுவதை உறுதி செய்யாவிட்டால் பணயக்கைதிகளை விடுவிப்பதை நிறுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

ரஷ்யா, சீனா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளை உத்தரவாதம் அளிப்பவர்களாக சேர்க்க வேண்டும் என்றும் ஹமாஸ் தனது பதிலில் கேட்டுள்ளது.

மூன்று கட்டத் திட்டமாக பைடன் முன்வைத்த போர் நிறுத்த முன்மொழிவில், முதல் கட்டமாக ஆறு வாரம் போர் நிறுத்தம் ஒன்றையும் காசாவில் மக்கள் வசிக்கும் பகுதிகளில் இருந்து இஸ்ரேலியப் படை வாபஸ் பெறுவதற்கும் பரிந்துரைக்கப்பட்டதோடு பேச்சுவார்த்தையாளர் நிரத்தர போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்காக அந்த போர் நிறுத்தம் நீடிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஹமாஸ் வழங்கி இருக்கும் பதிலில் இந்தத் திட்டத்தில் திருத்தங்கள் செய்திருப்பதாக நெருங்கிய வட்டாரங்களை மேற்கோள்காட்டி அல் ஜசீரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக நீடித்து வரும் காசா போரை நிறுத்துவதற்கு பைடன் நிர்வாகத்திற்கு அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. இந்த ஆண்டு கடைசியில் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவிருக்கும் பைடனுக்கு தனது ஜனநாயகக் கட்சிக்குள் இருந்து எதிர்ப்புகள் வலுத்து வருகின்றன.

இந்நிலையில் இந்தப் போர் நிறுத்தத் திட்டத்தை இஸ்ரேல் ஏற்பதாக அமெரிக்கா குறிப்பிட்டபோதும், இஸ்ரேல் இதனை வெளிப்படையாக இன்னும் அறிவிக்கவில்லை. அது காசாவில் தொடர்ந்து உக்கிர தாக்குதல்களை நடத்தி வருவதோடு, ஹமாஸ் ஒழிக்கப்படும் வரை காசாவில் போர் நடவடிக்கையை நிறுத்தப்போவதில்லை என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தொடர்ந்து கூறி வருகிறார்.

காசாவில் நேற்றும் பல பகுதிகளில் இஸ்ரேலின் சரமாரித் தாக்குதல்கள் நீடித்ததோடு பலரும் கொல்லப்பட்டுள்ளனர். காசா நகரின் தென் பகுதியில் அல் அப்ரார் பள்ளிவாசலுக்கு அருகில் உள்ள அஸ்ஸாம் குடும்பத்திற்கு சொந்தமாக வீட்டை இலக்கு வைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் குறைந்தது ஆறு பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செம்பிறை சங்கம் தெரிவித்துள்ளது.

தவிர தெற்கு நகரான ரபாவின் மத்திய மற்றும் மேற்குப் பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய பீரங்கி தாக்குதல்களில் பலரும் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

நேற்று அதிகாலையில் காசா நகரின் கிழக்கே அல் ஷுஜையா பகுதியில் உள்ள அல் பயூமி குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீது இடம்பெற்ற ஏவுகணை தாக்குதல்களில் ஏழு பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் அல் ஷபூரா அகதி முகாமில் உள்ள பல வீடுகள் இருக்கும் குடியிருப்பு தொகுதி ஒன்றை இஸ்ரேலிய படை நேற்று வெடி வைத்து தகர்த்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ரபாவில் பலஸ்தீன போராளிகளுடன் கடுமையாக சண்டையிட்டு வரும் இஸ்ரேலிய துருப்புகள் அங்கு சனநெரிசல் மிக்க பகுதியை நோக்கி முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசாவில் தொடரும் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை 37 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

இதேவேளை ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் நகருக்கு அருகில் உள்ள கிராமம் ஒன்றில் இஸ்ரேலிய படை நடத்திய சுற்றிவளைப்பில் ஆறு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை கிராமத்திற்குள் நுழைந்த இஸ்ரேலியப் படை வீடு ஒன்றை முற்றுகையிட்டு அதன் மீது செல் குண்டுகளை வீசியதாக வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபரில் காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் இஸ்ரேலால் 133 சிறுவர்கள் உட்பட 544 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 13ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.